
உலகை மாற்றிய ஐந்து புத்தகங்களில் ஒன்று
சிக்மன்ட் ஃப்ராய்ட்
நாகூர் ரூமி
கனவுகளின் விளக்கம்



நாகூர் ரூமி

நாம் காணும் கனவுகளைப் புரிந்து கொள்வதற்கு அறிவியல்பூர்வமான அடிப்படையைக் கண்டடைந்தவர் உலகப் புகழ்பெற்ற அறிஞர் சிக்மண்ட் ஃப்ராய்ட். 'கனவுகளின் விளக்கம்' என்ற இவரது பிரசித்தி பெற்ற நூலின் சுருக்கமான வடிவம் இது. ஃப்ராய்ட் ஆய்வின் மூலம் கண்டறிந்து கூறும் விளக்கங்கள் உண்மையில் அதிர்வூட்டுபவை. கனவுகளை இப்படியெல்லாம் பகுத்து அறியமுடியுமா என்கிற வியப்பைத் தரும் பக்கங்களே இந்நூலில் அதிகம். 'சைக்கோ அனலைசிஸ்' என்னும் உளப்பகுப்பாய்வு முறையைப் பிரயோகித்து எழுதப்பட்டுள்ள இந்நூலை நாகூர் ரூமி தனது தேர்ந்த எளிய மொழி நடையால் வாசகப்புரிதலுக்கு இலகுவாக்குகிறார். முற்றுப்புள்ளி என்றும் கடைசி அத்தியாயத்தில் அறிஞர் ஃப்ராய்டின் விளக்கங்களை விமர்சனத் தொனியில் நாகூர் ரூமி எழுதிப்பார்ப்பது சிறப்பு.

0027184

thamizhbooks.com பாரதி புத்தகாலயம் புதிய புத்தகம் பேசுது

**கனவுகளின் விளக்கம் 1 – சிக்மன்ட் ஃப்ராய்ட்**

Freud's 'The Interpretation of Dreams' Translated by Dr. A.S. Mohamed Rafee ( Nagore Rumi)

முன்னுரை

கனவு காண்பது மனித குலத்திற்கே பொதுவான செயல்பாடுதான் என்றாலும் இஸ்லாம், ஹிந்து மதம், புத்தம், கிறிஸ்தவம் போன்ற உலகப் பெரும் மதங்களில் ஊறி வாழும் மனங்களைக் கொண்ட இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் கனவானது ஒரு அதி முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடாகிறது. அது ஒரு religious issueஆக கருதப்படுகிறது என்றால் மிகையாகாது.

பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற எந்த முக்கியமானதொரு நிகழ்ச்சிக்கு முன்னோ அல்லது பின்னோ நம் வீட்டுப்பெரியவர்கள் அதன் தொடர்பாகக் கனவு கண்டதாகச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். நான்கூட என் தாத்தா இறந்து போவதற்குமுன் என் வீட்டு பீர்க்கங்கொடி பட்டுப்போவதாகக் கனவு கண்டு அதை என் பாட்டியிடம் சொல்ல, அவள் யாரோ இறப்பதற்கான அறிகுறி அது என உணர்ந்து அழுதாள். பிறகு சில நாட்களில் என் தாத்தாவும் இறந்துபோனார்.

ஒரு கனவு கண்டுவிட்டால் அதை நாம் எல்லாரிடமும் சொல்லிவிடக்கூடாது என்றும் கனவுகளை சரியாக விளக்குவதற்கென்று தகுதி படைத்த சிலர் உண்டு என்றும் நம்புகிறோம். அப்படி ஒரு சிலருக்கு அத்தகுதிகள் உண்டு என்பது உண்மையோ பொய்யோ, அப்படி நாம் நம்பி அந்த ஒரு சிலரிடம் மட்டுமே விளக்கம் கேட்கிறோம் என்பதே கனவுக்கு நம் வாழ்வில் நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தைச் சொல்லும்.

எனவே முக்கியத்துவம் வாய்ந்த நம் கனவுகளைப் பற்றி விஞ்ஞானப்பூர்வமாக நாம் அறிந்து கொள்வது முதலில் அவசியமாகிறது. இதுவரை கனவின் விளக்கங்களாக தமிழ் உலகுக்கு வந்துள்ள எந்த நூலும் இந்த அவசியத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மாறாக, கனவுக்கு அகராதி போட்டு அதன் அர்த்தத்தைச் சுருக்குவதாகவும் அற்புதமான கனவுகளைக் காண்பதற்குரிய தகுதி பெற்றவராக ஆசிரியர் தன்னைக் காண்பித்துக் கொள்வதாகவும்தான் உள்ளது.

ஆகவே, விளக்கம் அறிவதற்குத் தகுதி உள்ளவரைத் தேடும் அவசியமின்றி, நம்முடைய கனவுகளை அல்லது நம்மை நாமே புரிந்து கொள்வதற்கு விஞ்ஞானபூர்வமானதொரு அடிப்படையைத் தருவதும் அந்த அடிப்படையைத் தந்த சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவரான சிக்மன்ட் ஃபிராய்ட் (Sigmund Freud) என்ற மேதையை இந்த தொடர்பில் அறிமுகப்படுத்துவதும் இந்த நூலின் நோக்கமாகும்.

அத்தியாயம் – 1

சிக்மன்ட் ஃப்ராய்ட் யார்?

விரல்விட்டு எண்ணக்கூடிய சில தனி மனிதர்களின் சேவைகளுக்கும் சாதனைகளுக்கும்தான் இந்த உலகமே கடமைப்பட்டுள்ளது என்பது வியப்புதரக்கூடிய உண்மையே. அந்த ஒரு சிலரில் சிக்மன்ட் ஃப்ராய்டும் ஒருவர். அவர் ஒரு பெரிய மேதை என்பதனால் மட்டும் நாம் அவரைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர் தனது அறிவையும் அனுபவத்தையும் மனித மனம் என்னும் மகத்தான ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள செலவிட்டார். அதன் பலனாக அவர் கண்டறிந்த உண்மைகள் இந்த உலகத்தையே உலுக்கின. அதன் சிந்தனைப் போக்கையே மாற்றின. அதுகாறும் மனிதனை அரசியல் ரீதியாகவும், பொருளாதாரம், இலக்கியம், சமயம், கலாச்சாரம், பண்பாடு, தத்துவம் போன்றவைகளின் மூலமாக அறிந்துவந்த உலகு, முதன் முதலாக உளவியல் ரீதியாக ஆழமாக அறிந்து கொண்டது.

அதாவது, மனிதன் தன்னைப்பற்றி தனக்கே தெரியாத உண்மைகள அறிந்துகொள்ள ஃப்ராய்டின் கண்டுபிடிப்புகளும் கோட்பாடுகளும் உதவின. Psychoanalysis மனஅலசல் முறையை ஃப்ராய்டுதான் முதன் முதலில் உருவாக்கினார். Psychoanalysis என்ற சொல்லைக் கொடுத்தவரே அவர்தான். மனித மனத்தின் செயல்பாடுகளையும் மனதைப் பீடிக்கும் நோய்களையும் கண்டுணரும் முறையாகவும் மருத்துவமாகவும் மனஅலசல் அமைந்தது. அதோடு, ஒரு ஒட்டுமொத்த சமுதாயத்தின் மனத்தையும் அதன் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட கலாச்சாரக்கூறுகளையும் புரிந்துகொள்ளவும் அது உதவியது.

ஒரு மருத்துவராக, குறிப்பாக நரம்பியல் நிபுணராக, தொழில்செய்த ஃப்ராய்ட் எத்தனையோ புத்தகங்களில் தான் கண்டுபிடித்த உண்மைகளைச் சொல்லியிருந்தாலும் அவருடைய The Interpretation of Dreams, கனவுகளின் விளக்கம், என்னும் நூலே மிகச்சிறந்ததாகவும் உலகத்தை மாற்றிய ஐந்து நூல்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. அதனை சுருக்கமாகத் தருவது ஃப்ராய்டை மட்டுமல்ல நம்மை நாமே தெளிவாகப் புரிந்துகொள்ளவும் நிச்சயம் உதவும்.

வாழ்க்கைக் குறிப்பு

ஃப்ராய்ட் கி.பி. 1856-ம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி ஃப்ரெய்பெர்க் (Freiberg) என்ற ஊரில், தற்போது செக்கோஸ்லாவேகியாவாக உள்ள மொராவியா ( Moravia) நாட்டில் பிறந்தார். 1859-ம் ஆண்டு அவர் குடும்பம் வியென்னா நகருக்குக் குடிபெயர்ந்தது. வியென்னா பல்கலைக் கழகத்தில் மருத்துவம் பயின்றார் ஃப்ராய்ட். மனித மூளையைப் பற்றி பல ஆராய்ச்சிகள் செய்தார். விரிவுரையாளராகவும் பணியாற்றினார். மனித மனம் சம்மந்தமான கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதி வந்தார்.

திருப்புமுனை

1885-ன் இறுதியில் நரம்பு மண்டலம் சம்பந்தமான ஆராய்ச்சியைத் தொடர, பாரிஸ் நகரம் சென்றார். பத்தொன்பது வாரங்கள் அங்கு தங்கி ஜீன் மார்ட்டின் ச்சார்காட் (Jean Martin Charcot) என்ற பிரபல மருத்துவரின் கீழ் பணிபுரிந்தார். இது அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஹிஸ்டீரியா நோயாளிகளை ச்சார்காட் அணுகிய முறை ஃப்ராய்டுக்கு ஒரு முற்றிலும் புதிய தீர்வுக்கான விதையைக் கொடுத்தது. உதாரணமாக, உடலுறுப்பு ஒன்று இயங்காமல் பாதிக்கப் பட்டவர்களுக்கு ச்சார்காட் ஹிப்னாடிஸம் மூலம் நோய் நீங்கிவிட்டது என்ற கருத்தைத் திணிப்பதன் மூலம் நிவாரணம் உண்டாக்கினார். அதைப்பார்த்த ஃப்ராய்ட், மனித மூளையை நம்புவதைவிட மனித மனத்தின் சக்திகளை ஆராய்வது பயன்தரும் என்று புரிந்து கொண்டார்.

இரண்டு நட்புகள்

பாரிஸிலிருந்து திரும்பி வந்தபிறகு மார்த்தா பெர்னைஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். ஆறு குழந்தைகளைப் பெற்றார். அதில் அன்னா என்ற மகள் அவரைப்போலவே பிற்காலத்தில் மனஅலசல் நிபுணரானார்.

திருமணமான காலகட்டத்தில் வில்எல்ம் ஃப்லீஸ் (Wilhelm Fleiss) என்ற மருத்துவரோடு நட்பு ஏற்பட்டு பதினைந்து வருட காலம் அது தொடர்ந்தது. ஒவ்வொரு ஆணுக்குள்ளும் ஒரு பெண் இருக்கிறாள். ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு ஆண் இருக்கிறான். மனித உடலில் சில பகுதிகள் பாலுணர்ச்சியை அதிகம் தூண்டக்கூடியவையாக உள்ளன. குழந்தைகளுக்கும் பாலுணர்ச்சி உண்டு என்பன போன்ற கருத்தாக்கங்கள் உருவாக இந்த நட்பு வித்திட்டது.

ஜோஸப் பிரவர் ( Joseph Breuer ) என்ற மருத்துவரோடு ஏற்பட்ட நட்பு இன்னும் ஆழமானது. முக்கியமானது. மன அலசல் என்ற முறை கண்டுபிடிக்கப் படுவதற்கே பிரவரின் நட்புதான் காரணமாக இருந்தது.

ஃப்ராய்ட் மனநோயாளிகளுக்கு ச்சார்காட் தந்த ஹிப்னாடிஸ முறையில் வைத்தியம் செய்துகொண்டிருந்தபோது, பிரவர்தான் அன்னா – ஓ என்ற பெண் நோயாளிக்கு வித்தியாசமான முறையில்

சிகிச்சையளித்தார். நோயாளியை ரிலாக்;ஸ்டாக உட்கார அல்லது படுக்கச் செய்து, மனதில் வந்ததையெல்லாம் பேசச் செய்தார். மனதில் இருந்த குப்பைகளையெல்லாம் வெளியில் கொட்டிய உடனேயே, சிம்னி விளக்கைத் துடைத்தமாதிரி சுத்தமாகி, நோய் குறையவும் மறையவும் ஆரம்பித்தது. இங்கிருந்துதான், இதன் நீட்சியாகத்தான் ஃப்ராய்ட் தன் free association என்ற சிகிச்சை முறையைத் தொடங்கினார். ஃப்ராய்டும் பிரவரும் இணைந்து Studies in Hysteria என்ற நூலையும் எழுதினர்.

கனவுகளைப் பற்றிய ஆராய்ச்சி

1897 ஜுலையிலிருந்துதான், தன் தந்தையின் மறைவுக்குப் பிறகு, ஃப்ராய்ட் கனவுகளைப் பற்றிய தனது ஆராய்ச்சியில் இறங்கினார். பிரபஞ்ச மனத்தை அறிந்துகொள்ள உதவும் ராஜபாட்டை என்று கனவுகளை அவர் வர்ணித்தார். 1899-ல் வெளியான கனவுகளின் விளக்கம் (The Interpretation of Dreams ) என்ற நூல்தான் இவரின் தலைசிறந்த படைப்பு அல்லது பங்களிப்பு என்று அறிஞர் பலராலும் கருதப்படுகிறது.

கனவுகள் யாவும் நனவில் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றும் களமாக, வடிகாலாக அமைகிறது எனவும் அந்த ஆசைகள் பெரும்பாலும் பாலுணர்வு சம்பந்தப் பட்டதாகவே உள்ளன என்றும் கண்டறிந்து கூறினார். ஃபராய்ட் பொதுவாக மனிதனுடைய எல்லா செயல்பாடுகளுக்கும் ஆழ்மனதில் கிடக்கும் பாலுணர்வே காரணம் என்று நம்பினார். இது உண்மை என்றாலும் மிகைப்படுத்தப்பட்டது என்பதையும் தனது கொள்கைள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் இயங்குவதையும் அவர் பிற்பாடு உணரத்தலைப்பட்டார்.

குறிப்பாக, முதல் உலகப் போரின்போது மனநோய்க்கு ஆளான போர்வீரர்களின் கனவுகளை அவர்களின் குழந்தைப்பருவ பாலுணர்வு அடிப்படையில் விளக்க முடியாததை இங்கு குறிப்பிடலாம். குழந்தைப்பருவ பாலுணர்வே – infantile sexuality – மனிதனின் ஒட்டுமொத்த குணாம்சத்துக்கும் காரணம் என்ற நிலைப்பாட்டிலிருந்து மாறி, மற்ற உணர்வுகளும் மனிதனை குறிப்பிட்ட குணாம்சங்களுள்ளவனாக மாற்ற வல்லவை என்பதை அவர் 1920 க்குப் பிறகு புரிந்துகொண்டார் என்பதை அவருடைய பிற்கால எழுத்துக்கள் காட்டும்.

1904-ல் வெளியான The Psychopathology of Everyday Life என்ற நூல் நம் அன்றாட வாழ்வில் நிகழும் மறந்துபோதல், வார்த்தைகளைத் தவறாகச் சொல்லுதல், மாற்றிச் சொல்லுதல் போன்றவற்றின் பின்னணியில் மறைந்து கிடக்கும் மனநோய்களைப் பற்றியது.

1905-ல் வெளியான Jokes and their Relation to the Unconscious என்ற நூல், நகைச்சுவையின் பின்னால் மறைந்துள்ள சோகத்தை, பிரச்சனைகளைப் பற்றியது.

இதே வருடம் வெளியான Three Essays on the Theory of Sexuality என்ற நூல் இவரை ஒரு பாலியல் மருத்துவ நிபுணராக நிர்மாணித்தது. மனிதன் ஆரோக்கியமாக இருப்பதற்கும் சரி, மனநோயாளியாக மாறுவதற்கும் சரி, பாலியல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளே காரணம் என்று ஃப்ராய்ட் கருதினார். குழந்தை தாயின் தனங்களில் பாலருந்துவதற்கும் தாய், பால் கொடுப்பதற்கும்கூட பசியோ பாசமோ காரணமல்ல, பாலுணர்வே அடிப்படைக் காரணம் என்று விளக்கினார் என்றால் பார்த்துக் கொள்ள வேண்டும் ! இந்த கருத்தை பின்னாளில் எரிக் ஃப்ரம் (Erich Fromm) போன்ற சமூகவியலாளர்கள் மிகக்கடுமையாக விமர்சித்து ஆதாரபூர்வமாக மறுத்துள்ளனர்.

1920 களில்; வெளிவந்த அவருடைய புத்தகங்களான டீநலழனெ வாந Beyond the Pleasure Principle மற்றும் Ego and the Id ஆகியவை பாலுணர்வு என்ற வட்டத்திலிருந்து அவர் வெளிவர யத்தனித்ததைச் சுட்டும்.

இதில் வேடிக்கை என்னவெனில், மனித மனத்தை அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்து பிட்டுப்பிட்டு வைத்தவர்தான் ஃப்ராய்ட் என்றாலும் அவர் ஆராய்ந்த அத்தனை மனங்களுமே மனநோயாளிகளுடைய நோயுற்ற மனங்கள் ! அத்தகைய மனங்களிலிருந்து ஆரோக்கியமான உண்மைகள் கிடைத்திருக்குமா என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

ஃப்ராய்ட் 1939-ம் ஆண்டு செப்டம்பர் 23-ம் தேதி இந்த உலகைவிட்டு மறைந்தார். எனினும் கனவுகள் உள்ளவரை, கனவு காண்கின்ற கடைசி மனிதன் உள்ளவரை அவர் ஃபீனிக்ஸ் பறவையைப்போல உயிர்த்து எழுந்து கொண்டேயிருப்பார்.

ஃப்ராய்டின் கோட்பாடுகளில் தவறு உள்ளது என்பது பின்னால் நிரூபிக்கப் பட்டாலும், கனவு பற்றி விஞ்ஞானபூர்வமாக அறிந்து கொள்ள ஃப்ராய்டின் சிந்தனையை பரிச்சயம் கொள்வது முதலில் அவசியம். அதற்கு சிறந்;த வழி அவருடைய எழுத்தைப் படிப்பதுதான். உலகத்தை மாற்றிய ஐந்து புத்தகங்களில் ஒன்றான சிக்மன்ட் ஃப்ராய்ட் எழுதிய வுhந ஐவெநசிசநவயவழைn ழக னுசநயஅள என்ற நூலின் சாறு இனி வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. அதைக்குடித்துவிட்டால், இனி கனவு கண்டு பயந்து எழ வேண்டிய அவசியமிருக்காது.

அத்தியாயம் – 2

கனவைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள்

வரலாற்றுக்கு முந்திய கருத்தும் கனவின் சில குணாம்சங்களும்

கனவைப் பற்றிய தனது ஆராய்ச்சியை ஃப்ராய்டு திடீரென்று ஏதோ ஒரு புள்ளியிலிருந்து தொடங்கிவிடவில்லை. தனக்கு முந்திய ஆராய்ச்சிகளையெல்லாம் படித்து அலசி கரைத்துக் குடித்துவிட்டுத்தான் அவர் தனக்கான சில முடிவுகளுக்கு வருகிறார். அடிக்கடி Wundt , Hildebrandt , Maury , Jessen , Radestock , Krauss , Strumpell , Kant போன்ற உளவியலாளர்கள், மருத்துவர்கள், தத்துவவாதிகள் போன்றோரின் கருத்துக்களை மேற்கோள் காட்டுவார். கனவுகளைப் புரிந்து கொள்வதற்கு அந்த ஆராய்ச்சிகள் பற்றிய அறிவு இன்றியமையாதவை. எனவே அவற்றை இங்கே சுருக்கமாக தருகிறோம். அதோடு, இந்த நூல் முழுவதும் பேசுவது ஃப்ராய்டுதான் என்றாலும் அங்கங்கே அழுத்தம்கொடுக்க வேண்டி அவ்வப்போது அவரே பேசுவதாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அதற்கு அர்த்தம் மற்றவையெல்லாம் அவர் சொல்லாதது என்பதல்ல.

இன்றல்ல நேற்றல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் கனவுகளைப் புரிந்துகொள்ள முயன்று வருகிறான். ஆனால் விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்த அணுகுமுறை மிகச்சமீபத்தியதே.

அரிஸ்டாட்டிலுக்கு முந்திய காலத்தில் கனவுகள் தெய்வீக அறிவிப்பு என்றும் தீர்க்கதரிசி ஆபிரஹாமுக்கு மகனை வெட்டி பலி கொடுக்க வேண்டுமென்று இறைவன் கனவில் கட்டளை பிறப்பித்ததைப் போன்ற நேரடி தீர்க்க தரிசனங்கள் என்றும் மேலும் வருங்காலத்தை முன்னறிவிக்க வல்லவை என்றும் கருதப்பட்டு வந்தன.

தெய்வீகச் செயல்பாடாகக் கருதப்பட்டதால் கனவை உண்டாக்கும் காரணிகளைப் பற்றி விஞ்ஞானப்பூர்வமாக அறியும் அவசியமேற்படவில்லை.

எனினும் இந்த காலகட்டத்தில் சிற்சில உண்மைகள் அறியப்பட்டன. சின்ன வி;களை கண், காது, மூக்கு வைத்து ஒன்றுக்கு ஒன்பதாக்கும் பழக்கத்தை மனிதன் கனவுகளிடம் இருந்துதான் கற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும். ஏனெனில் உணர்வுகளை கனவு மிகைப்படுத்திக் காட்டும் தன்மையுடையது என்பதையும் நமது உள்ளுறுப்புகளின் ஆரோக்கியக் குறைவை அது அறிவிக்கும் எனவும், கனவானது தூக்க நிலையின் சிந்தனை என்பதாகவும் கிரேக்கத் தத்துவவாதி அரிஸ்டாட்டில் சரியாக அறிந்து வைத்திருந்தார்.கனவுகளைப் பற்றிப் பேசும் அவருடை இரண்டு புத்தகங்கள் மூலமாக இந்த தகவலை நாம் பெறுகிறோம். தீ மிதியில் கலந்து கொள்வதாக கனவு வரும். உண்மையில் உறங்கிக் கொண்டிருந்தவரின்; பக்கத்தில் யாராவது டார்டாய்ஸ் – சரி, மெழுகுவர்த்தி – ஏற்றி வைத்திருப்பர். அவ்வளவுதான்.

கனவுகள் வேறொரு உலகத்திலிருந்து வருகின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும் அவை வேறொரு உலகத்துக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன என்பதை தூங்கி விழித்த – தூங்கி வழிந்த அல்ல – அனைவருமே ஒத்துக்கொள்வர்.

கனவு நமது நனவு வாழ்வைக் காட்டுவதில்லை. நம்மை நனவு வாழ்விலிருந்து விடுவிப்பதே கனவின் நோக்கமாக உள்ளது. நமது மனமும் சிந்தனையும் ஒரு பிரச்சனையில் மூழ்கி உள்ளபோது அதைக் குறியீடுகள் மூலம் பிரதிபலிப்பதாக கனவு உள்ளது என்று டாக்டர் பர்டாக் ((Burdach) கூறுகிறார்.இதே கருத்தை பல ஆராய்சியாளர்களும் ஒத்துக்கொண்டுள்ளனர்.

நாம் சொன்னது, செய்தது, செய்ய நினைத்ததுதான் கனவில் வருகின்றன என்ற கருத்தை மோரி முன் வைக்கிறார். கனவு காண்பவரின் வயது, வாழ்முறை, அனுபவம், அவர் ஆணா பெண்ணா போன்றவைதான் கனவின் உள்விஷயங்;களைத் தீர்மானிக்கின்றன என்று ஜெஸ்ஸன் என்ற உளவியலாளர் கூறுகிறார்.

கனவானது நனவு வாழ்வோடு சம்பந்தப் பட்டிருந்தாலும் நனவு வாழ்வுக்குக் கொஞ்சம்கூட சம்பந்தமில்லாத விஷயங்களையும் காட்ட வல்லது என்று ஹில்டெப்ரான் கூறுகிறார். உதாரணமாக, செயின்ட் ஹெலினா தீவுக்கு கடற்பயணம் செய்து அங்கு சிறைக் கைதியாக இருக்கும் நெப்போலியனைச் சந்தித்து மதுவகைகளை அவனுக்கு அளிப்பதாக கனவு காணும் ஒருவன் நிஜவாழ்வில் நெப்போலியனை வெறுக்கக்கூடியவனாக, மதுவோடு சம்பந்தப் படாதவனாக, நெப்போலியன் இறந்த பிறகே பிறந்தவனாக இருக்கக்கூடிய வாய்ப்புண்டு.

பெரும் புதிராக உள்ள இந்த கனவு என்றால் என்ன? ஏன் உண்டாகிறது? காரணிகள் எவை? போன்ற கேள்விகளுக்கு விஞ்ஞானம் விடை காண முற்பட்டபோது கனவின் பல குணாம்சங்களைப் பற்றியும் அதன் விளைவாக அல்லது வழியாக மனித மனத்தின் இயக்கத்தைப் பற்றியும், ஆழத்தில் அமுங்கிக் கிடக்கும் ஆசைகளைப் பற்றியும் ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது.

கனவின் குணாம்சங்களை அறிந்து கொள்ளும்போது கனவு மெல்ல மெல்ல தானே விளங்க ஆரம்பித்துவிடும். அதற்குமுன் சில பிரயோகங்களையும் (terms) எந்த அர்த்தத்தில் அவை இந்த நூலில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்றும் பார்க்க வேண்டியது அவசியம்.

1.குறியீடு(Symbol)

ஒன்றை மற்றொன்றால் குறிப்பது. அந்த மற்றொன்றே குறியீடு. ரோஜா என்றால் அது மென்மை, அழகு போன்றவற்றிற்குக் குறியீடு. அதேபோல் நெருப்பு என்றால் அது அழிவு, காமம், நிலையாமை இவற்றிற்குக் குறியீடு. இவற்றில் இரண்டுவகைக் குறியீடுகள் உண்டு. ஒன்று எல்லாக் காலத்துக்கும், நாட்டுக்கும் பொதுவான பிரபஞ்சக் குறியீடு (Universal Symbol). பிரபஞ்சக் குறியீடு யார் கனவில் வந்தாலும் அதன் அர்த்தம் ஒன்றுதான். மேற்கூறிய ரோஜா அல்லது நெருப்பு அதற்கு உதாரணம். மற்றொன்று தனிக்குறியீடு (Accidental Symbol). அதாவது தனி ஒரு மனிதனுக்கு மட்டும் பிரத்தியேகமாக அர்த்தம் தருகின்ற குறியீடு. உதாரணமாக நாம் ஏதாவது ஒரு ஊருக்குப் போயிருக்கும்போது ஒரு துயரமான சம்பவம் ஏற்பட்டு விட்டால், பின்னால் அந்த ஊரின் பெயர் சொல்லப்படும் போதெல்லாம் நமக்கு அது ஒரு துக்க உணர்வை ஏற்படுத்தும். அந்த ஊரின் பெயர் நமக்கு துக்கத்தின் குறியீடு. ஆனால் எல்லோருக்கும் இது இந்த அர்த்தம் தராது. இது தனிக்குறியீடு.

2. வெளி விஷயம் ( Manifest Contest )

கனவில் வரும் காட்சி அல்லது காட்சிகளை வெளி விஷயம் என்று கொள்வோம். வெளி விஷயம் கனவின் அர்த்தம் அல்ல. உதாரணமாக வடதுருவக் குளிரில் நாம் விறைத்துக் கொண்டிருப்பதாக காட்சி வந்தால் அதன் அர்த்தம் நம்மீது யாரோ ஐஸ் கட்டியைப் போடுகிறார்கள் என்பதாக இருக்கலாம்.

3.உள் விஷயம் ( Latent Content )

கனவுக் காட்சிகள் மூலம் கனவு நமக்கு உணர்த்த வரும் விஷயம், கொண்டு வரும் செய்த, கொண்டிருக்கும் அர்த்தம். இவைகளை உள் விஷயம் என்று கொள்வோம்.

4.ஆழ்மனம் ( The Unconscious )

மனிதனின் மூளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1) வெளி மனம் (வுhந ஊழளெஉழைரள). அதாவது நமது பிரக்ஞை செயல்படுகின்ற பகுதி. 2) உள் மனம் (வுhந ளூரடிஉழளெஉழைரள). 3) பிரபஞ்ச மனம் அல்லது ஆழ் மனம் (வுhந ருnஉழளெஉழைரள). உள் மனமும் பிரபஞ்ச மனமும் மனிதனின் பிரக்ஞை நிலைக்கு அப்பாற் பட்டவை. இவைகளின் பிரிவின் நுணுக்கம் நமக்கு இப்போது அவசியமில்லை. கனவைப் பற்றிய தொடர்பில் பிரபஞ்ச மனம் என்று சொல்வது குழப்பத்தைத் தோற்றுவிக்குமாகையால் இதை ஆழ் மனம் என்று குறிப்போம். கனவின் குணாம்சங்களைப் பார்க்கும்போது, தேவையான இடங்களில் உதாரணங்களோடும் மிக முக்கியமானவைகளை தனித்தனியே பகுதிகளாகவும் பார்க்கலாம்.

5.கனவெண்ணம் ( Dream thought )

கனவை உருவாக்குகின்ற எண்ணம் அல்லது எண்ணங்கள்.

கனவின் குணாம்சங்கள்

விளக்கப் படாத கனவு திறக்கப்படாத கடிதம் போன்றது என்றொரு முதுமொழி உண்டு. இது கவனிக்கத்தக்கது. கடிதம் ஒரு செய்தியைக் கொண்டுவருகிறது. அதேபோல கனவும் ஒரு செய்தியைச் சொல்லுகிறது. கடிதத்தைத் திறந்தால்தான் செய்தியைப் படிக்க முடியும். கனவை விளக்கினால்தான் அர்த்தம் புரியும். எனவே கனவு என்பது நமக்கு நாமே அனுப்பிக் கொள்ளும் கடிதம் அல்லது செய்தி. அது நாம் தூங்கும்போது நடக்கும் ஒரு அர்த்தமுள்ள செயல்பாடு. காட்சி வடிவ சிந்தனை. அதன் குணங்களை அறிந்துகொள்வதற்கும் இதனை மனதில் நிறுத்திக்கொள்ளுதல் அவசியம்.

குணாம்சங்கள்

1. கனவு தானாக எதையும் சொல்வதில்லை. நம் நனவு வாழ்வின் அனுபவங்களிலிருந்தே அது காட்சிகளை அமைக்கிறது. இதில் எவ்வித சந்தேகமுமில்லை. நமது விழிப்புநிலை அனுபவங்கள் கனவில் நினைவுகொள்ளப்படுகின்றன. அல்லது மறுஉயிர்ப்பு செய்யப்படுகின்றன. ஆனால் கனவுக்கும் நனவுக்கும் உள்ள தொடர்பை நாம் புரிந்து கொள்வது கடினம். நனவில் நாம் அறவே மறந்துவிட்டிருக்கிற, நினைவில் கொண்டுவரமுடியாத விஷயங்களை கனவு துல்லியமாக ஞாபகப் படுத்துகின்ற தகுதி பெற்றது. உதாரணமாக, நாம் நனவு வாழ்வில் எப்போதோ பரிச்சயம்கொண்ட அந்நிய மொழியை, நனவில் பேசியதைவிட சரளமாகவும் சரியாகவும் கனவில் பேசுவதைக் கூறலாம். விழிப்பில் இப்படிப்பட்ட வி; என் பிரக்ஞையில் கிடையவே கிடையாது என்று சாதிக்கின்ற அளவுக்கு மறந்து விட்டிருப்பவைகளை நினைவுகூர்கின்ற கனவுகளை ஹைபர்னீஸிக் ( hypermnesic ) கனவுகள் என்று உளவியலாளர் கூறுகின்றனர்.எனவே

2. கனவுக்கு அபார ஞாபக சக்தி உண்டு

3. கனவின் தெரிவு : கனவு, தான் நினைவுகூறத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் விஷயம் அல்லது அனுபவம் நம் நனவு வாழ்வில் நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக, நம்மை மிகவும் பாதித்ததாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கொஞ்சம்கூட முக்கியத்துவமற்றதுகூட கனவில் வரலாம். நமது குடும்பத்தில் ஏதோ பிரச்சனை ஏற்பட்டு, அதனால் மிகவும் பாதிக்கப்பட்டு, அதையே நினைத்துக்கொண்டு உறங்கினாலும், வரும் கனவு, அதை விட்டுவிட்டு, நாம் என்றோ ஒருநாள் தெருவில் சென்றபோது நம்மை எதிர்கொண்ட ஒருவரின் முகத்திலிருந்த, நாம் கவனிக்காது விட்ட, தழும்பை நினைவுகூறலாம். நமது பிரக்ஞையுடனோ அல்லது பிரக்ஞை அற்றோ, நமது மூளையில் பதிவான எதையும் நம் நினைவிலிருந்து நாம் நிரந்தரமாக இழப்பது கிடையாது என்பது இதிலிருந்து விளங்கும்.

4. பொதுவாக நமக்கு சாதாரணமாக வரும் கனவுகளின் மூலம் ( the source of normal dreams ) கனவு காண்பதற்கு முந்திய நாள் அல்லது அதற்கு முந்திய நாள் நிகழ்ச்சியாக இருக்கும். அதாவது மிகச்சமீபத்திய நிகழ்ச்சிகளை தொடர்புபடுத்திப் பார்ப்பது, கனவைப் புரிந்துகொள்வதற்கு உதவும்.

5. எல்லாக் கனவுகளுமே பெரும்பாலும் குறியீட்டுத் தன்மை கொண்டவை. கனவின் காட்சிகளே குறியீடுகள். நம் நனவு வாழ்வின் அனுபவ உணர்வுகளை கனவுகள் அப்படியே காட்டுவதில்லை. எனவேதான் கனவுகளை விளக்க வேண்டிய அவசியமேற்படுகிறது. கனவின் காட்சிகள் பெரும்பாலும் தனிக்குறியீடுகளாகவே இருக்கும். கனவு கண்டவனின் வாழ்க்கைப் பின்னணியை நாம் அறியாவிட்டால் கனவெண்ணங்களை அறியமுடியாது. எனவே கனவுகள் குறியீட்டுத்தன்மை கொண்டவை அல்லது சங்கேத மொழி பேசுபவை அல்லது உள் விஷயம் கொண்டவை என்று அறியலாம். கனவின் வெளி விஷயம் , குறியீடு அல்லது குறியீடுகளாகும்.

உதாரணமாக, நாம் ஏற வேண்டிய ரயிலை தவற விட்டுவிடுவதாக கனவுகாண்பதாக வைத்துக்கொள்வோம். ரயில், அதற்காக நாம் ஓடிவருதல், ஆனால் ரயில் புறப்பட்டு விடுதல் ஆகியன காட்சிகள் அல்லது குறியீடுகள் அல்லது கனவின் வெளி விஷயம். இக்கனவு மரணத்தைப் பற்றிpய நமது பயத்தை வெளிப்படுத்துகிறது. மறைமுகமாக. என்றைக்காவது ஒருநாள் சாவோம் என்ற உண்மை தெரிந்திருந்தாலும் குறைந்த பட்சம் இப்போது வேண்டாம் என்றே நாம் நினைப்போம். இக்கனவின்படி நாம் ரயிலை விட்டுவிட்டோம். அதாவது நாம் புறப்படவில்லை. நமக்கு இப்போது புறப்பாடு, அதாவது மரணம், இல்லை. நீ இப்போது சாகமாட்டாய் என்று கனவு கூறுகிறது. புறப்பாடு என்ற வார்த்தை இறப்பைக் குறிக்கும் பிரபஞ்சக் குறியீடு. கனவில் ரயிலும் நம்மைவிட்டுவிட்டுப் புறப்படுவதும் நமக்கு மரணம் அப்போது இல்லை என்பதன் குறியீடுகள்.

கனவுகள் குறியீட்டுத்தன்மை கொண்டவை என்ற அடிப்படையான விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் கனவுகளை விளக்கவே முடியாது. அதோடு, ஒரு கனவை விளக்க, பிரபஞ்சக் குறியீடுகள் பற்றிய அறிவையும் நாம் கருதத்தக்க அளவு பெற்றிருத்தல் அவசியம்.

6. கனவுகள் நம்முடைய வாழ்வில் தனித்தனியே பார்க்கும்போது சம்பந்தமற்ற பல விஷயங்களை ஏதோ ஒரு தொடர்பின் அடிப்படையில் ஒன்றுசேர்த்து காட்சிகளை உருவாக்கும் தன்மை கொண்டவை. ( A dream works in association ). உதாரணமாக மேற்கூறிய கனவையே எடுத்துக் கொள்ளலாம். ரயிலுக்கும் மரணத்துக்கும் சம்பந்தமில்லை. ஆனால் ரயில் என்பது புறப்படும். புறப்பாடு மரணத்தைச் சுட்டும். புறப்படுகின்ற எந்த வாகனத்தையும் மரணத்தின் குறியீடாக அது காட்டலாம். இன்ன மனிதருடைய கனவில் கனவு ஏன் மரணத்தின் குறியீடாக ரயிலைத் தேர்ந்தெடுத்தது? மற்ற வாகனங்கள் ஏன் வரக்கூடாது? போன்ற கேள்விகளுக்கு குறிப்பிட்ட மனிதரின் வாழ்க்கைப் பின்புலத்தை அறிந்தால்தான் விடை கிடைக்கும்.

7. ஒவ்வொரு கனவும் ஏதோ ஒரு விதத்தில் நம் ஆழ் மனத்திலிருக்கும் விருப்பமொன்று நிறைவேறி விட்டதாகக் காட்டும். அது பெரும்பாலும் பாலுணர்ச்சி சம்பந்தப்பட்டதாக இருக்கும் என்று ஃப்ராய்ட் கூறுகிறார். கனவைப் பற்றிய அவருடைய ஆராய்ச்சியில் மிகமுக்கியமான அம்சம் கனவு நமது விருப்பம் நிறைவேற்றுவதாகக் காட்டும் தன்மை கொண்டது என்பது. ( A dream is the fulfillment of a wish ) இந்த விருப்பம் பெரும்பாலும் நம் குழந்தைப் பருவத்திலிருந்து அமுக்கப்பட்ட ஒன்றாக ( repressed ) இருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட ரயிலைத்தவற விடும் கனவிலேயே இந்த விருப்ப நிறைவேற்றம் என்ற அம்சத்தைக் காணலாம். நாம் இப்போது சாகக்கூடாது என்ற விருப்பமே இப்போது நீ புறப்படவில்லை என்பதாக, விருப்பம் நிறைவேறிவிடுவதாக, காலன் என்ற ரயில் இவனை விட்டுவிட்டுப் போய்விடுவதாக, கனவில் வருகிறது.

ஃப்ராய்டின் நண்பர் ஒருவர் அவரிடம் தனது மனைவி மாதவிடாய் வருவதாகக் கனவு கண்டதாகக் கூறுகிறார். அப்படியானால் உண்மையிலேயே மாதவிடாய் வரவில்லை எனவும் அதாவது அவள் கர்ப்பிணியாக இருக்கிறாள் எனவும் ஃப்ராய்ட் விளக்கம் தருகிறார். அதாவது விடாய் வராதால், வரவேண்டும் என்ற விருப்பம் அவள் கனவில் நிறைவேறியுள்ளது.

இப்படிப்பட்ட விருப்பம் நிறைவேற்றும் கனவுகள் பெரியவர்களுக்கு வரும்போது அது அவர்கள் ஆழ் மனத்தில் அமுக்கப்பட்டுக் கிடந்த விருப்பமாகவும், குழந்தைகளுக்கு வரும்பொழுது, அது அவர்கள் நனவு வாழ்வில் நிறைவேற்றப்படாத சின்னச் சின்ன ஆசைகளாகவும் இருக்கும்.

8. கனவு குழந்தைப் பருவ விருப்பங்களை நினைவு கூறும். அவ்விருப்பங்கள் பாலுணர்ச்சி சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.

9. கனவுகள் பாலுணர்ச்சியை உணர்த்தும். மறைமுகமாகவோ, பிரபஞ்சக் குறியீடுகள் மூலமாகவோ, தனிக்குறியீடு மூலமாகவோ அல்லது வெளிப்படையாகவோ. அது நமது குழந்தைப்பருவ ஆழ்மன விருப்பமாகவும் இருக்கலாம்.

10. கனவின் காட்சிகள் கனவெண்ணங்களின் நம்பகமான படப்பிடிப்பல்ல. அவைகளை பல வகைகளிலும் சுருக்கியும் சிதைத்துமே கனவு காட்சிகளாக்குகிறது. எந்த முழுமையான கனவிலும் இடைவெளிகள் உண்டு. பல கனவெண்ணங்களை கனவு சென்சார் செய்து விட்டுவிடுவதன் மூலம் கனவுகள் துண்டுதுண்டாகத் தொடர்பற்றவைபோல் தோன்றுகின்றன. கனவை விளக்குவது இதனாலும் கடினமாகிறது. எனவே கனவென்பது ஒரு சுருக்க நிகழ்வு.( It is a work of condensation ).

11. கனவு ஒரு கழிவாகவும் பயன்படுகிறது. கனவு ஏன் வருகிறது, அதன் நோக்கம் என்ன என்பது பற்றிய ராபர்ட் என்பவரின் ஆராய்ச்சி இங்கு குறிப்பிடத்தக்கது. நாம் பெரும்பாலும் நம் நனவு வாழ்வில் எந்த முக்கியத்துவமும் கொடுத்து கவனத்தில் வைத்துக்கொள்ளாத அற்பமான விஷயங்களைப் பற்றியே அதிகமாக கனவுகாண்கிறோம். இதனாலும் கனவை விளக்குவது கடினமான காரியமாகிறது. மேலும் கனவுகாணத் தகுதியில்லாத ஒரு மனிதன் காலப்போக்கில் பைத்தியமாகிவிடலாம். மூளை ஏற்கனவே நம்மை மிகவும் பாதித்த, சிந்தனை செய்த எண்ணங்களின் சுமையால் அழுத்தப்பட்டுள்ளது. இச்சமயம் சம்மந்தமில்லாத அற்ப வி;களும் மூட்டையாகச் சேர்ந்து விட்டால் மூளை குழம்பி பைத்தியம்தான் பிடிக்கும். எனவேதான் கனவு நம் மூளை பதிவு செய்த தினசரி அற்பங்களின் சுமையிலிருந்து கனவுக்காட்சிகள் மூலம் நம் சுமையைக் குறைக்கிறது. அந்த அற்ப விஷயங்களை வெளியேற்றிவிடுகிறது. கனவின் நோக்கம், செயல்பாடு இதாகிறது என்கிறார்.

12. கனவுகள் அபத்தமாகத் தோன்றலாம். கனவை உருவாக்குகின்ற கனவெண்ணங்களில் ஏதாவதொன்று எதையாவது விமர்சனம் அல்லது கிண்டல் செய்கின்ற நோக்கம் கொண்டிருக்குமானால் கனவு அபத்தமானதாக இருக்கும். ஒரு முரண்பாட்டை எடுத்துச் சொல்ல வரும் கனவும் அபத்தமானதாகவே இருக்கும். ரொம்பவும் அபத்தமாகத் தோன்றுகின்ற கனவுகள் மிகவும் ஆழமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கலாம். எனவே கனவுகள் அபத்தமாகத் தோன்றலாம். ஆனால் எப்போதும் அப்படியிருப்பதில்லை. கனவெண்ணங்கள் அபத்தமானவை அல்ல, நாம் மனநோயாளியாக இல்லாதவரை.

13. கனவுகள் எதிர்காலத்தை முன்கூட்டியே அறிவிக்கும் தன்மை வாய்ந்தவை. இக்கருத்து தவறானதென்று வாதிடுவதற்கில்லை. இயற்கை உளவியலில் இதற்கு விளக்கம் காண முடியும் என்று ஃப்ராய்ட் கூறுகிறார்.

இக்குணாம்சங்கள் அத்தனையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. ஒன்றை விளக்கும்போது மற்றொன்று தெளிவாகலாம். கனவின் குணாம்சங்களைப் பற்றிய ஒரு சிறு குறிப்பே இது. இவ்வளவுதான் என்று சொல்வதற்கில்லை. மேலும் முக்கியமான தன்மைகளை தனித்தனியாக சற்று விரிவாகப் பார்க்கலாம்.

கனவை உருவாக்குவது எது?

நாம் தூங்கும்போது நம் தூக்கம் பாதிக்கப்பட்டால், அதற்கு பதில்போல, ஒரு எதிர்ச்செயல்பாடாக கனவு இருக்கிறது. அஜீரணக் கோளாறினாலேயே கனவு ஏற்படுகிறது என்ற முதுமொழியை இங்கே பொருத்திப்பார்க்கலாம்.

கனவுகள் தெய்வத்தின் விருப்பம் கொண்டு உருவாவது என்ற நம்பிய நம் மூதாதையர்கள் அதன் காரணிகள் யாவை என அறியும் முயற்சியில் ஈடுபடவில்லை. கனவு ஒரு நம்பிக்கை சார்ந்த விஷயமாக இருந்துவிட்டது. எனவே அது விஞ்ஞானத்தின் பிரச்சனையாயிற்று. பல சந்தேகங்கள், ஆராய்ச்சிகளுக்குப்பின், கனவு உண்டாவதற்கு பல வகைப்பட்ட காரணங்கள் உண்டு எனவும், அது உளவியல் ரீதியாகவுமிருக்கலாம், உடலியல் ரீதியாகவுமிருக்கலாம் என்றும் விஞ்ஞானம் கண்டுபிடித்தது. உடல் ரீதியாக கனவைத்

தூண்டுபவைகளில் புறஉணர்வுத் தூண்டுதல் மற்றும் உள்ளூறுப்பு உணர்வுத் தூண்டுதல் ஆகியவை பற்றி சற்று விரிவாக பார்க்க வேண்டியது அவசியம்.

புற உணர்வுத்தூண்டுதல் ((External Sensory Stimuli)

1883 – 84 வாக்கில் ஸ்ட்ரம்ப்பெல் என்ற மருத்துவர் அனஸ்தீஸியா எனப்படும் உணர்வற்ற தன்மையினால் பாதிக்கப்பட்ட தன் நோயாளி ஒருவரைப் பற்றிய குறிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் அந்த நோயாளியின் முக்கியமான சில, புற உலகிற்குத் திறந்திருக்கிற, உணர்வு உறுப்புக்களை மூடிவிட்டால் அவர் தூங்கிவிடுவாராம் என்று குறிப்பிடுகின்றார். உதாரணமாக வாயையும் செவிகளையும் மூடிவிடுவதாக வைத்துக் கொள்வோம். உடனே அவர் தூங்கிவிடுவார்.

கேட்பதற்கு விந்தையாக இருக்கும் இது நாமும் நம்மை அறியாமல் பின்பற்றுவதுதான். திட்டமிட்டு அதை நாம் செய்கிறோம் என்ற பிரக்ஞையில்லாமலிருக்கிறோம். அவ்வளவுதான். இது தவிர வித்தியாசம் எதுவுமில்லை நமக்கும் அந்த நோயாளிக்கும். நம்மால் உணர்வு உறுப்புகளுக்கு உணர்வுத்தூண்டுதல் முழுமையாகச் செல்லாமல் தடுக்கவோ, உணர்வு உறுகின்ற தன்மையை அந்த உறுப்புகளிலிருந்து பிரித்துவைக்கவோ முடியாது. ஸ்ட்ரம்ப்பெல்லின் பரிசோதனையை நாமும் தினம் தினம் நம்மையறியாமல் செய்து பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். நாம் உறங்கச்செல்லும்போது என்ன செய்கிறோம்? மிக முக்கிய உணர்வு உறுப்புகளாகிய கண்களை மூடிக்கொள்கிறோம் அல்லவா?

என்றாலும் சக்தி வாய்ந்த எந்த உணர்வும் நம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்ப முடியும். உறக்கத்தில் நம்மை வந்தடைகின்ற அந்த தூண்டுதலே நம் கனவுகளுக்குக் காரணிகளாக அமையமுடியும். ஜெஸ்ஸன் என்பவர் இவ்வகையான புற உணர்வுத் தூண்டுதல்கள் மூலம் உண்டாகும் கனவுகளைப் பற்றிய சிறு பட்டியலைத் தருகிறார். அவர் கூறுகிறார் :

நம்மை தூக்கத்தில் வந்தடைகின்ற ஒவ்வொரு உணர்வும் அதற்குத் தொடர்புள்ள கனவுப் படிமங்களை அல்லது காட்சிகளை உருவாக்குகிறது. இடியின் சப்தம் நம்மை போர்க்களத்தின் நடுவே நிறுத்தலாம். சேவல் கூவினால் பயங்கரமாக ஒரு மனிதன் அலறலாம். கதவு கிறீச்சிட்டால் திருடர்கள் வரலாம் கனவில். நம் படுக்கைத்துணி இரவில் கீழே விழுந்து விட்டால் நாம் நிர்வாணமாக நடக்கலாம் அல்லது தண்ணீரில் விழலாம். நம் தலையணைக்குக் கீழ் தலை போய்விட்டால் கனவில் ஒரு பெரிய பாறைக்குக்கீழ் தலை நசுங்கலாம். விந்து பெருகிவிட்டால் காமாந்தகக் கனவுகள் வரலாம். சுடு தண்ணீரில் கால்களை வைத்துக்கொண்டிருந்த ஒருவர் தான் எட்னா என்ற எரிமலையின் மீது ஏறிவிட்டதாகவும் அதன் தகிப்பையும் கனவில் உணர்ந்தாராம். தலையைத் திறந்து கொண்டு உறங்கிய ஒருவருக்கு அவர் ஒரு மார்க்கச் சடங்கில் திறந்த தலையுடன் கலந்து கொள்வதாகக் கனவு வந்ததாம். நமக்கு திருப்பதிக்குப்போய் மொட்டையடித்துக் கொண்டு வருவதாகவோ அல்லது அர∴பாத் மைதானத்தில் மொட்டைத்தலையுடன் செல்வதாகவோ கனவு வரலாம்.

மோரி என்ற ∴ப்ரெஞ்சுக்காரர் கனவுகளைப் பற்றி பல பரிசோதனைகள் நடத்தியவர். அவர் கண்ட இரண்டு பிரபலமான கனவுகளை இங்கு சொல்வது பொருந்தும்.

அவர் உறங்கிக்கொண்டிருந்தபோது அவர் நெற்றியில் ஒரு துளி நீர் விடப்பட்டது. உடனே அவர் தான் இத்தாலியில் இருப்பதாகவும் பயங்கரமாக வியர்த்துக் கொட்டுவதாகவும் ஆர்விடோ எனும் வெள்ளைநிற மதுபானம் அருந்திக்கொண்டிருப்பதாகவும் கனவு கண்டார்.

இன்னொரு கனவில் அவர் உடல்நலமில்லாமல் படுத்திருக்கிறார். அவரது தாயாரும் பக்கத்தில் உள்ளார். அது நெப்போலியனின் பயங்கர ஆட்சிக்காலம். பலபேர் கொலைசெய்யப்படுகின்ற காட்சியை தானே பார்க்க நேரிடுகிறது. கடைசியில் இவரையும் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்கிறார்கள். கில்லட்டின் என்று சொல்லப்படும் கொலைக்கருவியின் கீழ் இவர் தலை பலவந்தமாக வைக்கப்படுகிறது. தன் தலை தன் உடலிலிருந்து துண்டிக்கப்படுவதை அவர் காண்கிறார்.

மிகுந்த வேதனையுடன் அவர் விழித்தபோது தன் படுக்கையின் தலைமாட்டுப் பக்கம் கீழே விழுந்து தலையில் பலமாக அடிபட்டிருந்ததாம். பரிசோதனைக்குப்பின் ஒரு கில்லட்டினின் கூர்மையான தகடுகள் தலையில் விழுந்திருந்தால் எப்படியிருக்குமோ அதே விதத்தில் அவர் தலையில் அடிபட்டு நரம்புகள் பாதிக்கப்பட்டிருந்தனவாம்.

கனவுக்கான மூலக்காரணிகளுள் புற உணர்வுத் தூண்டுதலே மிகவும் நிச்சயப்படுத்தப்பட்டதாகும் என்று இம்மாதிரியான உதாரணங்கள் மூலம் அறிய முடிகிறது. நனவு வாழ்வில் பல வரு;கள் அல்லது பல மாதங்கள் எடுத்துக்கொள்ளும் ஒரு விஷயம் எப்படி கனவில் சில நிமி;களாக அல்லது வினாடிகளாக சுருங்கிவிடுகின்றன என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. அதோடு, புறஉணர்வுத் தூண்டுதலால் வரும் கனவுகளில் தூண்டிய உணர்வுகள் அதே வடிவங்களில் வருவதில்லை. தொடர்புள்ள வெள;வேறு வடிவங்கள் மூலம் நமக்கு உணர்த்தப்படும்.

அதோடு இன்ன புறஉணர்வுத் தூண்டுதலுக்கு இன்ன தொடர்புள்ள காட்சிதான் வரும் என்பதில்லை. ஒரே உணர்வுக்கு – உதாரணமாக அலாரத்தின் சப்தம் – பல தடவைகளில் வெள;வேறு காட்சிகள் வரலாம். எனவே யானையைக் கண்டால் வயிற்று வலி, பூனையைக் கண்டால் இடுப்பு வலி என்று முடிந்த முடிவாக கனவு அகராதி போடுவது சிறுபிள்ளைத் தனமானது.

மனது எந்த சூழலில் ஒரு குறிப்பிட்;ட உணர்வை வாங்கிக்கொள்கிறதோ அந்த சூழலுக்குத் தகுந்த வடிவங்களை கனவில் அடைகிறது என்று ஸ்ட்ராம்ப்பெல், வன்ட் போன்ற உளவியலாளர்கள் கூறுகின்றனர். நாம் காலார நடந்து போகும்போது தூரத்தில் தெரியும் ஒன்று குதிரைபோல் நமக்குத் தோன்றலாம். சற்று அருகில் நெருங்கியதும் அது அமர்ந்திருக்கும் பசு என்று முடிவு கட்டலாம். கடைசியில் அங்கே நாலைந்துபேர் அமர்ந்திருக்கும் ஒரு கும்பலாக இருக்கலாம். இதைப்போலவே தூக்கத்தில் நம்மை வந்தடைகின்ற உணர்வுகளும் நிச்சயமற்ற தன்மை கொண்டனவாக இருக்கின்றன. எனவே அதன் அடிப்படையில் கனவில் பின்னப்படும் காட்சிகள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தக்கபடி வெள;வேறாக இருப்பதில் ஆச்சர்யமில்லை. உதாரணத்திற்கு ஹில்டெப்ரான்டின் கடிகாரக் கனவுகளைப் பார்க்கலாம்.

ஹில்டெப்ரான் ஒரே புறஉணர்வுத் தூண்டுதலினால் மூன்று வேறு வேறு காட்சிகளைக் கொண்ட கனவுகளைக் காண்கிறார். அவற்றில் இரண்டைப் பார்க்கலாம்.

முதல் கனவு : ஒரு வசந்தகாலக் காலை வேளையில் அவர் காலாற நடந்து போகிறார். பச்சை வயல் வெளிகள் வழியே. பக்கத்து கிராமத்துக்கு வந்துவிடுகிறார். கிராமத்தினர் தங்களது சிறப்பு ஆடைகளில், கைகளில் பைபிளை ஏந்திய வண்ணம் தேவாலயத்தை நோக்கிச் சென்றுகொண்டுள்ளனர். ஆமாம்;. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை ஜபம் சற்று நேரத்தில் ஆரம்பித்துவிடும். மணி அடிப்பவன் தேவாலயத்தின் மீதேறி மணியை நெருங்கும் சப்தம் கேட்டது. இப்பொழுது தொழுகையை அறிவித்து மணி அடிக்கும். அதுபோலவே மணி அடித்தது. ஆனால் அடித்துக்கொண்டே இருந்தது. நிற்காமல். செவிப்பறைகள் கிழியுமாறு. விழித்துப் பார்த்தபோது அலாரம்தான் அப்படி அலறிக்கொண்டிருந்தது.

இரண்டாவது கனவு : வீட்டு சமையல்காரி நிறைய பீங்கான்களையும் கோப்பைகளையும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, டைனிங் ஹாலை நோக்கி கொண்டுபோய்க் கொண்டிருந்தாள். அதிலிருந்த சைனா கோப்பையொன்று நழுவிவிடும் நிலையிலிருந்தது. பயந்தபடியே வாசல்படியில் அவள் தடுக்கி நிலைதடுமாற, எல்லாம் கீழே விழுந்து ஒரே சப்த மயம். ஆனால் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஆனால் நொறுங்கும் சப்தமாக அல்ல. மணியடிப்பதுபோல. விழித்ததும் பக்கத்தில் அலாரம் அலறிக்கொண்டிருந்தது. அலாரத்தின் சப்தம் என்ற ஒரே காரணி ஏன் இரண்டு அல்லது மூன்று விதமான கனவுகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது இயற்கைதான். ஆனால் கனவுகள் அப்படித்தான்.

மூர்லி வோல்டு (Mourly Vold) என்பவர் ஒரு பரிசோதனை செய்தார். அதாவது தூங்கிக்கொண்டிருப்பவரின் உடலுறுப்பில் ஏதாவதொன்றின் நிலையை, உதாரணமாக கையை, மாற்றுவதன் மூலம் கனவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கண்டுபிடித்தார். கீழ்க்கண்டவாறு அவர் தன் முடிவுகளை அறிவிக்கிறார் :

1. கனவில் ஒருவரின் உடலுறுப்பு எந்த நிலையிலிருக்கிறதோ அதே நிலையில்தான் விழிப்பு நிலையிலும் இருக்கும். அதாவது கனவில் கை அசைந்து கொண்டிருந்தால் நனவிலும் அசைந்துகொண்டுள்ளதாக அர்த்தம்.

2. கனவு காண்பவரின் உடலசைவு அல்லது அசைவின்மை கனவில் இன்னொருவரின் உடலசைவாக அல்லது அசைவின்மையாகத் தெரியலாம்.

3. தூங்கிக் கொண்டிருப்பவரின் உடல் உறுப்புக்களின் அசைவை நிறுத்தினால் அல்லது தொந்தரவு செய்தால் அதுகூட கனவாக வரலாம். காலாட்டிக்கொண்டே தூங்குபவரின் காலை நிறுத்தினால் அதனால்கூட கனவு வரலாம்.

4. தூக்கத்தில் உள்ளவரின் உடலுறுப்புகளின் நிலை கனவில் மிருகமாக வரலாம். கனவில் வரும் நாய்களும் பேய்களும் நமது கையாகவோ காலாகவோ முகமாகவோ இருக்கலாம் !

5. குறிப்பிட்ட நிலையில் உள்ள தூங்குபவரின் உடலுறுப்புகள் அதற்கேற்ற எண்ணங்களையும் கனவில் ஏற்படுத்தலாம். உதாரணமாக விரல்களின் நிலையில் எண்களைப்பற்றிய கனவுகள் வரலாம்.

ஒருமுறை ஃப்ராய்டுக்கு விரையின் அடியில் ஆப்பிள் அளவு பெரிய கொப்புளம் வந்து மிகவும் அவஸ்தைப்பட்டார். ஒவ்வொரு அசைவும் சித்திரவதையாக இருந்தது. அந்த நேரத்தில் தூங்கும்போது வந்த கனவில் அவர் குதிரை சவாரி செய்துகொண்டிருந்தார்! குதிரைச் சவாரியை ஃப்ராய்ட் ஒருமுறைதான் நிஜவாழ்வில் செய்திருந்தாராம். அந்த கொப்புளத்தின் வேதனையோடு எந்த வேலையையும் செய்திருக்கலாம் கஷ்டப்பட்டு. ஆனால் ஒரு வேலை மட்டும் நிச்சயமாகச் செய்திருக்கவே முடியாது. அதுதான் குதிரைச்சவாரி செய்வது! ஆனால் அதை நன்றாகச் செய்வதாகத்தான் கனவு! அதாவது அந்த வேதனையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பத்தை கனவு நிறைவேற்றியிருக்கிறது.

நமது உடல் உறுப்புகளின் அனுபவங்களினால் ஏற்படும் கனவுகள் எந்த மாதிரியான காட்சிகளைத் தோற்றுவிக்கும் என்று முடிந்த முடிபாக கூற முடியாத நிலையில்தான் நாம் உள்ளோம்.

உள்ளுறுப்பு உணர்வுத் தூண்டுதல் ( Internal Organic Somatic Stimuli )

நமது உடலின் உள்ளே உள்ள உறுப்புக்களின் இயக்கங்களை நாம் எப்போதும் பிரக்ஞையில் கொள்வதில்லை. நம்மை அறியாமலேயே அவை நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் உள்ளுறுப்புக்கள் நோய்வாய்ப்படும்போது அவைகளின் அசௌகரியத்தை நாம் கனவுகள் மூலமாக அறியலாம். விழிப்பு நிலையில் அறிவதற்கு முன்பே கனவின் மூலமாக உள்ளுறுப்புகள் தங்கள் பிரச்சனைகளை வெளிப்படுத்திக் கொள்வது சாத்தியமே. அரிஸ்டாட்டில்கூட தனது னுந னுiஎiயெவழைn என்ற நூலில் கூறுகிறார். அதாவது அரிஸ்டாட்டில் காலத்திலேயே கனவுகள் நோயறிவிக்கும் என்ற உண்மை உணரப்பட்டுள்ளது. மேலும் நமது மனமானது அல்லது மூளையானது உடல் சம்பந்தப்பட்ட உணர்வு நிகழ்வுகளை, விழிப்பு நிலையில்விட, உறக்க நிலையிலேயே அதிகமாகவும் ஆழமாகவும் புரிந்து கொள்கிறது என்று ஸ்ட்ரம்ப்பெல் அறிவிக்கிறார்.

நாற்பத்துமூன்று வயதான ஒருத்தி அடிக்கடி கவலை தரும் கனவுகள் கண்டுகொண்டிருந்தாள். மருத்துவ பரிசோதனைகளுக்குப்பின் அவளுக்கு இருதய நோய் இருப்பது தெரியவந்தது. இருதயம், நுரையீரல் சம்மந்தப்பட்ட ஒழுங்கீனங்கள் அடிக்கடி கவலைக்கனவுகள் மூலமாக அறிவிக்கப்படுகிறது என்பது விஞ்ஞானரீதியாக எல்லா மருத்துவர்களும் ஒத்துக்கொண்ட ஒன்றாயிற்று.

குறைந்த நேரக்கனவாகவும் விழிக்கும் நிலையில் அது ஒரு பயங்கரமான மரணத்தை அல்லது ஒரு பயங்கர முடிவைக்கொண்டதாகவும் இருக்கும் கனவு இருதய நோயை அறிவிப்பதாக இருக்கும். மூச்சுத்திணறல், கூட்ட நெரிசல், ஓட்டம் முதலியவைகள் கனவில் வரும்போது அது நுரையீரல் பாதிப்பை அறிவிப்பதாக இருக்கலாம்.

ஆனால் நமது உள்ளுறுப்புகளின் ஆரோக்கியக் குறைவே கனவுகள் வரக்காரணம் என்று எண்ணுவது தவறாகும். ஆரோக்கியமானவர்களுக்கும், ஏன் எல்லோருக்குமே ஒவ்வோர் இரவும் கனவு வரலாம். எனவே கனவு கண்டவுடன் உடனே நமது உடலில் ஏதோ கோளாறு என்று எண்ணத்தேவையி;ல்லை. கனவுகள் நோயையும் அறிவிக்கும் அவ்வளவுதான்.

கனவுகளின் ஞாபக சக்தி

யானைகளுக்கு அபார ஞாபக சக்தி என்று சொல்வர். ஆனால் கனவுகளின் ஞாபக சக்தியோ பல நூறு யானைகளுக்குச் சமம். கனவில் வரும் காட்சிகள் யாவும் நம்முடைய நனவு வாழ்வின் அனுபவங்களிலிருந்து எடுக்கப் பட்டவையே. அதாவது நனவு வாழ்வின் அனுபவங்கள் கனவில் மறுபடியும் நினைவு கொள்ளப்படுகின்றன. நூற்றுக்கு நூறு அப்படியே நினைவுகூறப்படுவதில்லை என்பது வேறு விஷயம்.

ஆனால் கனவுக்கும் நனவுக்குமுள்ள இந்த தொடர்பு கனவையும் நனவையும் ஒத்துப்பார்த்தால் எளிதாகப் புரிந்துவிடும் என்று நினைத்தால் அது தவறு. பல சமயங்களில் இந்த தொடர்பு புரிந்து கொள்ளவே படாமல் (முடியாமல்) ரகசியமானதாகவே இருந்துவிடுகிறது. இந்த ரகசியத் திரையை கிழிப்பதற்கு கனவின் ஞாபக சக்தி பற்றி ஆழமாக அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

கனவில் கண்ட ஒரு விஷயம், ஒரு அம்சம், ஒரு பொருள், ஒரு ஆள், ஒரு பெயர் இன்ன பிற நனவில் நாம் கண்டதாகவோ தெரிந்ததாகவோ இருக்காது. நனவு வாழ்வில் அப்படிப்பட்ட ஒரு அனுபவமே கிடையாது என்றுகூட நாம் அடித்துக் கூறலாம். ஆனால் நீண்டதொரு இடைவெளிக்குப்பின் ஏற்படும் ஒரு புதிய அனுபவம் நாம் முன்னால் கனவில் கண்டது நமக்கு ஏற்கனவே தெரிந்ததுதான் என்பதை உறுதிப்படுத்தலாம்.

டெல்போஃப் (Delboeuf ) என்ற தத்துவவாதி ஒருவர் ஒரு கனவு கண்டார். தன் வீட்டு நீள வராந்தா பனியால் நிரம்பியுள்ளது. அதில் இரண்டு சிறிய பல்லிகள் பாதி புதையுண்டு உறைந்த நிலையில் உள்ளன. ஆனால் சாகவில்லை. இரக்கம் கொண்ட அவர் அப்பல்லிகளை விடுவித்து அவைகளின் வீட்டுக்குள் (ஓட்டைக்குள்) கொண்டு விடுகிறார். அதோடு அவைகள் சாப்பிடும் சில இலைகளையும் அதற்குள் போடுகிறார். அந்த இலைகளின் தாவரப்பெயர் அஸ்ப்ளீனியம் ரூட்டா முராலிஸ் என்றும் கனவு சொல்கிறது. கொஞ்ச நேரம் கழித்து பல்லிகளை விட்டுவந்த ஓட்டைகளை நோக்கி மேலும் இரண்டு, மூன்று, நான்கு என ஒரு பல்லிப் பட்டாளமே ஊர்வலமாக வர ஆரம்பிக்கிறது. ஜூராஸிக்பார்க் படத்தில் வரும் டைனோக்களின் கூட்டம் மாதிரி.

கனவிலிருந்து விழித்த பிறகு அவருக்கு ஒரே ஆச்சர்யம். ஏனெனில் அஸ்ப்ளீனியம் என்று ஒரு தாவரப்பெயரே அவருக்குத் தெரியாது. பின் எப்படி அப்படி ஒரு பெயர் கனவில் வந்தது? உண்மையில் அப்படி ஒரு பெயர் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தால் இருந்தது ! அஸ்ப்ளீனியம் ரூட்டா முராரியா என்றிருந்தது !

இந்த கனவை அவர் கண்டது 1862ல். அதன் பிறகு பதினாறு வருடங்கள் கழித்து தனது நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றார். அங்கே பூக்களைப் பதியவைத்து அதன் தாவரப் பெயர்களும் கீழே எழுதப்பட்;ட ஒரு ஆல்பம் இருந்தது. அதைப் புரட்டிக்கொண்டிருந்தார். அதில் அவர் கனவில் கண்ட அஸ்ப்ளீனியம் இருந்தது. வேடிக்கை என்னவென்றால், அதன் கீழே அதன் தாவரப்பெயர் அவர் கையாலேயே எழுதப்பட்டிருந்தது !

இப்போது எல்லாம் விளங்கிவிட்டது. 1860ல் (அதாவது பல்லிக் கனவு வந்ததற்கு இரண்டு வருடங்களுக்கு முன்) அவரது நண்பரின் சகோதரி அவரைப் பார்க்க வந்தார். அவர்தான் அந்த தாவர ஆல்பத்தைக் கொண்டுவந்தார். ஒரு தாவரவியல் நிபுணர் சொல்லச் சொல்ல, அந்த ஆல்பத்திலிருந்த ஒவ்வொரு பூவின் தாவரப் பெயரையும் அவளுக்காக அவர்தான் தன் கைப்பட எழுதினார். அப்போது எழுதியதுதான் அஸ்ப்ளீனியம் !

சரி. ஆனால் இதுவரை பாதிக்கனவுதான் விளங்கியுள்ளது. 1877ல் ஒருநாள் (பல்லிக் கனவுக்கு பதினைந்து வருடம் கழித்து) ஒரு பத்திரிக்கையை புரட்டிக்கொண்டிருந்தார். அதில் ஒரு பக்கத்தில் ஒரு பல்லிக்கூட்ட ஊர்வல ஃபோட்டோ அல்லது வரைபடம் இருந்தது. அந்த பத்திரிக்கை 1861ம் வருடத்தையது. அதைப் பார்த்தபின்தான் தானும் அந்த பத்திரிக்கையின் சந்தாதாரர் என்ற நினைவு வந்தது !

ஒருவருக்கு அடிக்கடி முஸ்ஸிடன் என்ற சொல் நினைவுக்கு வந்துகொண்டிருந்தது. அது ஃப்ரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு ஊரின் பெயர் என்பதைத் தவிர வேறு எதுவும் அவருக்குத் தெரியாது. பின் ஒரு கனவு கண்டார். அதில் அவர் ஒரு ஆளுடன் பேசுகிறார். அந்த ஆள் தான் முஸ்ஸிடனிலிருந்து வருவதாச் சொல்கிறான். அது எங்கே உள்ளது என்று கேட்க, அது டோர்டோன் என்ற பகுதியில் உள்ள ஊர் என்று சொல்கிறான்.

கனவு கொடுத்த இந்த தகவல்மீது நம்பிக்கை இல்லாமல் விசாரித்தார் அவர். கனவு சொன்ன தகவல் முழுக்க முழுக்க சரியானது என்று தெரிந்தது. கனவில் பெறப்படும் அறிவு நனவு வாழ்வினதைவிட துல்லியமானதாகவும் சரியாகவும் உள்ளது என்பதையும் கனவின் துல்லியமான ஞாபக சக்தியையும் இவை நிரூபிக்கின்றன.

ஒரு இசையமைப்பாளர் கனவில் ஒரு மெட்டைக் கேட்டார். அது ரொம்ப புதியதாகவும் இருந்தது. நனவு வாழ்வில் எங்குமே, எப்போதுமே கேட்டமாதிரி இல்லை. ஆனால் பல வருடங்களுக்குப் பிறகு ஒரு இசை பற்றிய புத்தகத்தில் அந்த மெட்டு பற்றிய குறிப்புகளைக் கண்டு ஆச்சர்யமுற்றார்.

தன் நோயாளிகளில் பலர் தங்கள் நனவு வாழ்வில் மறந்துவிட்ட பல மேற்கோள்களையும் சில கெட்ட வார்த்தைகளையும் கனவுகளில் நினைவு கூர்ந்ததாக ஃப்ராய்டு கூறுகிறார். ஒரு நோயாளி ஒருவர் தன் கனவில் ஹோட்டலில் போய் கோன்;ட்டுஸோசா என்ற ஒன்றைக் கொண்டு வரும்படி ஆர்டர் கொடுக்கிறார். ஆனால் அவர் ஆர்டர் செய்த பொருள் என்னவென்று அவருக்கே தெரியவில்லை. அது ஒரு போலந்து நாட்டு மதுபான வகை என்று ஃப்ராய்டு சொல்கிறார். பிறகு ஒருநாள் ஹோட்டல் வாசல் விளம்பரப் பலகையிலிருந்து ஃப்ராய்டு சொன்னது சரிதான் என்று அந்த நோயாளி அறிந்துகொள்கிறார்.

ஃப்ராய்டுக்;குக்கூட பல வரு;களாக ஒரு தேவாலயத்தின் கோபுரமும் ஒரு இருட்டான பகுதியும் அதையொட்டி பயமுறுத்தும் உருவங்களும் அடிக்கடி கனவில் வந்துகொண்டிருந்தன. 1895ல் அவர் இத்தாலியில் உள்ள பாடுவா நகர பல்கலைக்கழகத்திற்கு சென்றிருந்தார். மறுபடி 1907ல் சென்றபோதுதான் கனவில் கண்ட தேவாலய கோபுரத்தை அங்கே கண்டார். மேலும் அவர் கண்ட பயமுறுத்தும் உருவங்கள் தேவாலயத்தின் பக்கத்திலிருந்த மதுக்கடையின் சித்திர வேலைப்பாடுகள் எனவும் தெரிந்து கொண்டார்.

கனவு தனக்கான காட்சிகளையும் நிகழ்வுகளையும் அமைப்பதற்காக நனவு வாழ்வின் பல நிலைகளிலிருந்தும் வி;களை எடுத்துக் கொள்கிறது. அதில் முக்கியமானது குழந்தைப் பருவ அனுபவம்.

மோரி தன் குழந்தைப் பருவத்தில் தன் ஊருக்குப் பக்கத்தில் இருந்த ட்ரில்போர்ட் என்ற ஒரு கிராமத்திற்கு அடிக்கடி சென்று வருவார். அங்கு ஒரு பாலம் கட்டப் பட்டுக்கொண்டிருந்தது. அதன் மேற்பார்வையாளராக அவர் தந்தையார் இருந்தார். மோரி கண்ட கனவில் அவர் மறுபடியும் குழந்தையாகி ட்ரில்போர்ட் தெருக்களில் விளையாடிக்கொண்டிருக்கிறார். அப்போது ஒரு மாதிரியான சீருடை அணிந்த ஒருவர் வந்து தன் பெயர் ஸி எனவும் தான் அந்த பாலத்தின் வாட்ச்மேன் எனவும் கூறினார்.

இந்த கனவை மோரி நம்பவில்லை. ஆனால் தன் வீட்டு வேலைக்கார கிழவியிடம் கேட்டபோது அது உண்மைதான் என்பது உறுதியானது.

என்னுடைய கனவொன்றில் ஒரு டாக்டர் வந்தார். அவருடைய முகம் என் பள்ளிக்கூடத்து வாத்தியார் ஒருவரின் முகத்தைப்போல இருந்தது. இருவருக்கும் என்ன சம்பந்தம் என்று விளங்கவில்லை. என் கனவை அம்மாவிடம் சொல்லிக் கேட்டபோது, ஆமாம் அப்படி ஒரு டாக்டர் இருந்தார். அவருக்கு ஒற்றைக்கண் என்றார்கள். என் பள்ளிக்கூட வாத்தியாருக்கும் ஒற்றைக்கண்தான் ! அந்த டாக்டரை நான் பார்த்து முப்பத்தெட்டு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. அவரைப் பற்றி என் நனவு வாழ்வில் ஒருமுறைகூட எண்ணிப்பார்த்தது கிடையாது – என்று ஃப்ராய்டு கூறுகிறார்.

கனவுகளுக்கு அபார ஞாபக சக்தி உண்டென்பது மட்டுமல்ல, அவை கடந்த காலத்திலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளும் விஷயம் நமக்கு நனவு வாழ்வில் ஆர்வமில்லாததாக, முக்கியமற்றதாக இருக்கலாம். ஆனால் அது

கனவுக்கு முக்கியமானது. நம்முடைய நினைவாற்றலானது கனவில் நடந்து கொள்ளும் விதம் நினைவாற்றலைப் பற்றிய எந்த ஒரு கருத்தையும் முன்வைப்பதற்கு மிகவும் முக்கியமானது. நனவு வாழ்வில் பெறப்பட்ட எந்த அறிவையும் நாம் நிரந்தரமாக இழப்பதில்லை என்பதை இது உறுதி செய்கிறது. கனவென்பதே ஒருவிதமான ஞாபகப் படுத்திப் பார்ப்பதுதான் என்று சொல்லுமளவிற்கு நினைவாற்றல் கனவுகளுக்கான விளக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இப்படி நினைவுகூறும் கனவுகளைத்தான் ஹைபர்னீஸிக் ( (hypermnesic) கனவுகள் என்று சொல்வர். ஆனால் கனவுகளில் நினைவு கூறப்படுவதெல்லாம் பகுதிகள்தான். இதை ஒரு விதியாகவே வைத்துக்கொள்ளலாம். ரொம்ப விதிவிலக்காக ஒருசில கனவுகளில் மட்டும்தான் கனவு வாழ்வின் அனுபவங்கள் முழுமையாக அப்படியே நினைவுகூறப்படுகின்றன.

கனவு ஏன் மறந்துபோகிறது?

விழித்ததும் கனவு கரைந்து போகிறதென்பது காலங்கண்ட உண்மை. என்றாலும் அவைகளை நினைவுகொள்வது சாத்தியம்தான். இப்படி கனவுகளை நினைவுகொள்ள முயலும்போது, கனவின் ஒரு பகுதிதான் ஞாபகம் வந்ததாகவும் பெரும்பகுதி மறந்துவிட்டதாகவும் தோன்றும். விழித்தவுடன் இருக்கின்ற நினைவும் நேரம் செல்லச் செல்ல குறைந்து கொண்டே செல்லும். ஒரு கனவைக் கண்டு விழித்தவுடன் நினைத்துப் பார்ப்பதற்கும், ஆசுவாசமாக சாயங்காலம் எண்ணிப்பார்ப்பதற்கும் பாரதூரமான வித்தியாசம் உண்டு. நேரம் ஆகஆக, கனவின் நிறைய வி;கள் மறந்துவிட்டிருக்கும். கனவு கண்டோமா என்பதே சந்தேகத்திற்கு உரியதாகிவிடும். பொதுவாக அனைவருக்கும் இந்த அனுபவம்தான்.

ஆனால் விதிவிலக்காக சில கனவுகள் அப்படியே ஞாபகமிருக்கும். இருபத்தைந்து முப்பது வரு;களுக்கு முன் தன் நோயாளிகள் கண்ட கனவுகளைக்கூட அவர்கள் அட்சரம் பிசகாமல் ஞாபகம் வைத்திருக்க, அவற்றை தான் ஆராய்ச்சி செய்ய முடிந்ததாக ஃப்ராய்டு கூறுகிறார். முப்பத்தேழு வரு;களுக்கு முன்பு நான் கண்ட கனவு ஒன்று இன்னும் பசுமை மாறாமல் அப்படியே இருக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

விழிப்பு நிலையில் நாம் ஏன் பல விஷயங்களை மறந்துபோகிறோம்? அதே காரணங்களால்தான் கனவுகளையும் மறந்து போகிறோம். நனவில் நம் மனதில் தங்கக்கூடிய அளவுக்கு வலுவாக இல்லாத பலவீனமான விஷயங்களை நாம் மறந்துவிடுகிறோம். கனவுக் காட்சிகளும் அப்படித்தான். வலுவான காட்சிகள் நினைவிலும் பலவீனமானவை மறந்தும் போகின்றன. ஆனால் பலவீனம் காரணமாகத்தான் கனவுகள் மறந்து போகின்றன என்று அடித்துக் கூறிவிடவும் முடியாது.

ஏனெனில், பல சமயங்களில், கனவுகளில் வந்த மிகத்தெளிவான படிமங்கள், விஷயங்கள் மறந்து விடுகின்றன. ஆனால் நிழலாட்டம் பலகீனமான பல விஷயங்கள் நினைவில் உள்ளன.

மேலும், திரும்பத் திரும்ப ஒரு விஷயம் நடந்தால், அது நமது நினைவில் பதியும். இது நனவு வாழ்வில்தான் சாத்தியம். ஆனால் கனவுக்காட்சிகளோ மிகவும் பிரத்தியேகமானவை. வீடியோ படம்போல ரீவைண்டு பண்ணி பார்க்க முடியாது. ஒரு முறைதான். இதன் காரணமாகவும் கனவுகள் மறந்து போகின்றன.

கனவுகள் மறந்து போவதற்கு இன்னொரு முக்கியமான காரணம் அவற்றின் ஒழுங்கின்மை. காட்சிகள், கருத்துக்கள், உணர்ச்சிகள், வசனங்கள் எல்லாம் திரைப்படம்போல ஒன்றோடொன்று கோர்க்கப் பட்டு, வரிசைக்கிரமமாக இருந்தால் அதன் ஒழுங்கும் அர்த்தமும் நினைவுகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். ஒரேயொரு கவிதை வரியைக்கூட கண்டபடி சொற்களைப் பிரித்து மாற்றிப் போட்டுவிட்டால் மனசில் நிற்காது. நினைவில் தங்குவதன் காரணமே ஒழுங்கு, இசைவு, வரிசை, அர்த்தம் ஆகியவைதான். ஆனால் கனவோ எந்த ஒழுங்குமற்றது. இலக்கணம் மீறியதல்ல. இலக்கணமே இல்லாதது. அல்லது அதற்கென்று ஒரு தனி இலக்கணத்தை வகுத்துக் கொள்வது.எனவே அவை மறந்து போவதற்கு ஏதுவாக உள்ளன.

விழித்த மறு கணமே அது துண்டு துண்டாகச் சிதறிவிடுகிறது. ஆனால் ரொம்ப அரிதாக முழுவதுமாக நினைவு கொள்ளப்பட்ட கனவுகள் அதி வினோதமானவை, ஒழுங்கற்றவை என்று ரேட்ஸ்டாக் கூறுவது இதுகாறும் சொன்னதை உடைப்பதாக உள்ளது.

சூரியன் உதிக்கும்போது நட்சத்திரங்கள் தங்கள் ஒளியை இழந்துவிடுவதுபோல, விடிந்துவிட்ட(விழித்துவிட்ட) நாளுக்கான உணர்வுகள் உடலையும் மனதையும் வந்தடையும்போது, கனவுகள் தங்கள் பிடியை விலக்கிக் கொள்கின்றன. இதன் காரணமாகவும் அவை மறந்து போகின்றன.

கனவுகளைப் பற்றி பெரும்பாலோர் எந்தவித அக்கறையும் கொள்வதில்லை. அக்கறையின்மை, ஆர்வமின்மை காரணமாகவும் கனவு மறந்து போகிறது. கனவுகளை ஆராய்ச்சி செய்யும் ஒருவனுக்கு அப்படிச் செய்யாதவனைவிட அதிகமான கனவுகளும் வரும். கனவுகள் அதிகமான அளவில் நினைவிலும் இருக்கும். கனவுகளை நினைவில் வைத்திருப்பதில் உள்ள சிரமங்களும் கனவுகளை ஆராய்கின்ற ஒருவனுக்கு இருக்காது.

கனவுகள் ஏன் மறந்து போகின்றன என்பதைப் பற்றி ஆராய்ந்தவர்கள் மேலும் சில முடிவுகளுக்கு வந்தார்கள்.

காலையில் மறந்து போன ஒரு கனவு, அந்த நாளின் பிற்பகுதியில் நினைவுக்கு வரலாம். அல்லது அன்று நடக்கும் ஒரு அகஸ்மாத்தான நிகழ்ச்சி மறந்துபோன கனவை அல்லது அதன் முக்கிய குறிப்புகளை டக்கென்று நினைவுக்குக் கொண்டுவரலாம். ஆனால் கனவின் பெரும்பகுதி மறந்துவிட்டிருக்கும் பட்சம், நினைவு கொள்ளப் பட்ட பகுதிகள் எந்த அளவுக்கு கனவுக்கு உண்மையானவை என்றும் சொல்ல முடியாது. நம்முடைய ஞாபக சக்தி கண்டதை காணாததாகவும் காணாததை கண்டதாகவும் சொல்லி விடலாம்.

எனவே கனவுகளை நினைவு கூறும்போது நம்முடைய ஞாபக சக்தி கனவுகளை சிதைத்து விடுகின்ற வாய்ப்பு இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. இவைகள் கனவுகளை நினைவுகொள்வதில் உள்ள பிரச்சனைகள்.

கனவுகளின் உளவியல் ரீதியான தன்மைகள்

நமது மன இயக்கங்களின் விளைவாகத்தான் கனவுகள் உண்டாகின்றன என்பதுதான் கனவுகளைப் பற்றிய நமது ஆராய்ச்சியின் துவக்கம். எனினும் உருவாகிவிட்ட அதாவது தயாரிக்கப்பட்டுவிட்ட ஒரு கனவானது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அதன் தனித்த, அற்புதமான இயக்கத்தில் அதற்கு பிரம்மா நாம்தான், நம் மனம்தான் என்பதையே நாம் மறந்து விடுகிறோம். நான் கனவு காண்கிறேன் என்று சொல்லாமல் ஒரு கனவு வந்தது என்று ஒரு தனித்த அந்தஸ்தை அதற்கு கொடுக்கத் தயங்குவதில்லை நாம்.

கனவுகள் பெரும்பாலும் கண்ணால் காணக்கூடிய காட்சிகள் அல்லது படிமங்கள் (எளைரயட iஅயபநள) மூலமாகவே சிந்திக்கின்றன. தேவைக்கேற்றபடி சப்த படிமங்களையும் மற்ற புலன் சார்ந்த படிமங்களையும் உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்கின்றன. விழிப்பு நிலையில் நாம் கருத்துக் கோள்களை சிந்திப்பதுபோல, கனவுகள் காட்சி ரூபத்தில் சிந்திக்கின்றன. கனவு என்பதே காட்சி வடிவ சிந்தனை என்று சொல்லலாம்.

இவ்வகை காட்சிகள் மூலமாக, கனவுகள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை உருவாக்குகின்றன. அந்த காட்சிகள் ஏதோ ஒன்றை நிகழ்த்துகின்றன. எனவே கனவில் நாம் சிந்திப்பதில்லை. அனுபவிக்கிறோம். அதாவது உண்மையிலேயே நடப்பதாக நம்புகிறோம். விழித்த பிறகுதான், நாம் கனவு கண்டுகொண்டிருந்தோம் அல்லது வித்தியாசமானதொரு முறையில் சிந்தித்துக் கொண்டிருந்தோம், உண்மையில் எதுவும் நடக்கவில்லை என்பது புரியும். பகல் கனவுக்கும் (day-dreaming) உண்மையான கனவுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் இதுதான். பகல் கனவென்பது வெறும் கற்பனை என்பது நமக்கே தெரியும்.

புற உலகத் தொல்லைகளிலிருந்து நமது மனமும் நாமும் விடுபட்டிருக்கும்போதுதான் தூக்கமும் கனவும் சாத்தியமாகிறது. ஆனால் தொல்லை என்று சொல்லும்போது அது மனிதனுக்கு மனிதன் வித்தியாசப் படுகிறது. ஒருவனுடைய தொல்லை இன்னொருவனுக்கு தாலாட்டாகும் வாய்ப்பும் உண்டு. விளக்கு எரியும்போதே தூங்கிப் பழகியவனுக்கு இருட்டில் தூக்கம் வராது.

தூங்கும்போது மனது புற உலகிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறது. ஆனால் தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப் படுவதில்லை. தூங்கும்போது கேட்கவோ உணரவோ முடியாதெனில் தூங்குபவனை எழுப்பவே முடியாதே !

புற உலகத் தூண்டுதல்களின் வலிமையினால் மட்டும் தூங்கும் ஒருவன் எழுந்துவிடுவதில்லை. அவனை எழுப்ப உளவியல் ரீதியான, மனதோடு சம்பந்தப்பட்ட ஒரு சூழல் தேவைப்படுகிறது. தூங்கும் ஒருவனை ஏதோ ஒரு வார்த்தையைச் சொல்லி எழுப்ப முடியாது. ஆனால் அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் எழுந்து விடுவான். சிம்ரன், ஜோதிகா என்று சொன்னாலும் எழலாம். ஏனெனில் அவர்களும் அவன் மனதோடு மிகவும் சம்பந்தப்பட்டவர்கள்!

எனவே தூங்குகின்றவனுடைய மனமானது புற உலகிலிருந்து அவனை வந்தடையும் தூண்டுதல்களுக்கிடையேயான வித்தியாசத்தை உணர்கிறது. அதனால்தான் ஒரு குறிப்பிட்ட புற உணர்வுத் தூண்டுதல் சூழ்நிலையின் இருப்பும் இல்லாமையும்கூட அவனது தூக்கத்தைக் கலைக்க வல்லதாயுள்ளது. அதனால்தான் ஆலையின் சப்தத்திலேயே உறங்கிப் பழக்கப்பட்டவன் கரண்ட் போனால் விழித்துக் கொள்கிறான். இருட்டில் தூங்கிப் பழகியவன் திடீரென்று ஸ்விட்ச் போட்டால் (ஒளி வந்தால்) விழித்துக் கொள்கிறான். தூக்கம் கலையாத சூழ்நிலைகளே கனவுகளுக்கு ஏற்றவை என்பதை சொல்லத் தேவையில்லை.

கனவுகள், அதன் காட்சிகள் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்பில்லாதவையாக உள்ளன. முரண்பாடுகளை அவைகள் எளிதாக ஏற்றுக் கொள்கின்றன. எந்த எதிர்ப்புமின்றி. நடக்க முடியாதவைகளை அவைகள் இயற்கையென ஏற்றுக்கொள்கின்றன. தர்க்க ரீதியான அறிவுக்கு அவை எந்த முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. கனவுகளில் பேசுவதைப் போலவோ நடப்பதைப்போலவோ ஒருவன் நிஜ வாழ்வில் செய்ய முயன்றால் அவன் பைத்தியமென கணிக்கப் படுவான்.

ஒன்றுக்கொன்று தொடர்பற்ற தன்மையானது கனவுகளுக்கு அடிப்படையானது. அதாவது ஒரு மூளையுள்ள மனிதனின் மன இயக்கங்கள் எல்லாம் ஒரு முட்டாளுடையதாக மாறிப்போனால் உள்ள நிலைமைதான் கனவினுடையது. மூன்றையும் மூன்றையும் பெருக்கினால் இருபதாகும். நாய் கவிதை பாடும். வருடங்கள் நிமிஷங்களாகும். கனவில் எல்லாம் நடக்கும். ஆச்சர்யங்களின்றி. அதுதான் இயற்கை என்பதைப் போல்.

கனவில் ஒழுக்க உணர்வு

கனவுகள் மனிதனின் நல்லது கெட்டது பற்றிய பிரக்ஞையைக் கொண்டுள்ளனவா என்ற கேள்விக்கு உளவியலாளர்கள் ஆம் என்றும் இல்லை என்றும் பதில் தந்துள்ளனர்.

நனவில் நாம் இருப்பதைவிட நல்லவனாக நாம் கனவில் மாறுவதில்லை. மாறாக, நம் மனசாட்சி கனவில் தூங்கிவிடுகிறது. எந்தவித விருப்பு வெறுப்போ வருத்தமோ இன்றி நாம் கனவில் திருடலாம், வன்முறை நிகழ்த்தலாம், கொலைகூட செய்யலாம் என்று ஜெஸ்ஸன் கூறுகிறார்.

வோல்கெல்ட் (Volkelt) கூறுகிறார் : பால் உறவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் கனவு காண்பவன் கட்டவிழ்த்தது போல் உள்ளான். எந்தவித வெட்கமும் அடைவதில்லை. தான் மட்டுமல்லாது, தான் நனவு வாழ்வில் மிகவும் மதிக்கும் சிலரோடு விரும்பத் தகாத காரியங்களில் மிகவும் இயற்கையாக ஈடுபட்டிருப்பதை அவன் காண்பான்.

இதற்கு நேர் மாறாகவும் சிலர் கருத்து வைக்கின்றனர். நிஜ வாழ்வில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோமோ அதற்கு மாறாக நாம் கனவினல் பேசுவதோ நடந்துகொள்வதோ இல்லை என்கிறார் Schopenhauer. ஒரு நல்லவன் கனவிலும் நல்லவனாகவே உள்ளான். கோபம், பொறாமை, வெறுப்பு போன்ற கெடுதிகளிலிருந்து அவன் தன்னை கனவிலும் காத்துக்கொள்கிறான். ஆனால் கெட்டவனோ கனவிலும் அப்படியே உள்ளான் என்கிறார் ஹாஃப்னர்((Haffner).

இந்த நிலைப்பாட்டில் உள்ளவர்கள் ஒழுக்கக் குறைவான கனவுகளை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட கனவுகள் ஒரு நல்லவனுக்கு வந்தாலும் அதற்கு அவர்கள் அவனை பொறுப்பாக்குவதில்லை. எப்படி ஒரு அபத்தமான கனவு வந்தால் அதை வைத்து கனவு கண்டவனின் அறிவில் கோளாறு உள்ளது என்று முடிவு செய்ய முடியாதோ அதே போல ஒழுக்கக் குறைவான கனவுகளுக்கு அதைக்கண்டவனும் பொறுப்பாக முடியாது என்பது இவர்களின் வாதம். ஆனால் இதில் விஷேம் என்னவென்றால், எல்லா கண்ணியமானவர்களுக்கும் அசிங்கமான கனவுகள் வரத்தான் செய்கின்றன என்பது ஒரு அழகான உண்மை !

ஷோல்ஸ் கூறுகிறார் : உண்மை கனவில் இருக்கிறது. வெளி உலகிற்கு நாம் எந்த முகம் காட்டிக் கொண்டிருந்தாலும் கனவில் நம் உண்மையான முகத்தை நாம் கண்டுகொள்வோம். உண்மையில் கண்ணியத்திற்குரிய ஒரு மனிதன் கனவில் கண்ணியக் குறைவாக நடந்து கொள்ள மாட்டான்.

இந்த பிரச்சனை பற்றி ஆழமாக ஆராய்ந்த ஹில்டெப்ரான்கூட மனிதன் தன் கனவில் புரியும் (தகாத) செயல்களுக்கு முழுமையாகப் பொறுப்பேற்க முடியாது. ஆனால் பொறுப்பு ஏற்காமல் இருக்கவும் முடியாது என்கிறார். மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல. மேலும், நம்முடைய நோக்கத்தின்மீது யாராவது மாசு கற்பிக்க முற்படும்போது, கனவிலும் நான் அப்படி நினைத்ததில்லை என்று நாம் கூறுவதுண்டு. நம்முடைய விழிப்பு நிலையில் நம் பிரக்ஞையில் நெருப்பில்லாமல் கனவில் புகையாது. ஏனெனில் கனவு எதையும் சுதந்திரமாக கண்டுபிடிப்பதில்லை. ஏற்கனவே இருக்கின்ற ஒன்றை வைத்துக்கொண்டுதான் அது வலை பின்னுகிறது.

எனவே கனவானது நம்முடைய விழிப்பு நிலையில் அறிய வழியில்லாத நம் மனதின் ஆழங்களுக்கு நம்மைக் கொண்டு செல்கிறது. அது மனிதனுடைய உண்மையான குணாம்சத்தைக் காட்டுகிறது. முழுமையாக அல்ல என்றாலும். இதுவே இப்படிப் பட்ட கனவுகளின் முக்கியத்துவம் ஆகும் என்பதாகக் கூறுகிறார்.

ஸ்ட்ரிக்கர் சொல்வதோடு இப்பகுதியை முடிக்கலாம் : கனவுகள் முழுமையாக மாயத்தோற்றங்களை மட்டும் கொண்டிருப்பதில்லை. உதாரணமாக ஒருவன் கனவில் கள்ளர்களைக் கண்டு பயப்படுவதாக வைத்துக் கொண்டால், அக்கள்ளர்கள் பொய் என்றாலும் அந்த பயம் உண்மை.

கனவுகளும் மன நோய்களும்

கனவுகளைப் பற்றிய ஆராய்ச்சியிலிருந்து கனவுகள் வெளிப்படுத்தும் மன நோய்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை என ஃப்ராய்ட் கருதுகிறார்.

கனவு காண்பவனின் நினைவும் மன நோயாளியின் நிலையும் ஒன்றே என்று உளவியலாளர் நினைக்கின்றனர். கனவு மன நோயின் ஆரம்பத்தை அறிவிப்பதாகக்கூட இருக்கலாம். ஒரே கனவிலும் மன நோய் தன்னை வெளிப்படுத்தலாம். அல்லது படிப்படியாக பல கனவுகள் மூலம் தெரியவரலாம். பைத்தியம் என்பவன் விழிப்பு நிலையிலேயே நடந்துகொண்டே கனவு காண்பவன் என்கிறார் ஜெர்மன் தத்துவ ஞானி கான்ட். பைத்தியம் என்பது விழிப்பு நிலையில் ஏற்படும் கனவு என்கிறார் க்ராஸ்(Krauss). கனவு ஒரு குறுகிய கால மனநோய். மனநோய் என்பது ஒரு நீண்ட கனவு என்கிறார் N.ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நடக்கின்ற அனைத்தையும் நாம் கனவில் அனுபவிக்கிறோம் என்கிறார் வன்ட்.

மனநோயாளிக்கும் கனவு காண்பவனுக்குமிடையே பல ஒற்றுமைகளை தனது ஆராய்ச்சியில் காண்கிறார் ராட்ஸ்டாக். இந்த ஆராய்ச்சியின் விளைவு கனவையும் மனநோயையும் பற்றிய ஒரு முக்கிய கோட்பாடாக விரிகிறது. உதாரணமாக வறுமையினால் மனநோய்க்கு ஆளான ஒருவன் பெரிய பணக்காரனைப்போல பாவனைகள் செய்வதையும், தன் அன்பான குழந்தையை இழந்ததால் பைத்தியம் பிடித்த ஒருத்தி, அந்த நிலையில் தாய்மையின் மகிழ்ச்சியை அனுபவிப்பதையும் காணலாம். இதே போன்றதே நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவன் தான் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாக இருப்பதாக கனவு காண்பதும் ஏழை ஒருவன் தன்னை பணக்காரனாகக் கனவு காண்பதும்.

அத்தியாயம் – 3

கனவுகளை விளக்கும் முறை

கனவுகள் யாவையும் விளக்க முடியும். அதாவது கனவுகளை விளக்குவது என்பதன் பொருள் என்னவென்றால் கனவுக்கு ஒரு அர்த்தம் தருதலாகும். ஒவ்வொரு கனவுக்கும் ஒரு அர்த்தமுண்டு. அது எவ்வளவு ரகசியமானதானாலும் சரி.

இரண்டு முறைகள்

கனவுகளை விளக்குவதற்கு ஆரம்ப காலத்திலிருந்தே இரண்டு முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. முதல் முறை, ஒரு கனவை அப்படியே முழுசாக எடுத்துக்கொண்டு அதற்கு பதிலாக வேறொன்றை, வேறொரு அர்த்தத்தை அதனிடத்தில் வைப்பது. இது குறியீட்டு விளக்க முறை (Symbolic Interpretation). பைபிளில் ஃபிர்அவ்னின் ((Pharaoh) கனவை யூஸூஃப் (Joseph) விளக்குவது இந்த வகையைச் சேர்ந்தது. ஏழு கொழுத்த பசுக்கள் ஏழு நோஞ்சான் பசுக்களை சாப்பிட்டுவிடுவதாக அவன் கனவு காண்கிறான். எகிப்தில் ஏழு வருடம் பஞ்சம் வரும் என்றும் அது, முந்தைய ஏழு வருடங்களின் செழிப்பையும் வளத்தையும் காலி செய்துவிடும் என்றும் யூஸூஃப் அதற்கு விளக்கம் கொடுக்கிறார். இங்கே பசுக்கள் பஞ்சத்திற்கும் செழிப்புக்கும் குறியீடு.

இறந்த தனது தந்தையை எரியூட்டுவதற்கு முந்திய நாளிரவு ஃப்ராய்ட் ஒரு கனவு காண்கிறார். அதில் அவர் அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ் அல்லது போஸ்டரைப் பார்க்கிறார். அது நீங்கள் ஒரு கண்ணை மூடுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள் என்று சொல்கிறது.

தந்தையின் ஈமச்சடங்குகளை மிகவும் எளிமையாகச் செய்யவே ஃப்ராய்ட் விரும்புகிறார். தந்தையின் விருப்பத்திற்கிணங்க. ஆனால் மற்ற உறவினர்கள் அவ்வளவு எளிமையாகச் செய்வதை விரும்பவில்லை. ஈமச்சடங்கிற்கு வருபவர்கள் முன்னிலையில் அந்தஸ்து குறைவாக இருக்கக்கூடாது என்பது அவர்களுடைய வாதம்.

இந்தப் பிரச்சனைக்குத் தீர்வாக கனவு வருகிறது. ஒரு கண்ணை மூடினால் கண்ணடிப்பதுபோல் இருக்கும். அதாவது உறவினர்கள் சொல்வதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கனவு சொல்வதாக ஃப்ராய்ட் எடுத்துக்கொள்கிறார். இதுவும் குறியீட்டு விளக்கம்தான்.

கனவுகள் வருங்காலத்தைச் சொல்பவையாக உள்ளன என்ற கருத்தே பைபிள் காலத்திலிருந்து, தீர்க்கதரிசிகளின் காலத்திலிருந்து பெறப்பட்ட எச்சம்தான் என்று ஃப்ராய்ட் கருதுகிறார். இந்த குறியீட்டு விளக்கங்கள் யாவும் வருங்காலத்தைச் சுட்டுபவையாகவே பெரும்பாலும் உள்ளன என்றாலும் இப்படித்தான் குறியீட்டு விளக்கம் தரவேண்டும் என்பதற்கான அளவுகோல்களோ முறைகளோ எதுவும் கிடையாது.

எனவே இவ்வகை விளக்கங்களில் வெற்றி என்பது விளக்குபவரின் தகுதியைச் சார்ந்தே இருந்தது. இப்படி விளக்கக் கூடியவரும் அசாதாரணமானவராகவும் சிறப்புத் தகுதிகள் உள்ளவராகவும், அருள்பாலிக்கப்பட்ட தெய்வீகமானவராகவும் கருதப்பட்டார். ஆனால் இந்தவகை விளக்கங்கள் புரிந்து கொள்ள கடினமான, குழப்பமான கனவுகளை விளக்கப் போதுமானதாக இல்லை.

இரண்டாவது முறையை அவிழ்க்கும் முறை ((Decoding Method) என்று சொல்லலாம். இந்த முறையானது கனவை ஒரு சங்கேத பாஷையாக எடுத்துக்கொண்டு, தீர்மானிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் கனவை விளக்க முற்படுகிறது. இது கனவை மட்டும் பார்க்காமல், கனவு காண்பவருடைய குணம் மற்றும் அவரது சூழ்நிலை, வாழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

எனவே இந்த முறைப்படி, ஒரே கனவு நாலு பேருக்கு நாலு விதமாக அர்த்தப்படல் சாத்தியமாகிறது. கனவை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்ளாமல் அதன் பகுதிகளை தனித்தனியே இந்த முறை அலசுகிறது. கனவுகள்

குழப்பமானதாகவும் புரிந்து கொள்ள கடினமானதாகவும் இருந்ததுதான் இந்த அவிழ்க்கும் முறை வரக்காரணமாக அமைந்தது.

ஆனால் இந்த இரண்டு முறைகளுமே விஞ்ஞானத்தின் வரம்புகளுக்குள் வராதவை. முதல் முறையைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. இரண்டாவது முறையோ ஒரு அர்த்த அகராதியை (key dream-book) நம்பியுள்ளது.

ஆனால் ஒரு ஆச்சர்யம் என்னவெனில், சில கனவுகளை விளக்குவதற்கு இன்றைய விஞ்ஞானத்தால் முடியவில்லை. ஆனால் அந்தக் காலத்திலிருந்து போற்றிப் பாதுகாக்கப் பட்ட நம்பிக்கைகளே பெருமளவில் கனவுகளை விளக்க உதவுகின்றன என்பதை என்னுடைய அனுபவத்தில் அறிந்து கொண்டேன். எனினும் கனவுகளுக்கு அர்த்தம் உண்டு என்றும் அவைகளை விளக்க ஒரு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை சாத்தியம்தான் என்றும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் என்று ஃப்ராய்ட் கூறுகிறார்.

ஃப்ராய்டின் கனவு விளக்க அலசல் முறை

அடிப்படையில் ஃப்ராய்ட் ஒரு மனநோய் மருத்துவர். குறிப்பாக ஹிஸ்டீரியா எனப்படும் மனநோய்க்கு ஆளானவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலே அவர் பல வருடங்கள்; செலவிட்டார். அவருடைய அணுகுமுறைகளில் அவர் பெரும்பாலும் ஜோஸப் பிரவரையே பின்பற்றி வந்தார். மன அலசல் என்ற ஒரு முறையைக் கண்டுபிடித்ததில்தான் அவர் பிரவரிடமிருந்து தனித்துவிடுகிறார். இந்த ஹிஸ்டீரியா நோயாளிகளின் பிரச்சனைகளும் அதற்கான ஃப்ராய்டின் மனஅலசல் முறைத் தீர்வுகளும்தான் அவரைத் தன் நோயாளிகளின் கனவுகளையும் கிட்டத்தட்ட அதே முறையில் விளக்குவதில் கொண்டுபோய் விட்டது.

கனவானது மனநோயின் அறிகுறிகளில் ஒன்றாகவும் அதே சமயம் நோய்;க்கான தீர்வைச் சுட்டும் வழியாகவும் உள்ளது என்று அவர் கண்டார். அதை விளக்குவதற்கு நோயாளிகள் மருத்துவரோடு ஒத்துழைக்க வேண்டியிருந்தது. குறிப்பாக இரண்டு வகைகளில் அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

ஒன்று : மன இயக்கங்களை அவர்கள் முன்னைவிட உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

இரண்டு : மனதில் வருகின்ற எண்ணங்களையெல்லாம் சின்னது பெரியது, முக்கியமானது முக்கியமற்றது, நல்லது கெட்டது, நியாயமானது அநியாயமானது, அழகானது அசிங்கமானது போன்ற பாகுபாடுகள் எதுவும் செய்யாமல், தீர்ப்பு எதுவும் வழங்காமல், சாதாரணமாக நமது அறிவு செய்கின்ற விமர்சன வேலைகளையெல்லாம் செய்யாமல் வருவதையெல்லாம் அப்படியே மறைக்காமல், ஒன்று விடாமல் டாக்டரிடம் கொட்டிவிட வேண்டும்.

இது மிக முக்கியமானது. இந்த மனநிலைக்குச் சாதகமான உடல் சூழ்நிலையையும், (உதாரணமாக தளர்ச்சியாக சாய்ந்து கொள்வது, கண்களை மூடிக்கொள்வது), ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த ரீதியில் அவர்கள் தங்கள் கனவுகளையும் சொல்வார்களேயானால் அவைகளை பூரணமாக விளக்கி விடுதல் சாத்தியம் என்கிறார் ஃப்ராய்ட்.

கனவுகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்ளாமல், கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது முதல் படி. நீண்ட ஒரு கனவின் ஒரு பகுதியாக ஒரு சப்தம் கேட்பதாக வைத்துக்கொண்டால் அந்த சப்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று நோயாளியை டாக்டர் கேட்பார். நோயாளி சுதந்திரமாக சொல்வதை (free association) வைத்து கனவை ஃப்ராய்ட் புரிந்து கொள்வார்.

இந்த முறை பாரம்பரியமாக கையாளப்பட்டு வந்த குறியீட்டு முறைக்கு முற்றிலும் மாற்றமானது. ஆனால் அவிழ்க்கும் முறைக்கு மிகவும் நெருக்கமானது. எனினும் அதனினின்றும் வித்தியாசமானது. ஏனெனில் முடிந்த முடிபாக உள்ள எந்த ஒரு கனவு அகராதியையும் ஃப்ராய்டின் முறை நம்பியிருக்கவில்லை.

இந்த முறையில் ஒரே கனவு பத்து பேருக்கு பத்துமாதிரியான அர்த்தங்கள் கொடுக்கும் சாத்தியமுண்டு. இந்த மாதிரி படிப்படியாக அலசிப் பார்க்காமல் கனவின் அர்த்தங்களை தன்னால் கண்டுபிடிக்க முடியாது என்கிறார் ஃப்ராய்ட். இந்த ரீதியில் மனநோயாளியின் கனவில் தொடங்கி, சாதாரண ஆரோக்கியமானவர்களின் கனவிலிருந்து தன்னுடைய மற்றும் தன் குழந்தைகளின் கனவுகள்வரை இந்த அலசல் முறையைப் பயன்படுத்தி விளக்குகிறார்.

இர்மா கனவு

தன்னுடைய கனவு ஒன்றையே முதலில் உதாரணமாக தந்து விளக்குகிறார் ஃப்ராய்ட். இர்மா என்ற ஒரு இளம் விதவை ஹிஸ்டீரியா நோயாளிக்கு அவர் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.ஆனால் அவருடைய சிகிச்சை முழு வெற்றி அளிக்கவில்லை. இர்மாவின் மனக்கவலைகள் மற்றும் மன இறுக்கம் மறைந்ததே தவிர, உடல் உபாதைகள் குறைந்தபாடில்லை. ஃப்ராய்ட் சொன்ன ஒரு தீர்வையும் இர்மாவின் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் கோடை விடுமுறையின்போது சிகிச்சை தற்காலிகமாக தடைபட்டிருந்தது.

ஒருநாள் இர்மாவின் கிராமத்து வீட்டில் தங்கியிருந்த ஓட்டோ என்ற இன்னொரு மருத்துவ நண்பரை ஃப்ராய்ட் சந்திக்கிறார். இர்மா பற்றி விசாரிக்கிறார். பரவாயில்லை ஆனால் இன்னும் சரியாகவில்லை என்று ஓட்டோ சொல்கிறார். அந்த பதில் ஃப்ராய்டை எரிச்சல் படுத்துகிறது. அன்று இரவு அவர் ஒரு கனவு காண்கிறார்.

கனவில் ஒரு வீட்டின் பெரிய ஹாலில் விருந்துக்காக பலர் கூடியுள்ளனர். அங்கே இர்மா வருகிறாள். உடனே ஃப்ராய்ட் அவளை தனியாக அழைத்துச் சென்று விசாரிக்கிறார். அவள் தனது தொண்டை, வயிறு மற்றும் அடிவயிறு ஆகியவற்றில் தாங்கமுடியாத வலி இருப்பதாகச் சொல்கிறாள். அவர் வாயைத்திறந்து காட்டச் சொல்கிறார். அவள் தயங்குகிறாள். பின்னர் திறந்து காட்டும்போதும் ஆரம்பத்தில் சரியாகத் திறக்கவில்லை. நண்பர்-மருத்துவர் ஓட்டோவும் அங்கிருக்கிறார். ஓட்டோ அவளுக்கு ஒரு இன்ஜெக்; வேறு போட்டுள்ளார். இப்படிச்செல்கிறது கனவு.

இந்த கனவை வார்த்தை வார்த்தையாக, காட்சி காட்சியாக அலசி புரிந்து கொள்ள முயல்கிறார் ஃப்ராய்ட். இர்மா நிஜ வாழ்வில் மனம் திறந்து அவரிடம் எதையும் சரியாகச் சொல்லவில்லை என்பதே அவள் கனவில் வாயைத் திறக்கத் தயங்குவதும் சரியாகத் திறக்காததும் குறிக்கிறது என்றும் மேலும் அவளுடைய வேதனைகளுக்கு தான் காரணமல்ல அந்த ஓட்டோதான் காரணமாக இருக்கவேண்டும் என்ற தனது விருப்பத்தை கனவு நிறைவேற்றுவதாகவும் கூறி முடிக்கிறார்.

கனவின் முக்கியமான தன்மையான விருப்ப நிறைவேற்றம் என்பதை அவர் இக்கனவின் விளக்கத்தின் மூலம் ஸ்தாபிக்க முயலுகிறார்.

அத்தியாயம் – 4

கனவென்பது விருப்ப நிறைவேற்றம்

(A Dream is the Fulfilment of a Wish)

ஒரு இசைக்கருவியின் மீது எதிர்பாராமல் நடந்த தாக்குதலால் உண்டாகும் வரையறுக்கப் படாத அபஸ்வரங்கள் அல்ல கனவுகள். மாறாக, அவைகள் முழுக்க முழுக்க அர்த்தங்கள் பொதிந்தவை. அவைகள் நமது ஆசைகளின் நிறைவேற்றங்கள். நமது கனவுகள் நனவாவது முதலில் கனவுகளில்தான் !

கனவுகள் நமது ஆசைகளை நிறைவேற்றுகின்றன என்று சொல்லிவிட்டோம். ஆனால் இது எல்லாக் கனவுகளுக்கும் உள்ள பொதுவான குணம்தானா அல்லது சில குறிப்பிட்ட கனவுகளுக்கு மட்டும்தானா என்று பார்ப்பது அவசியம். ஒரு கனவு ஆசையை நிறைவேற்றுவதாகவும், இன்னொன்று பயத்தை நிறைவேற்றுவதாகவும், இன்னொன்று சிந்தனையை, இன்னொன்று வெறும் ஞாபகத்தைக் காட்டுவதாக – இப்படி இருக்கலாமல்லவா?

ஆனால் இந்த குழப்பங்கள் எதுவும் தேவையின்றி, விருப்ப நிறைவேற்றக் கனவுகள் யாவும் மிகவும் வெளிப்படையாக அமைகின்றன. இதை நிரூபிப்பது மிகவும் எளிது. ஆனால் இத்தகைய கனவுகளின் ஒளிவு மறைவற்ற இந்த மொழி எப்படி நம் முன்னோர்களுக்கு புரியாமல் போனது என்பதுதான் ஆச்சர்யமாக உள்ளது.

உதாரணமாக, ஆலிவ் அல்லது அதையொத்த அதிகமாக உப்பிடப்பட்ட உணவை நான் மாலையில் சாப்பிட்டால், இரவில் நிச்சயமாக தாகம் எடுக்கும். அந்த தாகம் என் தூக்கத்தைக் கலைத்து எழுப்பிவிடும். ஆனால் விழிப்பதற்கு முன் கனவு வரும். இப்படி வரும் கனவுகளிலெல்லாம் ஒரே காட்சிதான். நான் எதையாவது குடித்துக் கொண்டிருப்பேன். பிறகு விழித்துவிடுவேன். உண்மையிலேயே எதையாவது குடித்து என் தாகத்தைத் தணித்துக்கொள்ள. குடிக்க வேண்டுமென்ற விருப்பத்தை தாகம் ஏற்படுத்துகிறது. கனவு அந்த விருப்பத்தை நிறைவேற்றுகிறது. ஃப்ராய்டின் விதையில் அடிபட்டபோது கண்ட குதிரைச் சவாரி கனவையும் எடுத்துக்கொள்ளலாம்.

வசதியான கனவுகள்

விழிப்பு ஏற்படுத்தாமல் தூக்கம் தொடர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிற கனவுகள் எல்லாமே ஒருவகையில் வசதியான கனவுகள்தான். கனவுகள் தூக்கத்தைக் கெடுப்பதில்லை. அவை தூக்கத்தின் காவல் தெய்வங்கள். கனவுகள் வருவதன் முக்கியமான காரணங்களில் ஒன்றே நன்றாக தூங்கவேண்டும் என்பதுதான். ஒவ்வொரு வெற்றிகரமான கனவும் இந்த விருப்பத்தை நிறைவேற்றுகிறது.

பொதுவாக நான் நன்றாக உறங்குபவன். சின்னச் சின்ன தேவைகளுக்காகவெல்லாம் லேசில் எழமாட்டேன். என் தாகத்தைத் தணிக்க என் கனவே போதுமானதாக இருந்திருந்தால் நான் விழித்திருக்கவே மாட்டேன். அப்படிப்பட்ட கனவுகளை நான் வசதியான கனவுகள் ((dreams of convenience) என்று அழைக்கிறேன்.

வசதியான கனவுகளில், செயலின் இடத்தை கனவே எடுத்துக் கொள்கிறது. பல நேரங்களில் நமக்கு இத்தகைய கனவுகளே வருகின்றன. என் மருத்துவ நண்பன் ஓட்டோவைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற என் விருப்பத்தை நிறைவேற்ற அந்த இர்மா கனவே போதுமானதாக இருந்ததைப் போல, தண்ணீர் தேவைப்பட்ட கனவு இல்லாதது என் துரதிருஷ்டமே. இர்மா கனவு ஒரு வசதியான கனவு. என் இளமைக் காலங்களில் இத்தகைய கனவுகள் நிறைய வரும்.

என்னைப் போலவே தூக்கத்தில் ஈடுபாடு கொண்ட ஒரு மருத்துவ மாணவன் ஒரு கனவைச் சொன்னான். அவன் வீட்டுக்கார அம்மா எப்போதுமே அவனை காலையில் எழுப்பி விடுவாள். ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்று. ரொம்ப பொறுப்பாக. அன்று காலையில் அவள் வந்து அவனை சப்தம் போட்டு எழுப்பியபோது, அதற்கு பதிலாக, அவனுக்கு ஒரு கனவு வந்தது. அந்த கனவில் அவன் ஆஸ்பத்திரி படுக்கை ஒன்றில் இருக்கிறான். அதில், பெப்பி, மருத்துவ மாணவன், வயது 22 என்ற போர்டும் இருந்தது. நான் ஆஸ்பத்திரியிலேயே இருப்பதால், இனிமேல் நான் அங்கே போக வேண்டியதில்லை என்று கனவிலேயே அவன் சொல்லிக் கொண்டான். எனவே திரும்பிப் படுத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்து விட்டான்!

மாதவிடாய் கனவு

தன் மனைவிக்கு மாதவிடாய் வந்ததாக அவள் கனவு கண்டதாக ஒரு நண்பர் ஃப்ராய்டிடம் சொல்லிக்காட்டி விளக்கம் கேட்கிறார். மாதவிடாய் வராததால், வரவேண்டும் என்ற விருப்பத்தை கனவு நிறைவேற்றியிருக்கிறது. அதாவது, விடாய் வராததால் அவள் கர்ப்பமாகி இருப்பதற்கான அறிகுறிக் கனவு இது என்று ஃப்ராய்ட் விளக்குகிறார். இது ஏற்கனவே சொல்லப்பட்டதும்கூட.

பால் திட்டுக் கனவு

ஒரு குழந்தை பெற்ற ஒருத்தி தன் பனியனின் மேல்பக்கம் பால் போன்ற நிறத்தில் திட்டுத் திட்டாகத் தெரிவதாக கனவு கண்டதாக அவள் கணவன் கூற, அதுவும் கருவுற்ற அறிவிப்புதான் ஆனால் இரண்டாவது குழந்தைக்குக் கொடுப்பதற்கு பால் நிறைய சுரக்க வேண்டும் என்று அவள் விரும்புவதாக ஃப்ராய்ட் விளக்குகிறார்.

இம்மாதிரியான விருப்ப நிறைவேற்றக் கனவுகள் அடிக்கடி வரும். அதோடு அவைகள் எளிமையானதாகவும் சின்ன சின்ன கனவுகளாகவும் இருக்கும். இம்மாதிரியான கனவுகள் குழந்தைகளுக்கு அடிக்கடி வருகின்றன. அவைகள் வளர்ந்தவர்களின் கனவுகளைப் போல சுவாரஸ்யமானவைகளாக இருப்பதில்லை. ஆனாலும் குழந்தைகளின் கனவுகள் விருப்ப நிறைவேற்றக் கனவுகளுக்கு நல்ல உதாரணங்களாக அமைகின்றன.

குழந்தைகளின் கனவுகள்

ஒரு முறை ஃப்ராய்ட் தன் குழந்தைகளை ஏற்காடு கொடைக்கானல் மாதிரியான ஒரு மலைப்பகுதிக்கு சுற்றுலா அழைத்துச் செல்கிறார். சிம்னி ஹ்யூட் என்ற மலைப்பகுதியைப் பற்றி அவர்களிடம் அடிக்கடி சிலாகிக்கிறார். ஒவ்வொரு மலை கண்ணில் படும்போதும் இதுவா இதுவா என்று கேட்டுக்கேட்டு அவர் ஐந்து வயது மகன் நச்சரிக்கிறான். இல்லை என்ற பதில் அவனை ஏமாற்றிக் கொண்டே வருகிறது. மறுநாள் காலை சந்தோஷ முகத்துடன் அவன் வந்து சொல்கிறான் : நேற்று இரவு நாம் எல்லோரும் சிம்னி ஹ்யூட்டில் இருந்ததாக கனவு கண்டேன். ஏரியை முதன் முதலாக படகில் கடந்துசென்றபோது ரொம்ப சந்தோஷமாக இருந்தது ஃப்ராய்டின் மூன்று வயது மகளுக்கு. ஆனால் ஒரு வருத்தம். படகுப் பயணம் ரொம்ப சீக்கிரம் முடிந்துவிட்டது. ஆனால் அன்று இரவு கனவில் அவள் படகில் நீண்ட நேரம் மனதார சவாரி செய்துகொண்டிருந்தாளாம்!

(தொடரும்)

## கனவுகளின் விளக்கம் 2 - சிக்மண்ட் ஃப்ராய்ட்

Freud's 'The Interpretation of Dreams' Translated by Dr. AS. Mohamed Rafee ( Nagore Rumi)

முதல் பகுதி : http://abedheen.wordpress.com/2010/10/21/freud1/

**




அத்தியாயம் - 5

கனவில் சிதைவு

(Distortion in Dreams)

எல்லாக் கனவுகளையும் எப்படி விருப்ப நிறைவேற்றக் கனவுகள் என்று சொல்ல முடியும்? நமக்கு வரும் முக்கால்வாசிக் கனவுகள் கவலைக் கனவுகளாக (anxiety dreams) வேதனையை, பயங்கரத்தை, துயரத்தை வெளிப்படுத்துகின்ற கனவுகளாக அல்லவா உள்ளன? குறிப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இப்படிப்பட்ட கனவுகள்தானே வருகின்றன?

இதைப்போன்ற கேள்விகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் பதில் சொல்வது ஒன்றும் கடினமான காரியமல்ல. கனவுகளைப் பற்றிய எனது கோட்பாடு கனவின் வெளிவிஷயத்தை (manifest content) வைத்து உருவானதல்ல. அந்த கனவின் காட்சிகளை உருவாக்கிய எண்ணங்களை அடிப்படையாக வைத்தது. அது சொல்ல வரும் செய்தியை ஒட்டியது. கனவின் வெளிவிஷயத்திற்கும் உள்விஷயத்திற்கும் ; (latent content) இடையேயான வித்தியாசத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

கனவின் வெளிவிஷயம் கவலை தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் கேள்வி கேட்பவர்கள் யாராவது அப்படிப்பட்ட கனவுகளை விளக்க முன்வந்துள்ளார்களா? அப்படிப்பட்ட கனவின் உள்விஷயத்தை, அர்த்தத்தைப் புரிந்து கொண்டார்களா? வெளித் தோற்றத்திற்கு கவலைக் கனவுகளாகத் தோன்றுபவையும் உண்மையில் ஏன் விருப்ப நிறைவேற்றக் கனவுகளாக இருக்க முடியாது?

விஞ்ஞானபூர்வமான ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, ஒரு பிரச்சனையைத் தீர்ப்பது கடினமாக இருந்தால், அதையொட்டிய, அதோடு சம்பந்தப்பட்ட இன்னொரு பிரச்சனையில் ஈடுபடுவது முதல் பிரச்சனையைத் தீர்க்க உதவலாம் அல்லவா? ஒரு கொட்டையைத் தனியாக உடைப்பது கடினமென்றால் இன்னொன்றையும் சேர்த்து, இரண்டையும் உடைப்பது சுலபமல்லவா? எனவே, கவலைக் கனவுகள் எப்படி விருப்ப நிறைவேற்றக் கனவுகளாக இருக்க முடியும் என்ற கேள்வியிலிருந்து நாம் வேறொரு கேள்விக்குப் போய்விடலாம். தற்காலிகமாக.

அதாவது, விருப்ப நிறைவேற்றக் கனவுகள் ஏன் வெளிப்படையாக இல்லை? அவைகளுக்கு ஏன் விளக்கம் தேவைப்படுகிறது? இந்த கேள்விக்கு விடை கண்டுபிடித்தால், இரண்டுக்கும் விடை கிடைத்துவிடும்.

எனது இர்மா கனவையே எடுத்துக்கொள்வோம். ஓட்டோவின்மீது பழி போடவேண்டும் என்ற என் விருப்பத்தை நிறைவேற்றிய கனவு அது. ஆனால் இந்த விருப்ப நிறைவேற்ற விஷயத்தை, கனவை அலசி ஆராய்ந்து புரிந்துகொள்வதற்கு முன் புலப்படவேயில்லை. இதற்கெல்லாம் காரணம் கனவுகளின் நடத்தைதான். கனவுகள் விஷயங்களைச் சிதைக்கின்றன. இந்த சிதைவின் காரணமாகத்தான் கனவுகள் எளிதில் புரிவதில்லை. ஏனிப்படி கனவுகள் நடந்துகொள்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள மேலும் சில கனவுகளை ஆராய வேண்டியது அவசியம்.

ஃப்ராய்டின் மாமா பற்றிய கனவு

பின்புலம் : இரண்டு பிரபலமான, செல்வாக்குள்ள பேராசிரியர்கள் ஃப்ராய்டுக்கு பல்கலைக் கழகத்தில் உயர்பதவி தரவேண்டுமென சிபாரிசு செய்கிறார்கள். அது கேட்டு ஃப்ராய்டுக்கு சந்தோஷம். எனினும் எந்த பதவியையும் எதிர்பார்த்து ஏமாற வேண்டாம் என்று முடிவெடுக்கிறார். திராட்சைகள் இனிப்பென்றோ புளிப்பென்றோ நான் சொல்லவில்லை. ஏனெனில் அவை என் தலைக்கு மேலே ரொம்ப உயரத்தில் இருந்தன என்று அவரே சொல்கிறார்.

அதோடு, ஏற்கனவே ஆர். மற்றும் என். என்ற பேராசிரியர்களுக்கும் இதுபோன்ற சிபாரிசு செய்யப்பட்டு கடைசியில் அவர்கள் அப்பதவிகள் கிடைக்காமல் ஏமாந்தார்கள். அந்த ஆர். என்பவரும் ஃப்ராய்டை ஒருநாள் சந்தித்து பேசிவிட்டுப் போகிறார். அடுத்த நாள்காலையில் ஃப்ராய்டுக்கு ஒரு கனவு வருகிறது.

கனவு : என் நண்பர் ஆர். எனது மாமா. அவர் மீது எனக்கு அதிக பாசமுண்டு. அவருடை முகம் தெரிந்தது. கொஞ்சம் மாறியிருந்;தது. நீளவாக்கில் இழுக்கப்பட்ட மாதிரி.

கனவின் விளக்கம் : எனது நண்பர் ஆர். எனது மாமா. இதற்கு என்ன அர்த்தம் ? எனக்கு ஜோசப் என்று ஒரேயொரு மாமாதான். அவரைப்பற்றிய ஒரு சோகக்கதை உண்டு. பண விஷயம் ஒன்றில் மாட்டிக்கொண்டு சட்டத்தால் தண்டிக்கப்பட்டவர். மாமா ஜோசப் கெட்டவரல்ல. ஆனால் ஏமாளி என்று என் அப்பா சொல்வார். அப்படியானால், ஆர்.எனது மாமா என்றால் ஆர். ஒரு ஏமாளி என்று சொல்ல நான் ஆசைப்பட்டதாக அர்த்தம். ஆர்.உடைய முகமும் எனது மாமாவினதைப் போலத்தான் இருக்கும். எனவே கனவில் நான் கண்ட முகம் ஆர்.உடையதும் என் மாமாவுடையதும்தான்.

எல்லாம் சரி. என் மாமாவையும் ஆரையும் கனவு ஏன் ஒப்பிட வேண்டும் என்பது இன்னும் புரியவில்லை. மாமாவோ ஏமாளி. ஆர். எந்த குற்றமும் செய்யாதவர். இந்த இடத்தில் நண்பர் என்.னின் நினைவு வந்தது. அவரும் உயர்பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டு கிடைக்காமல் ஏமாந்தவர். அவர்மீது ஒரு பெண் தொடுத்த நீதிமன்ற வழக்கிருந்தது. அதைக் காரணம் காட்டியே பதவி கொடுக்காமலிருந்திருக்கலாம். உனக்கு அந்தமாதிரி எதுவுமே இல்லை. உனக்கு நிச்சயம் கிடைக்கும் என்று அவரே என்னிடம் கூறியுள்ளார்.

இப்போது விளங்கிவிட்டது. எனது மாமாதான் ஆர். அவரேதான் என். ஒருவர் ஏமாளி. ஒருவர் குற்றவாளி. நிஜவாழ்வில் அவர்கள் இருவரும் அப்படிப்பட்டவர்கள்தான் என்று நான் நினைக்கவில்லை. கனவு நினைக்கிறது. அப்போதுதான் எந்த அப்பழுக்குமற்ற எனக்கு அவர்களைப் போல உயர்பதவி நழுவிப்போவதற்கு வாய்ப்பில்லை. நான் மேலே மேலே போகவேண்டுமென்றால் அவர்கள் கீழே போகவேண்டும். அதுதான் என் விருப்பம். அல்லது கனவின் விருப்பம். அதை அது நிறைவேற்றியிருக்கிறது.

கனவின் விளக்கம் இன்னும் முடிந்துவிடவில்லை. ஒரு முக்கியமான பகுதி விளக்கப்படாமல் உள்ளது. அவர்மீது எனக்கு அதிக பாசமுண்டு என்பதுதான் அது. என் மாமா ஜோசப்மீது எனக்கு பாசம் எதுவும் இருந்தது கிடையாது. நண்பர் ஆர்மீது மரியாதை உண்டு. ஆனால் அது ஒரு ரத்தபாசமாகத் தோன்றுவதில் ஒரு செயற்கைத் தன்மையும் மிகைப்படுத்தப்பட்ட தன்மையும் இருந்தது. அந்த பாசக்காட்சி கனவின் உள்விஷயத்தில் என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

என் மகளுக்குத் தரப்பட்ட ஒரு ஆப்பிள் பழம் அவளுக்கு பிடிக்கவில்லை என்றால் அதைச்சாப்பிடாமலேயே அது நன்றாக இல்லை என்று சொல்வாள். என் நோயாளிகள் திடீரென்று குழந்தை மாதிரி நடந்துகொள்கிறார்கள் என்றால் எதையோ அவர்கள் சொல்ல விரும்பவில்லை, மறைக்க விரும்புகிறார்கள், குழந்தைத்தனம் ஒரு போர்வை என்று அர்த்தம்.

இதேதான் என் கனவிலும் நடந்துள்ளது. நண்பன் ஆர்மீது என் கனவெண்ணங்கள் கொண்ட ஒருவிதமான பொறாமையும் வெறுப்பும்தான் வெளிவிஷயத்தில் பாசமாக மலர்ந்துள்ளது அல்லது சிதைந்துள்ளது. உள்விஷயத்தின் சிதைவு எதிர்த்திசையை நோக்கி நகர்ந்துள்ளது. வெளிவிஷயத்தில்.

இவ்விதமான தலைகீழ் சிதைவுகள் நமது அன்றாட வாழ்வில் நடப்பதுதான். ஒரு முட்டாளை வாய்யா முட்டாளே என்று வெளிப்படையாக சொல்லமுடியாத சூழலில் வாய்யா அறிவாளி என்று தைரியமாகச் சொல்லலாம். அரசியல் வாதிகளும் எழுத்தாளர்களும் இன்றைக்கு செய்துகொண்டிருக்கிற காரியம் இதுதான். விமர்சனத்தின் கடுமையைப் பொறுத்து சிதைவின் தீவிரமும் இருக்கும்.

கனவுகளை உருவாக்கும்போது நமது மனம் இரண்டு விதங்களில் செயல்படுகிறது. இரண்டு மனம் மாதிரி. ஒன்று நமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. இன்னொன்று விமர்சனங்களை உத்தேசித்து அவற்றை சிதைக்கிறது. சிதைக்கப்பட்டு காட்டப்படுகின்ற வெளிவி;களை அலசும்போதுதான் அவை உணர்த்த வரும் செய்தியான உள்விஷயங்கள் அறியப்படுகின்றன.

அதிகார வெறிகொண்ட ஒரு ஆட்சியாளனுக்கும் அவனை வெறுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பனிப்போர் நடப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட மோசமான அதிகாரியை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்பினால் அந்த ஆட்சியாளன் என்ன செய்வான்? அந்த அதிகாரிக்கு பதவி உயர்வு கொடுப்பான்!

கனவை உருவாக்குகின்ற நம் இரண்டு மன நிலைகளும் மக்களையும் அந்த ஆட்சியாளனையும் போன்றதுதான். நீ வெறுப்பு என்றால் அது பாசம் காட்டும். நீ பிறப்பு என்றால் அது இறப்பைக் காட்டும். இதைப் புரிந்துகொண்டுவிட்டால், கவலைக்

கனவுகள் எப்படி விருப்ப நிறைவேற்றக் கனவுகளாக இருக்க முடியும் என்ற உண்மையைப் புரிந்து கொள்வது எளிது. மேலும் சில கனவுகளைப் பார்க்கலாம்.

விருந்துக் கனவு

என் விருப்பத்திற்கு நேர் எதிரான ஒரு கனவை நான் கண்டேன். அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று என் அறிவான நோயாளி ஒருத்தி கேட்டாள். அவள் கனவில் ஒரு இரவு விருந்து கொடுக்க நினைக்கிறாள். ஆனால் அன்று பார்த்து சுட்டுக் காயவைத்த (சால்மன் என்ற) மீனைத்தவிர வீட்டில் ஏதுமில்லை. வெளியே போய் எதாவது வாங்கிவரலாம் என்று நினைத்தால் அன்று ஞாயிறு! எல்லாக் கடைகளும் மூடியிருக்கும். சில கடைகளுக்கு டெலிஃபோன் செய்ய நினைத்து முயன்றபோது அது பழுதுபட்டிருந்தது. கடைசியாக இரவு விருந்து கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

விருப்ப நிறைவேற்றத்துக்கு நேர் எதிரான கனவுபோல் தோன்றும் இதை அலசிப்பார்க்காமல் முடிவுக்கு வர முடியாது. கனவுக்கான உடனடி காரணங்கள் கனவு கண்டதற்கு முந்திய மற்றும் அதற்கு முந்திய நாள் நிகழ்;ச்சிகள் அல்லவா?

கனவுக்கு முந்திய நாள் அவள் கணவன் அவளிடம் தான் மிகவும் குண்டாகிவிட்டதாகவும், இனிமேல் காலையில் எழுந்து உடற் பயிற்சிகள் செய்து உடம்பின் பருமனைக் குறைக்க வேண்டும் எனவும் குறிப்பாக, இரவு விருந்துக்கு யார் அழைத்தாலும் போகக்கூடாது எனவும் கூறினான்.

இந்த தகவல் எனக்கு போதுமானதாக இல்லை. மேலும் கேட்டதில் சில முக்கியமான விபரங்கள் கிடைத்தன. கனவு கண்டதற்கு முதல் நாள் தன் தோழியைப் பார்க்க அவள் சென்றாள். தோழியைப்பற்றி கொஞ்சம் அவளுக்கு பொறாமை உண்டு. காரணம் அந்த தோழியை அவள் கணவன் எப்போதுமே புகழ்ந்தே பேசுவான். ஆனால் இதில் ஒரு நிம்மதி என்னவெனில், தோழி ஒல்லியாக இருப்பாள். அவள் கணவனுக்கு குண்டுப் பெண்களைத்தான் பிடிக்கும்!

என்னை எப்போது உன் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கப் போகிறாய்? நீ எப்போதுமே விருந்து கொடுத்தால் நன்றாக கவனிப்பாய் என்றும் தோழி சொன்னாதகவும் அவள் சொன்னாள்.

போதும். விடை கிடைத்த மாதிரிதான். விருந்து சாப்பிட்டால் குண்டாகிவிடலாம் என்ற கருத்தை ஏற்கனவே அவள் கணவன் அவளிடம் விதைத்திருந்தான். தன் தோழிக்கு விருந்துகொடுத்து அவள் குண்டாகி விட்டால்? அவள் தன் இடத்தைப் பிடித்துக்கொள்ளும் வாய்ப்பை தானே அவளுக்;குத் தருவதாக அல்லவா அர்த்தம்? கூடாது. கூடவே கூடாது என்று அவள் முடிவு செய்துவிட்டாள். அந்த விருப்பத்தைத்hதான் கனவு நிறைவேற்றியுள்ளது!

இவ்வளவு சொன்ன பிறகும் ஒரேயொரு விஷயம் பாக்கியிருந்தது. கனவில் வந்த சுட்டு காயவைக்கப்பட்ட சால்மன் என்ற மீன்விஷயம்தான் அது. அதுபற்றிக்கேட்டபோது அவள் சொன்னாள் அவள் தோழிக்கு அது ரொம்ப பிடித்ததாம்!

இந்த கனவு இன்னொரு நுட்பமான தளத்தில் இயங்குகிறது. அது உளவியலைப் பொறுத்த அளவில் மிக முக்கியமானது. அதாவது, என் நோயாளியின் தோழியின் விருப்பம் தான் குண்டாக வேண்டும் என்பது. தன் தோழியின் விருப்பம் நிறைவேறக்கூடாது என்பதே இவளின் விருப்பம். எனவே தன் தோழியின் விருப்பம் நிறைவேறாததாகக் கனவு கண்டிருந்தால் அது பொருத்தமானது. ஆனால் இவளோ தன்னுடைய விருப்பம் ஒன்று - கனவில், விருந்து கொடுக்க வேண்டுமென்பது - நிறைவேறாததை கனவாகக் காண்கிறாள். அதாவது தன் தோழியின் இடத்தில் இவள் தன்னை வைக்கிறாள். ?ஸ்டீரியா நோயாளிகள் தங்களை மற்றவர்களாக இனம் கண்டுகொள்வது அவர்களுடைய நோயின் ஒரு முக்கியமான கூறு. இந்த இனம் கண்டுகொள்ளுதல் (identification) இவள் கனவில் நடந்திருக்கிறது.

கார்ல் இறந்த கனவு

ஃப்ராய்டின் நோயாளி ஒருவர் - இளம்பெண் - அவரிடம் ஒருநாள் வந்து சொல்கிறார். உங்களுக்கு நினைவிருக்கலாம் என் சகோதரிக்கு இப்போது கார்ல் என்ற ஒரே ஒரு மகன்தான் உள்ளான். அவள் தன் மூத்த மகன் ஓட்டோவை இழந்து விட்டாள். நான் அப்போது அவளுடன் இருந்தேன். நானே அவனை வளர்த்தேன் என்றுகூடச் சொல்லலாம். கார்ல் மீதும் பிரியம்தான். ஆனால் ஓட்டோவைவிட அல்ல.

ஆனால் நேற்றிரவு நான் இப்படி ஒரு கனவு கண்டேன். கார்ல் என் முன் இறந்து கிடக்கிறான். பெட்டிக்குள் கைகளை மடக்கிய வண்ணம். சுற்றிலும் மெழுகுவர்த்திகள் எரிகின்றன. அவனைப் பார்த்தால் நான் மிகவும் பிரியமாயிருந்த ஓட்டோவைப் போலவே இருந்தது.

இப்பொழுது சொல்லுங்கள் உங்களுக்கு என்னைத் தெரியும். நான் என்ன என் சதோதரி அவளுக்கிருக்கும் ஒரேயொரு குழந்தையையும் இழக்க வேண்டும் என்று நினைக்கின்ற அளவுக்கு கொடும்பாவியா என்ன அல்லது நான் மிகவும் பிரியமாயிருந்த ஓட்டோவுக்கு பதிலாக கார்ல் இறந்திருக்கலாம் என்று நினைக்கிறேனா? இந்த கனவுக்கு என்ன அர்த்தம்? என் எந்த விருப்பத்தை இந்த கனவு நிறைவேற்றுவதாக உங்கள் தியரி கூறுகிறது என்று கேட்டாள்.

விளக்கம்

மேற்குறிப்பிடப் பட்ட பெண் நோயாளி அனாதையாக இருந்து தன் மூத்த சகோதரியால் பாதுகாக்கப் பட்டவர். அக்காவின் வீட்டுக்கு அவ்வப்போது வந்துபோய்க்கொண்டிருந்த ஒரு பேச்சாளனை அவள் தீவிரமாகக் காதலித்தாள்.ஆனால் ஏனோ அக்காவுக்கு அது பிடிக்காததால் இவள் காதல் கைகூடவில்லை. இதன் பிறகு அவன் வருவதும் நின்றுவிட்டது. இதற்கிடையில் ஓட்டோவும் இறந்து போனான்.

ஆனால் இவள் அவன் எங்கெல்லாம் சொற்பொழிவாற்றச் சென்றானோ அங்கெல்லாம் சென்று பார்வையாளரில் ஒருவராய் நின்று அவன் முக தரிசனம் பெற்று திருப்தியுறுவாள். கனவு கண்டதற்கு மறுநாள்கூட, அதாவது கனவை ஃப்ராய்டிடம் சொன்ன அன்றுமாலை, அவன் ஒரு இசைவிழாவில் கலந்து கொள்வதாக இருந்தான். இவளும் போவதாக முடிவு.

இந்த பின்னணி ஃப்ராய்டுக்குப் போதுமானதாக இருந்தது. அவர் அவளைக் கேட்டார் :

ஓட்டோ இறந்தபின் என்னாயிற்று?

என்னாயிற்று? அவன் வந்து அனுதாபம் தெரிவித்தான்.

ஃப்ராய்டுக்குத் தேவையான செய்தி கிடைத்து விட்டது. அவர் கூறுகிறார் : அதுதான். நீ உன் சகோதரி தன் குழந்தையை இழக்க வேண்டும் என்றெல்லாம் விரும்பவில்லை. மாறாக நீ உன் காதலனைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தையே மறைமுகமாக நிறைவேற்றியிருக்கிறாய். ஓட்டோ இறந்தபோது அவன் வந்து பார்த்தானல்லவா? அதுபோலவே கார்ல் இறந்தாலும் அனுதாபம் தெரிவிக்க வருவான். நீயும் அவனை தரிசித்து மகிழலாம். எனவே நீ நீண்ட நாட்களாக மறைத்து மறைத்து ஆனால் உன்னுள் வளர்த்து விட்டிருக்கும் விருப்பம் நிறைவேறுவதற்குரிய ஒரு தோதான வாய்ப்பை, அதாவது கார்லின் இறப்பை, உன் கனவு தேர்ந்தெடுத்திருக்கின்றது. தவிர வேறொன்றுமில்லை.

அவனைப் பார்க்க வேண்டும் என்ற உன்விருப்பம் நிறைவேறவேண்டும் அதேசமயம் அது மற்றவர்களுக்கு தெரியக்கூடாது எனவே காதலை மறைக்க உன் கனவு மிகவும் பொருத்தமாக யாரும் சந்தேகிக்காத ஒரு துக்க சூழ்நிலையைத் தேர்ந்தெடுத்துள்ளது அவ்வளவே என்று விளக்குகிறார்.

இந்த கனவும் அதன் விளக்கமும் நம்முடைய சூழலிலும் மிகவும் பொருத்தமானது. நாமும் நமக்கு மிகவும் உவப்பானவர்கள் இறந்து போவதாக அடிக்கடி கனவு காண்கிறோம். அப்படியானால் நம்முடைய அடிமனத்தில் அவர்கள் சாக வேண்டும் என்று விரும்புகிறோமா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. இதுபோன்ற சந்தேகங்களுக்கு இந்த கனவின் விளக்கம் தெளிவு தரும்.

இப்படிப் பட்ட கனவுகளில் நாம் வெளிவிஷயத்தை விட உள் விஷயத்தையே கவனிக்க வேண்டும்.

சிசுக்கொலைக் கனவு

ஒரு பெண்ணுடன் தன் வீட்டுக்கு வரும்போது தன்னை வீட்டு வாசலில் கைது செய்ய போலீஸ் காத்திருந்ததாக ஒரு கனவு ஒருவருக்கு வந்தது. நான் கைது செய்யப்பட வேண்டும் என்று விரும்புவேனா என்று அவர் ஃப்ராய்டிடம் கேட்கிறார்.

எதற்காக உங்களை போலீஸ் கைது செய்ய வந்தது என்று தெரியுமா?

தெரியும். சுpசுக்கொலை சம்பந்தமாக

கனவுக்கு முந்திய நாட்களில் நடந்தது என்ன என்று ஃப்ராய்ட் கேட்டதற்கு முதலில் அவர் சொல்ல மறுக்கிறார். அப்படியானால் கனவை விளக்க முடியாதென ஃப்ராய்ட்

நேசிப்பதும் அவர் நேசிக்கிறார்.

கனவு வந்ததற்கு முதல் நாள் இரவை அவர் தான் நேசித்த ஒரு (கல்யாணமான) பெண்ணோடு கழிக்கிறார். பல முறை அவளோடு உடலுறவு கொள்கிறார். ஆனால்



குழந்தை உண்டாவதைத் தடுப்பதற்காக, விந்து வெளிவருவதற்கு முன் உறவை முடித்துக் கொள்வது அவரது வழக்கம்.

அன்று அதிகாலை மறுபடியும் உடலுறவு கொண்டபோது சரியாகச் செய்தோமா என்ற சந்தேகம் வந்தது. பின்பு தூங்கிவிட்டார். பிறகு வந்தது கனவு. குழந்தை உண்டாகியிருக்குமோ என்ற சந்தேகம், உண்டாகியிருந்தால் அதைக் கலைத்து விடவேண்டும் என்ற விருப்பத்தை, சிசுக்கொலைக்கு கைது செய்யப்படுவதாக நிறைவேற்றியிருக்கிறது கனவு.

அதோடு, அந்தப் பெண்ணை அவர் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறார். அந்த விருப்பத்தையும் சேர்த்து கனவு நிறைவேற்றியிருப்பதாக விளக்குகிறார் ஃப்ராய்ட்.

வருமான வரிக் கனவு

நேர்மையாக சம்பாதிக்கும் ஒரு மருத்துவர் தனக்கு வருமான வரி இலாக்காவிலிருந்து பெரும் அபராதம் விதித்திருப்பதாக கனவு காண்கிறார். ஃப்ராய்டின் விளக்கத்தின்படி, அபரிமிதமான வருமானம் கொண்ட மருத்துவராக ஆகவேண்டும் என்ற அவரின் விருப்பத்தை கனவு நிறைவேற்றியிருக்கிறது !

கனவுகள் நம் விருப்பங்களை, ஆசைகளை நிறைவேற்றக்கூடிய தன்மை கொண்டவை என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் ஃப்ராய்ட் அடிக்கடி ஒன்றைச் சொல்கிறார். அதாவது, தன் கோட்பாடு தவறாக இருக்க வேண்டும் என்று விரும்பிய தன் நோயாளிகளுக்கு அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் கனவுகள் வந்துள்ளன என்று கூறுகிறார்! வாசகர்களுக்கும் இது நிச்சயம் பொருந்தும். இது அடி சறுக்காமல் இருக்க யானை செய்கின்ற முன்னேற்பாட்டு முயற்சியா என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்!

நமது விருப்பம் நிறைவேறாது போவதாக காட்டும் கனவுகள், விருப்பத்துக்கு நேர் எதிரானது நடப்பதாக காட்டும் கனவுகள், விரும்பத் தகாதது நடப்பதாக வரும் கனவுகள் எல்லாமே விருப்ப நிறைவேற்றக் கனவுகள்தான் என்பதை மேற்கண்ட உதாரணங்களிலிருந்து புரிந்து கொண்டோம். எனவே கனவுகள் என்பவை நமது (அமுக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட) விருப்பங்களை (மாறுவேஷத்தில்) நிறைவேற்றுபவை என்று கூறலாம்.

அத்தியாயம் - 6

கனவுகளின் நதிமூலம்

கனவின் உள்விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் வெளிவிஷயத்தை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கும் வரையில் கனவு குழப்பமானதாகவும், கடினமானதாகவும் முரண்பாடுகள் நிறைந்ததாகவும்தான் இருக்கும். எனவே அதி முக்கியத்துவம் வாய்ந்த கனவின் உள்விஷயத்தையும், கனவை உருவாக்குகின்ற அதற்குத் தேவையான

படிமங்களைக் கொடுக்கின்ற மூலங்களை நிஜவாழ்விலிருந்து அடையாளம் காண்பது அவசியமாகிறது.

ஒவ்வொரு கனவும் அதற்கு முந்திய நாள் அனுபவங்களோடு ஏதோ ஒரு புள்ளியில் இணைகிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும். நான் அலசி ஆராய்கின்ற



ஒவ்வொரு கனவிலிருந்தும், அது என் கனவானாலும் சரி, மற்றவர்களின் கனவானாலும் சரி, இந்த உண்மை புலப்படுகிறது. எனவே கனவுப் பந்தை உதைத்து இயக்கிவிட்ட கனவுக்கு முந்தியநாள் அனுபவங்கள், நிகழ்வுகளிலிருந்து தொடங்குவதே கனவுகளை விளங்கிக்கொள்ள மிக எளிய வழியாகும். என்னுடைய கனவுகளிலிருந்து சில உதாரணங்கள்.

கனவு 1 : நான் ஒரு வீட்டுக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைப்பது கஷ்;டமாயிருந்தது. இதற்கிடையில் ஒரு பெண்ணை நான் காத்திருக்க வைத்தேன்.

மூலம் : அன்று மாலை ஒரு சொந்தக்காரப் பெண்மணியோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவள் வாங்க விரும்பிய ஏதோ ஒன்றுக்காக அவள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னேன்.

கனவு 2 : ஏதோ ஒரு தாவரத்தைப் பற்றி நான் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினேன்.

மூலம் : அப்படி ஒரு கட்டுரையை அன்று காலை ஒரு புத்தகக் கடை ஜன்னலில் பார்த்தேன்.

கனவு 3 : தெருவில் ஒரு தாயையும் மகளையும் பார்த்தேன். அந்த மகள் எனது நோயாளி.

மூலம் : கனவுக்கு முந்திய நாள் மாலை, என் நோயாளி ஒருத்தி, என்னிடம்; சிகிச்சையைத் தொடர, தன் தாயார் முட்டுக்கட்டையாய் இருப்பதைப் பற்றி என்னிடம் கூறிக்கொண்டிருந்தாள்.

கனவு நாள்

கனவுக்கு முதல்நாள் பதிவுகள்தான் கனவை உருவாக்குகின்றனவா அல்லது அதற்கு முந்தைய நாட்களுக்கும் பங்கு உண்டா என்ற கேள்வி அவ்வளவு முக்கியமானதல்ல எனினும், கனவுக்கு முந்தைய நாளையே கனவு நாள் என்று கூறுவேன். காரணம், கனவு நாளுக்கு முந்தைய நாட்களின் பதிவுகளும் கனவை உருவாக்குவதில் பங்கு பெற்றிலுந்தாலும்கூட, அந்த பதிவுகள் அல்லது அதையொத்த பதிவுகள் கனவு நாளின்போது மறுபடியும் தாக்கம் ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு. இன்னும் தெளிவாகச் சொன்னால், கனவு காண்பவனின் வாழ்வின் எந்த ஒரு காலகட்டத்திலிருந்தும் ஏற்பட்ட பதிவுகளிலிருந்து கனவுகள் தங்களை உருவாக்கிக்கொள்ள வல்லவை. எனினும், அந்த காலகட்டத்தின் பதிவுகளுக்கும் கனவுநாளுக்கும் ஏதாவதொரு விதத்தில் தொடர்பு இருக்கவேண்டும்.

இணைத்தல்

ஒரு நாள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட அனுபவங்கள் கனவை உருவாக்க வல்லவையாக இருந்தால், கனவு அவற்றை இணைத்து ஒன்றாக்கிவிடும் தன்மை பெற்றது. ஒரு நாள் ரயிலில் இரண்டு பேருடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். ஒருவர் என்னோடு பணிபுரியும் மருத்துவர். இன்னொருவர் குடும்ப நண்பர். குடும்ப நண்பரிடம் உடம்பு சரியில்லாத அவருடைய அத்தையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். மருத்துவ நண்பரிடம் எனக்குத் தெரிந்த ஒரு மாணவன் நல்ல மருத்துவனாக வருவதற்குரிய வாய்ப்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.



பிறகு வந்த கனவில் பிரபலமான மருத்துவராகிவிட்ட அந்த மாணவன், என் குடும்ப நண்பரின் அத்தை இறந்து விட்டதற்கான - அந்த அத்தையை எனக்குப் பிடிக்காது - மருத்துவ ரீதியான காரணங்களை விளக்கிக் கொண்டிருந்தான்.

அப்பாவிக் கனவுகள்

கனவுகளில் அப்பாவிக் கனவுகள் என்று எதுவுமே கிடையாது. எல்லாக் கனவுகளும் அதி முக்கியத்துவம் வாய்ந்தவையே. கனவுகள் அப்பாவித் தனமாக, முக்கியமற்ற அற்ப விஷயங்களைப் பற்றியதாகத் தோன்றலாம். ஆனால் எல்லாக் கனவுகளுமே பசுத்தோல் போர்த்திய புலிதான். சிலது வெளிப்படையாகவே முக்கியமானதெனத் தெரியும் அல்லது சின்ன விஷயமாகத் தோன்றுவதை விளக்கிய பிறகு அதன் முக்கியத்துவம், சுயரூபம் அல்லது விஸ்வரூபம் தெரியும். அவ்வளவுதான். அற்ப விஷயங்களால் நமது தூக்கம் என்றுமே கெடுவதில்லை. அப்பாவிக் கனவுகளை அலசிப் பார்க்கும்போதுதான் தெரியும் அவைகள் நம்மை அப்பாவிகளாக்கிவிட்ட அதி மேதாவிகள் என்று!

ஒரு அப்பாவிக் கனவு

ஒரு இளைஞன் கண்ட கனவு இது. 1. பனிக்காலத்தில் அணியும் மேல்கோட்டை அவன் மறுபடியும் அணிந்து கொண்டான். 2. அது ரொம்ப பயங்கரமானது.

இந்த சிறிய கனவு அவனுக்கு வந்ததன் காரணம் திடீரென அவனுக்கு குளிரெடுக்க ஆரம்பித்ததுதான். ஆனால் நெருக்கமாகப் பார்ப்போமானால் கனவின் இரண்டு பகுதிகளும் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட மாதிரி உள்ளது. குளிர்காலத்தில் மேல்கோட்டுப் போட்டுக் கொண்டதில் என்ன பயங்கரம் இருக்க முடியும்?

விளக்கம் : கனவு நாளில் ஒரு பெண் அந்த இளைஞனிடம், தன் கடைசிக் குழந்தை பிறந்ததன் காரணம் ஓட்டையாக இருந்த ஆணுறைதான் என்று சொல்லியிருக்கிறாள். அந்த தகவலை வைத்து அவன் கனவெண்ணங்களைப் பின்னியிருக்கிறான்.

மெல்லிய ஆணுறை அபாயகரமானது. மொத்தமான ஆணுறையோ மோசமானது. கனவில் ஆணுறைதான் மேல்கோட்டாகிவிட்டது. ஏனெனில் இரண்டிற்குள்ளும் ஒன்று புகுந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு திருமணமாகாத இளைஞனுக்கு நடந்திருந்தால் அது பயங்கரமானதுதானே?!

இந்த மாதிரியான அப்பாவிக் கனவுகள் யாவும் அப்பாவித்தனமாக இருப்பதற்குக் காரணம் உடலுறவு போன்ற பாலுணர்ச்சி சம்மந்தப்பட்ட விஷயங்கள் அவைகளில்

மறைக்கப் பட்டிருப்பதுதான்.

செக்ஸ் சம்பந்தப்பட்ட கனவுகளில் வரும் காட்சிகள் வெளிப்படையாக செக்ஸ் சம்பந்தப்பட்டவையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இன்னும் சொல்லப்போனால் செக்ஸ் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அப்பாவிக் கனவுகள் பெரும்பாலும் செக்ஸ் கனவுகளாகவே உள்ளன என்பது என் நோயாளிகளின் கனவுகளிலிருந்து நான் ரொம்பத் தெளிவாகத் தெரிந்துகொண்ட ஒன்று.



உடம்பையும் மர்ம உறுப்புகளையும் அவர்கள் கட்டிடங்களாகக் காண்கிறார்கள். தூண்கள் எனில் கால்கள். பாதை எனில் உடம்பில் உள்ள ஏதாவதொரு ஓட்டை. தண்ணீர்க் குழாயெல்லாம் ஆண்குறி இப்படி. தாவரங்களும் சமையல் கட்டும்கூட மிகவும் அந்நியோன்னியமான அல்லது மிகவும் அசிங்கமான செக்ஸ் கனவுகளை வெளிப்படுத்துபவையாக உள்ளது.

செக்ஸை புறக்கணித்துவிட்டு ?ஸ்டீரியா நோயாளிகளின் கனவுகளை விளக்கவே முடியாது. ரத்தம், சமைக்காத புலால், இவற்றின் மீதான வெறுப்பு, முட்டை, அல்லது மக்ரூனி போன்றவற்றைக் கண்டதும் வாந்தி வருதல், மிகைப்படுத்தப்பட்ட பாம்பு பயம் - இவை யாவும் செக்ஸ் சம்பந்தப்பட்டவையே.

என் நோயாளி ஒருத்தி ஒரு அழகான மலர்க்கனவு கண்டாள். அதன் அர்த்தத்தை அவளுக்கு விளக்கியவுடன் அவளுக்கு அந்தக் கனவின் மீதிருந்த ஆர்வம் 'மதிப்பு' போய்விட்டது. கனவின் எந்த எந்த பகுதிகள் செக்ஸ் சம்பந்தப்பட்ட குறியீடுகளாக உள்ளன என்பதைக் குறிக்க சாய்வுக்கோட்டில் காட்டியுள்ளேன்.

மலர்க்கனவு

அவள் ஏதோ ஒரு உயரமான இடத்திலிருந்து கீழே வருகிறாள். கையில் ஒரு பெரிய கிளையை பிடித்துக்கொண்டிருக்கிறாள். உண்மையில் சிவப்புப் பூக்கள் கொண்ட ஒரு மரமாகவே அது இருந்தது. அவைகள் விரிந்து பரவிக்கொண்டிருந்தன. கீழே வேலைக்காரன் ஒரு மரத்துண்டு வைத்து அதைக்கொண்டு கொத்துக் கொத்தாக இருந்த முடியை நீக்கிக் கொண்டிருந்தான். மற்ற சில வேலைக்காரர்களும் தோட்டத்திலிருந்த அதையொத்த கிளைகளை வெட்டி வெட்டி தெருவில் போட்டனர்.

ஒரு முகம் தெரியாத அந்நியன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவள் அவனிடம் சென்று அவளுடைய தோட்டத்தில் அந்த கிளைகளை நடமுடியுமா என்று கேட்டாள். அவன் அவளை இறுகத்தழுவினான்.

இந்த கனவில் கிளைகள் ஆண் குறியையும் தோட்டம் பெண் குறியையும் சுட்டுகிறது என்பதை விளக்கவே தேவையில்லை.

கனவில் குழந்தைப்பருவ பதிவுகள்

நமது விழிப்பு நிலை வாழ்க்கையின் பிரக்ஞைக்கு எட்டாத குழந்தைப் பருவ நினைவுகளிலிருந்து விஷயங்களை எடுத்துக்கொண்டு உடலெடுக்கும் தன்மை கொண்டவை கனவுகள் எவ்வளவு அரிதாக இது நடக்கிறது அல்லது எவ்வளவு

அடிக்கடி இது நடக்கிறது என்று சொல்வது கடினம். ஏனெனில் விழித்தவுடன் நினைத்துப் பார்த்து இதை கண்டுபிடிக்க முடியாது. எனவே இதற்கான ஆதாரங்களை நாம் வெளியிலிருந்துதான் தேடவேண்டும்.

சின்னவனின் கனவு

ஃப்ராய்டின் கனவுகளைப் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்ட ஒருவர் இந்த கனவைக் கூறுகிறார். தன் வீட்டில் தன் பதினோறாவது வயதுவரை இருந்த வேலைக்காரப் பெண்ணோடு தன் முன்னாள் ஆசிரியர் ஒருவர் உடலுறவு



கொண்டதைப் பார்ப்பதாக கனவு வந்ததாம். உடலுறவு நடந்த இடத்தைக்கூட எது என்று அவரால் சொல்ல முடிந்தது.

ரொம்ப ஆச்சர்யமாகி, இந்த கனவை தன் அண்ணனிடம் சொல்ல, அவர் சிரித்துக்கொண்டே ஆமாம், அது உண்மைதான் அப்போது எனக்கு ஆறு வயது. காதலர்களுக்கு மூடு வந்துவிட்டால் எனக்கு பியர் கொடுத்து போதையூட்டிவிடுவார்கள். நீ சின்னப்பையன். உனக்கு அப்போது மூன்று வயதுதான். நீ தூங்கிக் கொண்டிருப்பாய். நீ விழித்திருந்தாலும் அதைப்பற்றி அவர்கள் கவலை கொண்டிருக்க மாட்டார்கள் என்றாராம் !

ஒரு கனவில் குழந்தைப் பருவத்து பதிவுகள் உள்ளன என்று அந்தக் கனவை விளக்காமலேயே நிச்சயமாகச் சொல்வதற்கு இன்னொரு வழி உள்ளது. அதாவது, இப்படிப்பட்ட கனவுகள் மறுபடி மறுபடி வருபவை. குழந்தைப்பருவத்தில் வந்த கனவாயிருக்கும் அது. வயது முதிர்ந்த பின்னும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்.

மஞ்சள் சிங்க பொம்மைக் கனவு

முப்பதுகளிலிருந்த தன் நண்பர் ஒருவருக்கு கனவில் அடிக்கடி ஒரு மஞ்சள் சிங்கம் வந்துகொண்டிருந்ததாம். சின்னப்பிள்ளையாக இருந்தபோதிலிருந்தே இந்த சிங்கம் வருகிறதாம். கடைசியில் அவர் அம்மாவிடம் சொன்னபோது சிங்கம்தான் அவருக்கு மிகவும் பிடித்த விளையாட்டு பொம்மை என்று சொன்னாராம்.

குழந்தையும் அதன் உணர்வுகளும் நாம் வளர்ந்துவிட்ட நிலையிலும் நம்முடைய கனவுகளில் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. குழந்தையாயிருந்தபோது நாம் கொண்ட ஆசைகளும் பெரியவர்களான பிறகும் நம்முடைய கனவில் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

மறுபடியும் ஆர் கனவு

என்னோடு பணிபுரியும் மருத்துவ நண்பர்கள் ஆர். மற்றும் என். பற்றி வந்த கனவை ஏற்கனவே சொன்னேன். அந்தக் கனவையே மறுபடி ஆழமாக அலசிப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு என் குழந்தைப்பருவ அனுபவங்கள் அதில் பங்கு வகிக்கின்றன என்று புரிந்து கொள்ள முடிந்தது.

ஆர். மற்றும் என். மீது நான் நிஜவாழ்வில் எந்தவித பொறாமையும் கொள்ளவில்லை.

எனவே கனவில் நான் அவர்களை நடத்திய விதம் மற்றும் அவர்களைப் பற்றிய என் உணர்வுகள் மிகவும் முரண்பாடானதாக இருந்தது. ஒருவரை ஏமாளி என்றும் ஒருவரை குற்றவாளி என்றும் நான் கொடுத்த தீர்ப்பு ஏற்றுக்கொள்ளும் படியானதாக இல்லை. எனவே திருப்தியளிக்காத அந்தக் கனவின் விளக்கத்தை ஒட்டி, மறுபடி அந்தக் கனவை அலசிப்பார்த்தபோது என் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளும் உணர்வுகளும் அக்கனவுக்குக் காரணம் என்று தெரிந்தது.

நான் பிறந்தபோது ஒரு கிராமத்துப் பெண் ஒருத்தி என் அம்மாவிடம் உன் முதல் குழந்தை (நான்) வருங்காலத்தில் ஒரு பெரிய ஆளாகும் என்று கணித்து தீர்க்க தரிசனம் சொன்னாளாம். இந்த விஷயம் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு என் மனதில் பதிந்துவிட்டது. அந்தக்கால கிராமத்துப் பெண்களின் வேலையே நிகழ்காலப்



பிரச்சனைகளை மறக்க, எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகளில், தீர்க்க தரிசனங்களில் இறங்கிவிடுவதுதான்.

ஆர். மற்றும் என்.னுக்குக் கிடைக்காத உயர் பதவி எனக்குக் கிடைக்க வேண்டும் என்று என் கனவு ஆசைப்பட்டதற்கு இது காரணமாக இருந்திருக்குமோ?

இந்தக் கேள்வி எனக்கு இன்னொரு வி;தை நினைவுபடுத்தியது. எனக்கு அப்போது பதினோறு பனிரண்டு வயதிருக்கும். வியென்னாவுக்கு வெளியே இருந்த பிரேட்டர் என்ற பிரபலமான பார்க் ஒன்றிற்கு என் பெற்றோர் என்னை அடிக்கடி அழைத்துச் செல்வர்.

ஒருநாள் நாங்கள் அந்த பார்க் ோட்டலில் அமர்ந்திருந்தோம். அப்போது ஒருவன் கூப்பிடும் இடங்களுக்கெல்லாம் சென்று கொடுக்கப்பட்ட தலைப்பில் உடனே உடனடிக் கவிதை பாடிக்கொண்டிருந்தான். அவர்கள் தரும் சொற்ப காசுக்காக. அவனை அழைக்க நானும் அனுப்பப்பட்டேன். என்னைப் பார்த்ததும் அவன் என்னைப்பற்றியும் நாலைந்து வரிகள் பாடினான். அதில் நான் ஒரு காபினட் மந்திரியாவேன் என்று கூறினான். இந்த இரண்டாவது தீர்க்க தரிசனம் என் மனதில் ஒரு ஆழமான பதிவை ஏற்படுத்தியது.

பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு முன்னர்வரை சட்டம் பயிலத்தான் நான் ஆசைப்பட்டேன். கடைசி நேரத்தில்தான் மனதை மாற்றிக்கொண்டேன். ஒருவன் மருத்துவனாகிவிட்டான் எனில் அவன் மந்திரியாவதற்கான கதவுகள் யாவும் மூடப்பட்டுவிட்டன என்றே பொருள். சரி, கனவுக்கு வருவோம்.

கனவு என்னை அமைச்சராக்கி இருக்கிறது! எனக்கு உயர் பதவி கிடைக்காததால், ஆர். மற்றும் என்.னுக்கும் பதவிகள் கிடைக்காமலிருக்க ஒருவரை ஏமாளியாகவும் ஒருவரை குற்றவாளியாகவும் ஆக்கிவிட்டேன். காரணம் நான் அமைச்சர், ஆனால் அவர்களோ யூதர்கள்!

ஃப்ராய்டின் திறந்த மனமும் வெளிப்படையான தன்மையும் பாராட்டுக்குரியது. எனினும் மறுபடியும் இந்த கனவை அவர் ஆராய்ந்து பார்த்ததில் குழந்தைப் பருவ அனுபவங்கள் பங்குவகிக்கின்றன என்ற உண்மை தெளிவாகத் தெரிந்தாலும் இந்த

கனவுகக்கு அவா தரும வ'ளககம த்'ருபத்'கரமானதாக இலலை. காரணம ஃபராயடு'ம ஒரு யூதர்தான். சரி, ஆங்கில மொழிபெயர்ப்பில் வந்த குழப்பமாக இதை எடுத்துக்கொண்டுவிடலாம்.

எந்தஅளவுக்கு கனவை ஆழமாக அலசுகிறோமோ, அந்த அளவுக்கு கனவின் உள்விஷயத்தில் குழந்தைப்பருவ பதிவுகளின் பங்கு உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

சிதையாத கனவுகள்

பொதுவாக எல்லாக் கனவுகளுமே சிந்தாமல் சிதறாமல், சிதையாமல் அப்படியே பதிவுகளை கனவின் காட்சிகளாக்குவதில்லை. என்றாலும் எப்பவாவது அரிதாக இப்படி ஓரிரண்டு கனவுகள் வரத்தான் செய்கின்றன.



என் நோயாளி ஒருவருக்கு விழிப்பு நிலையில் பசுமை குன்றாமல் அப்படியே ஞாபகம் இருந்த ஒரு விஷயம் கனவாகவும் வந்தது. அவருக்கு பதினோறு வயதிருக்கும்போது அவர் தன் நண்பனைப் பார்க்க பள்ளிக்கூடத்துக்குப் போகிறார். நண்பன் ஒரு படுக்கையில் படுக்க வைக்கப்பட்டுள்ளான்.

தற்செயலாக அவன் ஆடையை இவர் விலக்கி விடுகிறார். முக்கியமான இடத்தில் நிர்வாணமாகி விட்;ட நண்பனால் தூண்டப்பட்ட இவர் தன் ஆடையையும் அவித்துவிட்டு நிர்வாணமாகி, ஏதோ ஒரு வலியுறுத்துகின்ற உணர்வினால் தூண்டப்பட்டவராக, நண்பனின் ஆணுறுப்பைத் தன் கையில் பிடித்துக்கொள்கிறார். நண்பனின் கோபம் கண்டு ஆச்சர்யமும் அவமானமும் உற்றவராக கையை எடுத்துக்கொள்கிறார்.

இந்த நிகழ்ச்சி நடந்து இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கனவில் மறுபடி இது அப்படியே நடக்கிறது. ஒரே ஒரு சின்ன மாற்றம். நண்பனுக்குப் பதிலாக வேறொருவர்.

குழந்தைப்பருவ அனுபவங்கள் கனவின் வெளிவி;தில் ஒரு குறிப்பாகத்தான் இருக்கும். அதை விளக்கும்போதுதான் அது குழந்தைப்பருவ பதிவு என்பது தெரியவரும். இதை ஒரு பொதுவான விதியாகவே கொள்ளலாம். சில கனவுகளில் இத்தகைய அனுபவங்கள் உள்ளன என்பதை அனுமானித்தே புரிந்துகொள்ள முடியும். பொதுவாக கனவுகளின் வெளிவிஷயம் சமீபத்தைய அனுபவங்களோடும் கனவுகளின் உள்விஷயம் கடந்தகால மற்றும் குழந்தைப்பருவ அனுபவங்களோடும் தொடர்பு கொண்டது.

இதுவரை கனவுகளை அலசிப்பார்த்த வகையில் சில விஷயங்கள் நமக்கு தெளிவாகின்றன. கனவின் நினைவாற்றலானது மூன்று குணங்கள்உடையது.

ஒன்று, நனவு வாழ்வில் நமக்கு முக்கியமற்றதாகத் தோன்றுவதை எடுத்துக்கொண்டு சிதைக்கிறது.

இரண்டு, கனவுக்கு மிகச்சமீபத்திய நாட்களிலிருந்து காட்சிகளை அமைக்கிறது.

மூன்று, குழந்தைப்பருவ அனுபவப்பதிவுகளை எடுத்துக்கொள்கிறது. அதோடு ஒரு

முன்பு, குழந்தைப்பருவ அனுபவப்பதிவுகளை எடுத்துக்கொள்கிறது. அதோடு, ஒரு கனவுக்கு பல அர்த்தங்கள் உண்டு என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

அத்தியாயம் - 7:

மாதிரிக் கனவுகள் (Typical Dreams)

ஒருவன் தன் ஆழ்மனதில் பொதிந்து கிடக்கும் ரகசியங்களையெல்லாம் அவிழ்த்துக் கொட்டினாலொழிய அவனுடைய கனவுகளை விளங்கிக்கொள்வதோ விளக்குவதோ சாத்தியமில்லை.ரகசியங்களையெல்லாம் கொட்டுவதற்கு அவன் தயாராக இருப்பதாக வைத்துக்கொண்டாலும் முதலில் ஆழ்மனதில் கிடக்கும் எண்ணங்கள் என்னென்ன என்பதை முதலில் அவன் அறிந்திருக்க வேண்டுமல்லவா?

ஃப்ராய்டிடம் வந்தவர்கள் மனநோயாளிகளாக இருந்ததனால் மனஅலசல் முறையில் அவர்களின் ஒத்துழைப்போடு அவர்களின் ஆழ்மனதிற்குள் புகுவது அவருக்கு சாத்தியமாயிற்று.



எனவே, பொதுவாக ஒரு தனிமனிதனுடை கனவுகளை அடுத்தவர் விளக்குவதென்பதான காரியம் ஒரு மிகச்சிறிய வட்டத்திற்குள் இயங்கக்கூடியதாகவே உள்ளது. ஒவ்வொரு மனிதனும் அவனுடைய கனவுலகத்தை அவனிஷ்டத்துக்கு சிருதிக்;கக்கூடிய சுதந்திரம் உடையவனாக உள்ளான். அவனுடைய இந்த தனித்தன்மையானது மற்றவர்கள் அவனது கனவை விளங்கிக்கொள்ள பெரிய முட்டுக்கட்டையாக உள்ளது.

ஆனால் இதற்கு நேர்மாறாக, சில கனவுகள் எல்லோராலும் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. அதன் காரணமாகவே, அப்படிப்பட்ட கனவுகளை யார் கண்டாலும் அதன் அர்த்தம் மாறாமல் ஒன்றாகவே உள்ளது. அவைகளின் மூலங்களும் ஆளுக்கு ஆள் மாறாமல் ஒன்றாகவே உள்ளதானது அவைகளின் மேல் ஒரு தனித்த ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்ட கனவுகளைத்தான் நாம் பிரபஞ்சக் கனவுகள் அல்லது பொதுவான கனவுகள் அல்லது மாதிரிக் கனவுகள் என்றழைக்கிறோம்.

பலத்த எதிர்பார்ப்புகளுடன் நமது கனவு விளக்க முறையை இவைகளின்மீது செலுத்திப் பார்க்க உள்ளோம். ஆனால் நம் அலசல் முறை இக்கனவுகளைப் பொறுத்த அளவில் பலிக்கவில்லை என்பதையும் தயக்கத்தோடு ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஏன் என்று போகப்போகத் தெரியும்.

நிர்வாணக் கனவுகள்

போதுமான அளவு ஆடைகள் உடம்பில் இல்லாத மாதிரயோ, ஆடை விலகிய மாதிரியோ அல்லது முழு நிர்வாணமாக, அதுவும் ஊர்பேர் தெரியாத அந்நியர்கள் முன்னிலையில், இருப்பது மாதிரியான கனவுகள் பெரும்பாலோருக்கு வருகின்றன. இதில் விஷேம் என்னவென்றால், கனவில் நிர்வாணமாக இருப்பவருக்கு எந்தவிதமான வெட்க உணர்வும் இருக்காது.

ஆனால் நாம் இங்கே கவனிக்க விரும்புவது வெட்க உணர்வு அற்ற கனவுகளை அல்ல. வெட்க உணர்வு கொண்ட கனவுகளை. அதாவது கனவில் ஒருவர் நிர்வாணமாக

அந்நியர் முன் நிற்கிறார். வெட்கம் பிடுங்கித் தின்கிறது. ஆனால் அவரோ அந்த நிலையை மாற்றிக்கொள்ள முடியவில்லை. ஓடிப்போகவோ ஒளிந்துகொள்ளவோ முடியவில்லை. எந்த வகையிலும் நிர்வாணத்தை மறைக்க முடியவில்லை.

இதுதான் நாம் எடுத்துக்கொள்ளும் மாதிரி. இந்த மாதிரயில் பிரதான அம்சம் நிர்வாணத்தை விரும்பாத, அதை மறைக்க விரும்புகிற, ஆனால் முடியாத உணர்வுதான். இம்மாதிரிக் கனவுகள் நிறைய பேருக்கு வந்திருக்கும்.

இங்கே நிர்வாணம் என்பது ஆடைகளற்ற ஆதாம் ஏவாள் நிலையைக் குறிப்பதல்ல. அப்படியும் இருக்கலாம். ஆனால் நாம் நிர்வாணம் என்று இங்கே குறிக்க விரும்புவது ஒரு உணர்வு நிலை. அது வழக்கத்திற்கு மாறான எந்த உடையிலும் ஏற்படலாம். சக்கரவர்த்தியின் சீருடை (நிர்வாணம்) எந்த ரூபத்திலும் வரலாம். ஜட்டியோடு போய்க்கொண்டிருந்தேன் என்ற கனவோ, கழுத்து டை அணியாமலிருந்தேன் என்கின்ற கனவோகூட நிர்வாணக் கனவுகள்தான். நமது அளவகோல் ஆடையல்ல உணர்வுதான்.



இவ்விதமான கனவுகளில் நிர்வாணமாக இருக்கிறோம் என்ற வெட்க உணர்வு ஏற்பட்டவுடன் எதிரில் நிற்பவர்கள் (பார்த்துக்கொண்டு) பெரும்பாலும் தெளிவாகத் தெரியாத அந்நியர்களாகவே இருப்பர். பெரும்பாலும். அதோடு எந்த உணர்வினால் சர்வாங்கமும் கூச ஒருவர் நின்றுகொண்டிருக்கிறாரோ அவர் அணிந்து கொண்டிருக்கும் அல்லது அணியாமலிருக்கும் ஆடைபற்றி அந்த அந்நியர்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை!

ரொம்ப சந்தோஷமாக அவர்கள் நிர்வாணத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களா என்று கேட்க வேண்டாம். அதுவும் கிடையாது. அவர்களுடைய முகங்கள் எந்த உணர்ச்சியையும் பிரதிபலிக்காது. மண் மாதிரி இருப்பார்கள். இது ரொம்ப முக்கியமான விஷயம்.

கனவு காண்பவரின் வெட்கமும் பார்த்துக்கொண்டிருக்கும் அந்நியரின் அசிரத்தையும் கனவுகளுக்கே பொதுவாக உள்ள ஒரு முரண்பாட்டுத் தன்மையை வழங்குகிறது. அந்த அந்நியன் ஆச்சர்யமாகவோ, கோபமாகவோ அல்லது வெறுப்பாகவோ பார்த்திருந்தால் இயற்கையாக இருந்திருக்கும்.

கனவின் இரண்டு பகுதிகளுக்கும் ஒற்றுமை இல்லாத இந்த தன்மை கனவைப் புரிந்துகொள்வதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது. இம்மாதிரிக் கனவுகளில் கனவின் விருப்ப நிறைவேற்றத்தின் ஒரு பகுதி சிதைந்துள்ளது.

?ான்ஸ் ஆன்டர்சனின் சக்கரவர்த்தியின் புதிய ஆடை என்ற பிரபலமான கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இரண்டு ஏமாற்றுக்;காரர்கள் சக்கரவர்த்திக்கு ஒரு அற்புதமான ஆடையை நெய்வதாகச் சொல்கின்றனர். உயர்ந்தவர்களுக்கும் உண்மையானவர்களுக்கும் மட்டும்தான் அது கண்ணுக்குத் தெரியும் என்று சொல்கின்றனர். நல்லவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் காட்ட வேண்டி மக்கள் அனைவரும், சக்கரவர்த்தி உட்பட, அரசனின் நிர்வாணத்தை கண்டுகொள்வதில்லை. இம்மாதிரி நிர்வாணக் கனவுகளில் நடப்பது ?ான்ஸ் ஆன்டர்சனின் கதைதான். இங்கே

கனவுதான் ஏமாற்றுக்காரன். கனவு காண்பவன்தான் நிர்வாணச் சக்கரவர்த்தி !

இத்தகைய கனவுகள் அமுக்கப்பட்ட ஆசைகள் (repressed wishes) கனவின் உள்வவிஷயத்தில் கிடப்பதை உணர்த்துகின்றன. இப்படிப்பட்ட ஆசைகள் பொதுவாக குழந்தைப் பருவத்திலிருந்தே அமுக்கி வைக்கப்படுகின்றன.

குழந்தைப் பருவத்தில்தான் நம்மை நிர்வாணமாக அல்லது சரியாக உடை உடுத்தாமல் நர்சுகள், வேலைக்காரர்கள், விருந்தினர்கள் முதலிய அந்நியர்கள் பார்த்துள்ளனர். அந்த கால கட்டத்தில்தான் நாம் நிர்வாணத்துக்காக வெட்க உணர்வும் கொள்வதில்லை. ஆடைகளை அவிழ்க்கும்போது குழந்தைகள் எவ்வளவு சந்தோஷப்படுகின்றன என்று அவர்கள் கொஞ்சம் வளர்ந்தபிறகுகூட பார்க்கலாம். பார்ப்பவர்களை கண்ணியப்படுத்த தன் பாவாடையை தூக்கிக் காட்டாத இரண்டு மூன்று வயது குழந்தைகளைக் கொண்ட கிராமங்கள்தான் உண்டா?!

வெட்க உணர்வு என்பதே என்னவென்று அறியாத குழந்தைப் பருவ காலகட்டம்தான் சுவர்க்கம் என்பது. அதனால்தான் சுவர்க்கத்தில் ஆதி மனிதர்களும் குழந்தைகளைப் போல நிர்வாணமாயிருந்தார்கள். மற்றவர்களின் முன் அந்த நிலைக்காக வெட்கமும் படாமலிருந்தார்கள். வெட்க உணர்வு வந்ததும்தான் எல்லா எழவும் வந்தது. அவர்களும் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் ஒவ்வொரு இரவும் நாம்



கனவில் மீண்டும் சுவர்க்கத்தை அடையலாம். ஆக, நிர்வாணக் கனவுகள் என்பவை நமது குழந்தைப்பருவ விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு முறை தான்.

பிரியமானவர்களின் இறப்பு பற்றிய கனவுகள்

நமது பெற்றோர், சகோதர சகோதரிகள், நண்பர்கள், காதலன், காதலி, கணவன், மனைவி, குழந்தைகள், உற்றார் உறவினர் என நமக்கு மிகவும் உவப்பானவர்கள் இறந்து போவதாக வரும் கனவுகளும் மாதிரிக் கனவுகளே. இதில் இரண்டு வகை உண்டு. ஒன்றில், அப்படிப்பட்ட இறப்பிற்காக கனவு காண்பவர், கனவில், ஒரு துளிகூட வருந்தமாட்டார். அவர் இப்படி நடந்துகொண்டதை எண்ணி அவரே விழித்தவுடன் ஆச்சரியமும் வருத்தமும் அடைவார். இன்னொன்றில், அவர் மிகவும் வருந்துவார். தூக்கத்திலேயே விம்மி விம்மி அழவும் செய்யலாம்.

இதில் முதல் வகை மாதிரிக்கனவல்ல. அவை வேறு ஏதோ ஒன்றை மறைமுகமாகச் சுட்டுபவை. அவைகள் விருப்ப நிறைவேற்றக் கனவுகளாக இருக்கலாம் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

ஆனால் பிரியமானவர்களின் இறப்பும் அதற்கான துக்கமும் உள்ள இரண்டாம் வகையைச் சேர்ந்த கனவுகள் நம் கவனத்திற்கு உரியவை. இப்படிப்பட்ட கனவுகளின் அர்த்தமானது கனவில் இறப்பவர் உண்மையிலேயே இறக்க வேண்டும் என்ற விருப்பம்தான். இது அதிர்ச்சி தரக்கூடிய உண்மை.

கனவில் நிறைவேறும் ஆசைகள் நிகழ்காலத்தவையாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவைகள் அமுக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட கடந்தகால ஆசைகளாக இருக்கலாம். ஆசைகள் எதுவும் செத்துப் போய்விடுவதில்லை. நிழல்களைப்போல நம்மைத் தொடர்ந்துகொண்டே அவை வந்துகொண்டுள்ளன.

அம்மாவோ அப்பாவோ அக்காவோ தங்கையோ செத்துப் போவதாக ஒருவர் கனவு கண்டால், வருத்தமுடன்தான், கனவு கண்ட காலகட்டத்தில், அதாவது நிகழ்காலத்தில், அவர்கள் செத்துப்போக வேண்டும் என்று விரும்புவதாக அர்த்தம் அல்ல. மாறாக, அது ஒரு குழந்தைப் பருவ விருப்பமாக இருக்கலாம். ஆனால் இந்த கருத்தையும் ஆக்ரோஷமாக நீங்கள் மறுக்கலாம். எனவே, இது தொடர்பாக, மறைந்துவிட்ட அல்லது மறந்துவிட்ட, குழந்தைகளின் மனவாழ்வை மீண்டும் துருவிப் பார்க்க வேண்டியுள்ளது.

குழந்தைப் பருவத்தில் சகோதர சகோதரிகளின் உறவு மிகவும் அன்பானதாகத்தான் உள்ளது என்று சொல்லவே முடியாது. மாறாக, வயதும் பொறுப்பும் வந்துவிட்ட காலத்தில் பாச மலர்களாகத் திகழும் சகோதர சகோதரிகளெல்லாம் குழந்தையாக இருந்தபோது ஒருவரையொருவர் பங்காளிகளாகவும் ஜென்ம விரோதிகளாகவும் கருதி சண்டையிட்டுக்கொள்வது எல்லோருமே அறிந்த ஒன்றுதான்.

இளையவர்களின் பொம்மைகள், பொருள்களை பலவந்தமாக மூத்தவர்கள் அபகரித்துக் கொள்வதும் அதன் காரணமாக ஒரு பிரளயமே நடப்பதும் நமது வீடுகளில் காணும் அன்றாட காட்சிகள்தான். இந்த காலகட்டத்தில் மூத்தவர்கள் அல்லது வலியவர்கள் மீது எளியவர்களுக்கு ஏற்படும் வெறுப்பு, பொறாமை, பயம், கையறுநிலைக் கோபம் ஆகியவை புரிந்துகொள்ளக் கூடியதே.



வளர்ந்தபிறகு, இந்த குழந்தைப்பருவ உணர்வுகளின்மீது, பாசம், பொறுப்பு, தியாகம், விட்டுக்கொடுத்தல் போன்ற உணர்வுகள் அமர்ந்துகொள்கின்றன. அழுக்கப்பட்ட அந்த எதிர்மறை உணர்வுகள் வாய்ப்புக் கிடைக்கும்போது கனவில் வெளிவருகின்றன. அல்லது மனநோயாளிகளாக அவர்களை ஆக்குகின்றன. குழந்தைகளுக்கும் மனநோயாளிகளுக்கும் பெரும் ஒற்றுமை இருப்பதன் காரணம் இதுதான்.

இரண்டு மூன்று வயதுக் குழந்தைகளின் நடவடிக்கைகளை கவனித்தால் இது நன்கு விளங்கும். இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் மூன்று வயது மூத்தவனிடம் சொன்னார்களாம் : பார், ஸ்டார்க் (பறவை) உனக்கொரு தம்பிப் பாப்பாவை கொண்டுவந்து போட்டுள்ளது. தம்பி பாப்பாவை உன்னிப்பாக கொஞ்சநேரம் கவனித்துவிட்டு அண்ணன் பாப்பா சொன்னதாம் : ஸ்டார்க் மறுபடியும் இவனை தூக்கிக் கொண்டுபொய்விடும்! தங்கை பிறந்தபோது நான்கு வயது அக்கா சொன்னாளாம் : நான் என் சிவப்புத் தொப்பியை இவனுக்குத் தரமாட்டேன்!

தங்களுடைய சகோதர சகோதரிகளால் ஏற்படப்போகும் எதிர்காலப் பிரச்சனைகள் குறித்து முன்கூட்டியே குழந்தைகள் சரியாகக் கனித்துவிடுகின்றனர். மூன்று வயதுகூட நிரம்பாத ஒருத்தி தனக்குப் பிறகு பிறந்த குழந்தையை தொட்டிலிலேயே கழுத்தை நெரித்துக் கொல்ல முயன்ற பிரச்சனைகூட என்னிடம் வந்துள்ளது.

குழந்தைகள் பரிபூரணமான சுயநல வாதிகள். அன்பு, பொருள் என எல்லாமே தங்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்பதில் ரொம்ப தீவிரமுடையவர்கள்.

என் நோயாளிகள் அனைவருக்குமே இதுபோன்ற இறப்புக் கனவுகள் வந்ததுண்டு. ஒரே ஒருத்தி மட்டும் தனக்கு இவ்விதமான கனவுகள் வந்ததே இல்லை என்று அடித்துக்கூறினாள். ஆனால் அவள் கண்டதாகச் சொன்ன கனவு என் கருத்தை

உறுதிப் படுத்துவதாகவே இருந்தது.

அவள்தான் கடைசிக் குழந்தை. அவளுக்கு நாலு வயதிருக்கும்போது அந்த கனவு வந்தது. பின்னர் அது திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருந்தது.

கனவு : ஒரு குழந்தைக் கூட்டம். அண்ணன் தம்பி அக்கா தங்கை என. ஒரு திடலில் விளையாடிக்கொண்டிருக்கிறது. திடீரென்று எல்லோருக்கும் சிறகு முளைத்து அவ்விடம் விட்டு பறந்து சென்று மறைந்துவிடுகிறார்கள்.

இந்தக்கனவுக்கு என்ன அர்த்தம் என்று அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் அடிப்படையில் அது அவளுடைய சகோதர சகோதரிகள் இறக்கவேண்டும் என்ற விருப்ப நிறைவேற்றக் கனவுதான். ஆனால் சிதைந்துள்ளது.

அந்த குழந்தைக்கூட்டத்தில் உண்மையிலேயே ஒன்று இறந்து போனபோது, நாலு வயதாயிருந்த அவள், பெரியவர்களிடம் இறந்துபோன பிறகு என்னாகும் என்று கேட்டிருக்க வேண்டும். வழக்கமான பதில், அவர்களுக்குச் சிறகுகள் முளைத்து அவர்கள் குட்டி தேவதைகளாகி விடுவார்கள் என்பதே. அதன் பிறகு வந்ததுதான் அந்த கனவு. கனவில் எல்லோரும் சிறகு முளைத்துப் பறந்துசென்று விட்டார்கள். அவளைத் தவிர !

தனக்குப் போட்டியாக இருக்கும் சகோதர சகோதரிகளின் மீதெல்லாம் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்தில் வெறுப்பும் பகைமையும் இருப்பதை ஒத்துக்கொண்டாலும்



அவர்கள் சாகவேண்டும் என்று ஆசைப்படுகின்ற அளவுக்கா அது வலிமையானது? ஒவ்வொரு குற்றத்துக்கும் இறப்புதான் தண்டனையா?

ஆனால் இங்கே ஒன்றை மறந்துவிடுகின்றோம். வளர்ந்தவர்களுடைய அகராதியில் இறப்பு என்பதற்கு என்ன பொருளோ அதே பொருளை குழந்தைகளுடைய அகராதியில் இறப்பு தருவதில்லை.

இறப்பு, அது சார்ந்த பயங்கரம், வேதனை, துக்கம், பயம் எதுவுமே குழந்தைகள் உலகம் அறியாதது. தேசிய வரலாற்று அருங்காட்சியகத்துக்கு சென்றுவந்த ஒரு குழந்தை தன் அம்மாவிடம் இப்படிச்சொன்னதாம் : அம்மா, எனக்கு உன்மேல் ரொம்பப் பிரியம். நீ செத்துப்போகும்போது நானும் உன்னை அங்கே உள்ளதுபோல் பதப்படுத்தி இந்த அறையிலேயே வைத்துக்கொள்வேன். அப்பதான் எப்பவுமே உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்! இறப்பிற்கு குழந்தைகள் தரும் பொருளும் குழந்தைத்தனமானதே.

இறக்கும் கடைசிக் கணங்களின் வேதனைகளையெல்லாம் அறியாத குழந்தைக்கு, இறப்பு என்பதன் ஒரே அர்த்தம் இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமல் போய்விடுவதுதான். இப்படிப் போய்விடுவதால் உண்டாக்கப்படும் இல்லாமை அல்லது இன்மை எந்த முறையில் சாத்தியப்படுத்தப் படுகிறது என்பது அதற்கு முக்கியமல்ல. இடத்தைவிட்டு அகன்று விடுதல், பிரயாணப்படுதல், பிரிந்து போதல், உண்மையிலேயே இறந்து போதல் - எல்லாமே அதைப்பொறுத்தவரை ஒன்றுதான். ஒரு செவிலித்தாய் பணிமுடிந்து பிரிந்து போவதும் பெற்ற அன்னை இறந்து போவதும் அதற்கு ஒன்றுதான்.

குழந்தைகளைவிட்டு பலநாட்கள் பிரிந்து சென்ற அன்னையர் வீடு திரும்பும்போது தங்களைப்பற்றி குழந்தைகள் ஒருமுறைகூட விசாரிக்கவே இல்லை என்ற உண்மை அவர்களுக்கு கசக்கலாம். ஆனால் குழந்தைகள் பிரிவின் தீவிரத்தை உணர்வதே இல்லை. உண்மையிலேயே இறந்து போகும் அம்மாக்களை குழந்தைகள் மறந்துவிடுகின்றனர். வளர்ந்த பிறகுதான் அன்னையின்மை அவர்களுக்கு உரைக்கிறது.

எனவே தனக்குப் பிடிக்காத ஒரு சகோதரனோ சகோதரியோ அல்லது தோழியோ இறந்துவிட வேண்டும் என்று ஒரு குழந்தை நினைப்பதை யாரும் தடுக்க முடியாது. எனவே போட்டியாளர் இறக்கவேண்டும் என்ற விருப்பத்தைப் பொறுத்தவரை பெரியவர்களின் கனவுகளும் குழந்தைகளின் கனவுகளும் ஒரேமாதிரியானவையே என்பது நிரூபணமாகிறது.

போட்டியாளர்களைப் பொறுத்தவரை இது சரி. ஆனால் அன்பையும் பாசத்தையும் பொழிந்து தங்கள் தேவைகளையெல்லாம் நிறைவேற்றும் பெற்றோர்கள்கூட இறப்பதாக வரும் கனவுகளை எப்படி இந்த வரிசையில் சேர்க்க முடியும்? இந்த கேள்வி எழுப்புகின்ற பிரச்சனைக்கும் தீர்வு கனவுக்குள்ளேயே உள்ளது.

பெற்றோர் சாகவேண்டும் என்று குழந்தைகள் விரும்புகின்ற கனவுகளை எடுத்துக்கொண்டு பார்த்தால் இன்னொரு உண்மை விளங்கும். அதாவது பெரும்பாலான கனவுகளில், கனவு கண்டவர் ஆணாக இருந்தால் அவர் சாகடிக்க விரும்புவது அப்பாவாக இருக்கும். பெண்ணாக இருந்தால், இறக்க விரும்புபவர் அம்மாவாக இருப்பார்.



இது கால தேச வர்த்தமானங்களைக் கடந்த பொதுவான விதி என்று சொல்ல முடியாவிட்டாலும், நிறைய கனவுகள் இப்படித்தான் வருகின்றன. அன்பிலும் பாசத்திலும் போட்டியாக, எதிரியாக, ஆண்கள் தங்கள் அப்பாக்களையும் பெண்கள் தம் அம்மாக்களையும் நினைக்கின்றனர். எனவே போட்டியாளர்கள் இல்லாமல் போவதை அல்லது இறந்துபோவதை அவர்கள் விரும்பவே செய்கின்றார்கள். பாலியல் ரீதியான இந்த தெரிவு கனவுகளில் இருக்கத்தான் செய்கிறது என்பதை மறுக்க முடியாது. இது ஒரு காட்டுமிராண்டித்தனமான கருத்து என்ற முடிவுக்கு வருமுன் பெற்றோர் பிள்ளை உறவை நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது.

முதலில் தந்தை மகன் உறவை எடுத்துக்கொள்வோம். வேதாகமத்தில் இவ்வி; பற்றி சொல்லப்பட்டுள்ள விதிகளின் மீது நாம் ஏற்றி வைத்துள்ள புனிதத்துவம் உண்மைகளை புரிந்துகொள்ள விடாமல் நம்மை மழுங்கடிக்கிறது. மனிதர்களில் பெரும்பாலோர் ஐந்தாவது கட்டளையை நிறைவேற்றுவதே இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முயல்வதே இல்லை.

தந்தையானவன் எத்தகையதொரு இரக்கமற்ற எதேச்சதிகாரியாக இருந்தான் என்பதை நமது புராணம் மற்றும் இதிகாசங்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள தெளிவான தகவல்கள் காட்டுகின்றன. க்ரோனோஸ் தனது குழந்தைகளையே விழுங்கினான். ஸீயஸ் தனது தந்தையை மென்று துப்பினான் பன்றியைப்போல. பழங்காலக் குடும்பங்களில் தந்தையின் அதிகாரம் வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. தந்தை செத்தால்தான் தனக்கு நிம்மதி என்று ஒவ்வொரு அடக்குமுறைக்கு உள்ளான மகனும் நினைத்தான்

ஆனால் மகனும் நினைத்தான்.

இத்தகையதொரு பகைமை உணர்வை மத்தியதரவர்க்கத் தந்தைகளும் தம் மகன்களின் மனங்களிலே வளர்ப்பதையும் நாம் காணத்தான் செய்கிறோம். தந்தையின் இறப்பில் மகனுக்கு இருக்கும் சோகத்தின் பின்பக்கமாக விடுதலையாகிவிட்டோம் என்ற உணர்வு இருப்பதை மனநல மருத்துவர் புரிந்துகொள்வர். காலங்காலமாகத் தொடர்கின்ற இந்த தந்தை மகனுக்கிடையேயான போராட்டத்தை இப்சென் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளும் சித்தரிப்பதைக் காணலாம்.

தாய்க்கும் மகளுக்குமிடையேயான முரண்பாடு மகள் பருவமடைவதில் துவங்குகிறது. தன்னுடைய பாலுணர்வுத் தேவைகளை திருப்தி செய்து கொள்வதை மறந்துவிடவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ செய்வதற்கான கால கட்டம் வந்துவிட்டது என்று தாய் எச்சரிக்கப்படுகிறாள். இவ்வளவு சொன்னபிறகும்கூட, பிரியம் வைத்த பெற்றோர் இறப்பதாக வரும் கனவுகளை விளங்கிக்கொள்ள இது போதுமானதாக இல்லை. எனினும் அப்படிப்பட்ட கனவுகளுக்கான மூலம் குழந்தைப் பருவத்தில் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

மனநோயாளிகளுடைய விஷயத்தில் இது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. மேலும் பாலுணர்வு சார்ந்த விருப்பங்கள் குழந்தைகளுக்கு மிகவும் ஆரம்பத்திலேயே எழுந்துவிடுகின்றன என்றும் ஆண் குழந்தையின் விருப்பங்கள் தாயை நோக்கியும் பெண் குழந்தையின் விருப்பங்கள் தந்தையை நோக்கியும் உள்ளன என்றும் அறிய முடிகிறது. எனவே தந்தையும் தாயும் மகனுக்கும் மகளுக்கும் போட்டியாக ஆகிவிடுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரை, தாய் மகனுக்கும் தந்தை மகளுக்கும் செல்லம் கொடுப்பதை நாம் காண்கிறோம். அப்படி செல்லம் கொடுக்கப்படாத குழந்தை, கொடுக்காத பெற்றோரையும் கொடுக்கப்படுகின்ற வாய்ப்பைக் கெடுத்த



சகோதர சகோதரிகளையும் வெறுப்பது இயற்கை. இந்த வெறுப்புத்தான் கனவுகளில் இறப்பு விருப்பமாகப் பரிணமிக்கிறது.

ஆனால் இதையெல்லாம் நாம் கவனிக்காது விட்டுவிடுகிறோம். குழந்தைகள் கொஞ்சம் வளர்ந்த பிறகுகூட இந்த விருப்பங்கள் தொடர்கின்றன. எனக்குத் தெரிந்தவரின் எட்டு வயது மகள் தன் அம்மா இல்லாதபோதெல்லாம் ?ாலுக்கு வந்து 'இனிமேல் நான்தான் மம்மி. கார்ல், உனக்கு எதாவது வேண்டுமென்றால் நீயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ன? என்ற ரீதியில் பேசுவாள்.

நாலு வயது சுட்டிப்பெண்ணொருத்தி மனந்திறந்து, 'மம்மி போய்விடலாம். டாடி என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வார். அப்புறம் நான்தான் அவர் மனைவி என்று பிரகடனமே படுத்திவிட்டாள்! ஆனால் இப்படிப் பேசும் குழந்தை தன் தாய்மேல் பிரியமாக இருப்பதும் சாத்தியம்தான் என்பது மட்டுமல்ல அது ஒன்றும் முரண்பாடானதும் அல்ல.

அப்பா ஊரில் இல்லாதபோது அம்மாவை அணைத்துக்கொண்டு படுக்கும் மகன் அப்பா வெளியூரிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். அதற்கான ஒரே வழி அப்பா இறந்துபோவதை விரும்புவதுதான். குழந்தைகளுக்குத் தெரியும் இறந்து போனவர்கள் திரும்பி வருவதில்லை, தாத்தாவைப்போல !

ஒரு பெண் நோயாளி ஒருவரைப்பற்றி இங்கு குறிப்பிடுவது உதவியாக இருக்கும். அவள் பலவிதமான மனநிலைகளில் அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். ஒரு நிலையில் மிகவும் குழம்பியவளாக இருப்பாள். அப்போது அவள் தாயார் மீது ஒரு பிரத்தியேகமான வெறுப்பு வளரும். கண்டபடி தாயாரைத் திட்டுவாள். அவள் படுக்கை அருகே தாயார் வந்தால் அவரை அடித்துவிடுவாள். அதே நேரத்தில் தன் அக்கா ஒருத்திமீது மிகவும் பிரியமாக இருப்பாள்.

இன்னொரு நிலையில் குழப்பமிருக்காது. ஆனால் நிம்மதியாகத் தூங்கமுடியாது. அந்த நிலையில்;தான் நான் அவளுடைய பல கனவுகளை அலசிப் பார்க்க நேர்ந்தது.

அவளுடைய பல கனவுகள் அவள் தாயாரின் இறப்போடு சம்மந்தப் பட்டவையாகவே இருந்தன. ஒரு கனவில் ஒரு வயதான பெண்ணின் ஈமச்சடங்குகளில் கலந்துகொள்வாள். இன்னொன்றில் அவள் அக்கா துக்க உடை அணிந்திருப்பாள்.

அவளுடைய நிலைமை மோசமாக மோசமாக அவளுக்கு பலவிதமாக பயங்கள் வர ஆரம்பித்தனஅதில் ரொம்பவும் அவளை வேதனைப்படுத்தியது அவள் அம்மாவுக்கு ஏதோ நடந்துவிட்டது என்ற பயம்தான். அந்த நேரத்தில் அவள் எங்கே போயிருந்தாலும் உடனே வீட்டுக்கு விரைவாள். தன் அம்மா உயிரோடுதான் இருக்கிறாள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள.

ஒரே ஒரு எண்ணம் எப்படி மனதை பல விதங்களில் வேதனைப்படுத்த முடியும் என்பதை எனக்கிது உணர்த்தியது. குழப்பமாக இருக்கும்;போது, ஆழ்மன வெறுப்பு அம்மாவைத் திட்டவும் அடிக்கவும் வைக்கிறது. அமைதியாக இருக்கும்போது, வேறுவழியின்றி, அம்மா இறப்பதைப் பற்றிய கனவுகள் வருகின்றன. நார்மலாக உள்ளபோது, வெறுப்பு மிகைப்படுத்தப்பட்ட கவலையாக மாறிவிடுகிறது.



இவளைப்போலவே ஒரு இளைஞன் இருந்தான். அவன் வெளியே போகவே பயந்தான். வெளியே போனால் தெருவில் போகிற வருகிறவர்களையெல்லாம் கொன்றுவிடுவோம் என்று அவனுக்கு பயம். ஊரில் ஏதாவது கொலை நடந்தால் அதற்குக் காரணம் தான் இல்லை, அந்த நேரத்தில் தான் அந்த ஊரிலேயே இல்லை என்பதற்கான அலிபியைத் தயார் செய்வதில் தன் நேரத்தைச் செலவழித்தான் ! இவ்வளவுக்கும் அவன் நன்கு படித்த ஒழுக்கமுள்ள இளைஞன்.

ரொம்பவும் கண்டிப்பாக இருந்த அவனுடைய தந்தையைக் கொல்லவேண்டும் என்ற எண்ணமே இதற்கெல்லாம் காரணம் என்று தெரிய வந்தது. ஏழு வயதிருக்கும்போது இந்த எண்ணத்தை வெளிப்படையாகவே அவன் கூறியுள்ளான். அவனுடைய 31வது வயதில் அவனுடைய தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்தும் போனார். அதன் பிறகுதான் அந்நியர்களை தந்தையாக எண்ணுகிற, கொன்றுவிடுவோம் என்ற பயம் வளர்ந்த மனநோய்க்கு ஆளானான். கடைசியில் அவன் தன்னைத்தானே ஒரு அறையில் பூட்டிக்கொண்டான்.

குழந்தைகளை பெற்றோர் நடத்தும் விதம்தான் அவர்கள் வளர்ந்த பிறகு மனநோயால் பாதிக்கப்படுவதற்கு பெரும்பாலும் காரணமாகிறது. என் அனுபவத்தில் கண்ட உண்மையிது. பெற்றோரில் ஒருவரை விரும்பி இன்னொருவரை வெறுப்பதனால்தான்

இப்படி ஏற்படுகிறது. இந்த உண்மை இதிகாச காலத்திலிருந்து நமக்கு வருகிறது. ஈடிபஸ் அரசனின் இதிகாசத்தை வைத்து கிரேக்க மொழியில் எழுதப்பட்ட ஸோஃபகில்ஸ் உடைய நாடகத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

ஈடிபஸ் கதை

ஈடிபஸ் என்பவன் லயஸ் என்பவனுக்கும் ஜொகாஸ்டா என்பவளுக்கும் மகனாகப் பிறந்தான். லயஸ் தீப்ஸ் நாட்டின் ராஜாவாக இருந்தான். ஈடிபஸ் வயிற்றிலிருக்கும்போதே தன் தகப்பனைக் கொல்வான் என்று சாமி (ஆரக்கில்) சொன்னதால் பிறந்த உடனேயே அவனைப்பற்றிய உண்மையை எல்லோரும் அறியும்படி பிரகடனப்படுத்தி வைக்கப்பட்டது. அதோடு அவன் நாட்டைவிட்டு வெளியேற்றவும் பட்டான். குழந்தை காப்பாற்றப்பட்டு வேறு நாட்டின் இளவரசனாக வளர்ந்து வந்தான். வளர்ந்த பிறகு அவனுக்கும் தான் யார் என்பது பற்றி சந்தேகம் வர, ஆரக்கிலைக் கேட்கிறான். அவன் தன் சொந்த ஊருக்குப் போக வேண்டாமென்றும் தன் தந்தையைக் கொன்று தாயையே திருமணம் செய்துகொள்ள அவன் விதிக்கப்பட்டிருக்கிறான் என்றும் கூறி ஆரக்கில் எச்சரிக்கிறது.

ஆனால் எப்படியோ வரும் வழியில் அரசன் லயஸை சந்திக்கிறான். திடீரென ஏற்படும் சண்டையில் அவனைக் கொல்கிறான். பிறகு தீப்ஸுக்கு வருகிறான். வழியை அடைத்துக்கொண்டு நின்ற ஸ்பின்க்ஸ் என்ற ராட்சத மிருகம் சொன்ன புதிரை அவிழ்த்து அதையும் கொல்கிறான். மகிழ்வுற்ற தீப்ஸ் நாட்டு மக்கள் அவனை அந்நாட்டுக்கு அரசனாக்கி ராணி ஜொகாஸ்டாவையும் அவனுக்கு மணமுடித்து வைக்கின்றனர்.

பல்லாண்டுகள் நல்லாட்சி புரிகிறான். தன் அன்னையான ஜொகாஸ்டா மூலமாக அவனுக்கு இரண்டு மகன்களும் மகள்களும் பிறக்கின்றனர். பின் ஒரு கொடிய கொள்ளைநோய் தீப்ஸில் பரவுகிறது. அதன் காரணமென்ன என்று ஆரக்கிலை வினவியபோது அது அவனைப்பற்றிய உண்மையைச் சொல்லிவிடுகிறது. அந்த உண்மையின் கசப்பைத் தாங்கமுடியாத அவன் தன் கண்களை தானே குத்திக்



குருடாக்கிக்கொண்டு நாட்டை விட்டு வெளியேறுகிறான். ஆரக்கிலின் ஆரூடம் நிறைவேறிவிட்டது.

ஈடிபஸ் ரெக்ஸ் எனப்படும் இந்த துன்பவியல் நாடகம் விதியின் கதை. மனிதர்களின் பிரயத்தனங்களுக்கு எதிராக கடவுள்களின் விருப்பம்தான் நிறைவேறும் என்பதை உணர்த்தும் கதையாகத்தான் அது சொல்லப்பட்டது. விதி வலியது என்பதை வலியுறுத்தத்தான் அந்த கதை.

ஆனால் ஈடிபஸ்ஸின் கதை நவீன காலத்தவர்களையும் பாதிக்கிறது என்றால் அதன் காரணம் கடவுளின் விருப்பம்தான் நிறைவேறும் என்ற உண்மையல்ல. ஈடிபஸின் விதியும் நமது விதிதான். நாமும் பிறப்பதற்கு முன்பே ஆரக்கில் அப்படியொரு சாபத்தை நமக்கு விதித்திருக்கிறது. இது நம் அனைவரின் விதியுமாகும். நாமும் நமது முதல் பாலுணர்வை தாயைநோக்கியும் முதல் வெறுப்பையும் கொலையுணர்வையும் தந்தையை நோக்கியும் திருப்ப விதிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கனவுகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

தந்தையைக் கொன்று தாயை மணந்த ஈடிபஸின் கதை நமது குழந்தைப்பருவ விருப்பங்களின் நிறைவேற்றம்தான். ஆனால் அதிர்ஷ்டவசமாக அம்மாக்களின் மீதான நமது பாலுணர்வையும் அப்பாக்களின் மீதான நமது வெறுப்பையும் பொறாமையையும் மறைப்பதிலும் மறப்பதிலும் நாம் வெற்றி கண்டுவிட்டோம். அதாவது நாம் மனநோயாளிகளாக மாறாத பட்சம்.

நாம்தான் ஈடிபஸ். அவனைப்போலவே நாமும் ஒழுக்க விதிமுறைகளுக்குப் புறம்பான இத்தைகைய உணர்வுகளைப் பற்றிய அறியாமையில் வாழ்கிறோம். அவைகள் வெளித்தெரிந்தவுடன் அத்தகைய குழந்தைப் பருவ காட்சிகளுக்கு, ஆசைகளுக்கு கண்களை மூடிக்கொள்ளவே நாம் விரும்புகிறோம்.

ஈடிபஸ் கதையும் கருவும் பழங்கால கனவுகளிலிருந்தே எடுக்கப்பட்டது என்பதற்கான குறிப்பு அந்த நாடகத்திலேயே உள்ளது. ஆரக்கில் சொன்னதை எண்ணி ஈடிபஸ் சங்கடப்பட்டபோது, பெற்ற தாயோடு படுத்துக்கொள்வதாக மனிதர்கள் அர்த்தமற்ற கனவுகள் காண்பது சகஜம்தான் என்று ஜொகாஸ்டா அவனுக்கு ஆறுதல் கூறுகிறாள்.

இன்று பல பேர் தங்கள் தாயோடு உடலுறவு வைத்துக்கொள்வதாகவும் தந்தை இறப்பதாகவும் கனவு கண்டு அதிர்ச்சியும் ஆச்சர்யமும் அடைகின்றனர். இந்த இரண்டு மாதிரிக் கனவுகளுக்கும் நமது கற்பனை தந்த எதிர்வினைதான் ஈடிபஸ் கதை.

ஆரக்கில் பற்றிய குறிப்பு : அந்தக்கால கிரேக்கக் கோவில்களில் இருந்த பெண் பூசாரிகளிடத்தில் கேள்வி கேட்டால் அவர்கள் அந்தக் கேள்விக்குறிய கடவுளின் பதிலை சங்கேத பாஷையில் சொல்வர். பின்னர் அது அறிந்தவர்களால் விளக்கப்படும். கேள்வி அல்லது சந்தேகம் கேட்டவர்களே கடவுளின் பதிலைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கலாம். ஏதென்ஸ் நகரத்திலேயே யார் அறிவாளி என்று ஒரு நண்பர் கேட்டதற்கு சாக்ரடீஸ் என்று ஆரக்கில் சொன்னதாக (புராண)வரலாறு.

ஹேம்லட் கதை

சேக்ஸ்பியரின் புகழ்பெற்ற துன்பியல் நாடகமான ஹேம்லட் கதையில் தந்தையைக் கொன்று தாயைத் திருமணம் செய்துகொண்டவனைக் கொன்று பழிக்குப்பழி



வாங்குமாறு மகன் ஹேம்லட்டிடம் அவன் தந்தையின் ஆவி கேட்டுக்கொள்கிறது. அப்படியே செய்வதாக உறுதியளிக்கும் மகனால் கடைசிவரை அந்த வாக்குறிதியை நிறைவேற்ற முடியவில்லை. வீரனான ஹேம்லட்டின் தயக்கத்திற்கு இலக்கிய விமர்சகர்களால் சரியான காரணம் சொல்ல முடியவில்லை.

ஆனால் அந்த பாத்திரத்தின் புதிரை ஃப்ராய்ட் அவிழ்க்கிறார். அவர் பாணியில், தானே செய்ய நினைத்த ஒரு காரியத்தை இன்னொருவன் செய்திருக்கிறான். அவனுக்கு ஹேம்லட்டினால் நன்றி செலுத்தத்தான் முடியுமே தவிர எதிரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதனால்தான் அவன் தயங்கிக்கொண்டே இருக்கிறான் என்கிறார் ஃப்ராய்ட் !

இன்னும் சில மாதிரிக் கனவுகள்

காற்றில் பறப்பது போலவும் உயரத்திலிருந்து கீழே விழுவதுபோலவும் வருகின்ற மாதிரிக் கனவுகளை நான் கண்டதில்லை என்றாலும் என் நோயாளிகளை

மனஅலசல் செய்ததிலிருந்து அவற்றைப் பற்றிய சில விஷயங்களை தெளிவாகச் சொல்லமுடியும். இப்படிப்பட்ட கனவுகளும் குழந்தைப்பருவ பதிவுகளை மறுபடியும் கொண்டுவருகின்றன. பறக்கின்ற அல்லது விழுகின்ற விளையாட்டை குழந்தைகள் அதிகம் விரும்புகின்றனர்.அதிலும் அவர்களுக்கு அதில் மயக்கமோ பயமோ வருமெனில் அதையே அவர்கள் அதிகம் விரும்புவர். வளர்ந்த பிறகு இந்த விளையாட்டுகள் கனவுகளில் மறுபடி விளையாடப்படுகின்றன. ஆனால் அவர்களைத் தூக்கிவிட்ட அல்லது இறக்கிவிட்ட கைகளுக்குச் சொந்தக்காரர்கள் காட்டப்படுவதில்லை. எனவே அந்தரத்தில் பறப்பதாகவும் கீழேவிழுவதாகவும் தெரிகிறது.

உடலியக்கம் சார்ந்த இந்த கனவுகள் பாலுணர்வைத் தூண்டுவதாகவும் சமயங்களில் அமைந்து போகின்றன. அந்த உணர்வு சார்ந்த இன்பங்கள் கனவுகளில் கவலைகளாகப் பரிணமிக்கின்றன. இவ்வகைக் கனவுகளைப் பற்றிய முழுமையான விளக்கத்தை என்னால் தரமுடியவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பரீட்சைக்கனவுகள்

பள்ளி அல்லது பல்கலைக்கழகத் தேர்வுகளில் வெற்றி பெறாததாக வரும் கவலைக் கனவுகளும் மாதிரிக் கனவுகளே. குறிப்பாக பள்ளிப் பருவத்தில் நாம் செய்த தவறுகளுக்காக ஆசிரியரோ அல்லது தாய் தந்தையோ நம்மை தண்டிப்பர். ஆனால் அத்தகைய தண்டனைகளை நாம் வளர்ந்த பிறகு உள்ள வாழ்க்கையில் நாம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் எப்போதெல்லாம் நாம் பொறுப்பைத் தட்டிக்கழிக்கின்றோமோ அல்லது ஒரு தவறு செய்துவிடுகிறோமோ அதற்கு தண்டனைபோல நாம் மாணவப் பருவத்தில் பெற்ற தண்டனைகளை நினைவுறுத்துவதாக இந்த பரீட்சைக் கவலைக் கனவுகள் வருகின்றன.

மெட்ரிகுலேஷனில் தேறியவர்களுக்கே அதில் தேறாதமாதிரி கனவுகள் வருகின்றன. உண்மையிலேயே தவறியவர்களுக்கு வருவதில்லை என்பது இங்கு வேடிக்கையான ஆனால் குறிப்பிடத்தகுந்த விஷயம். நமது கடந்த காலத்தில் ஏதாவதொரு விஷயம் நடந்துவிடுமோ என்று நாம் மிகவும் பயந்து உண்மையில் அப்படி பயந்தமாதிரி எதுவும் நடக்காமல் போயிருக்கும். அப்படிப்பட்;ட ஒரு விஷயத்தை தேடி எடுத்துக்கொள்கின்றன இந்த கவலை தரும் பரீட்சைக் கனவுகள்.



தடயவியல் மருத்துவத் தேர்வில் நான் தவறியிருந்தேன். ஆனால் அது பற்றி எனக்கு கனவு வந்ததேயில்லை. பொதுவாக பரீட்சைக் கனவுகள் பாலுணர்வு அல்லது உடலுறவு சம்பந்தப்பட்ட சோதனைகளின் வெற்றி தோல்வி பற்றியதாகவே உள்ளது என்று வில்ஹெல்ம் ஸ்டெகல் (Wilhelm Stekel) கூறுகிறார். என்னுடைய அனுபவமும் இந்தக் கருத்தையே உறுதிப்படுத்துகிறது.

அத்தியாயம் - 8

கனவு செய்யும் வேலைகள்

(The Dream Work)

நாம் இதுவரை கொடுத்த கனவுகளுக்கான விளக்கங்கள் யாவும் கனவின் வெளி விஷயத்தை அடிப்படையாக வைத்தவையே. கனவின் உள்விஷயம் பற்றி நாம் இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் பார்க்கவில்லை. ஒரு சில குறிப்புகளை மட்டும் ஏற்கனவே கொடுத்துள்ளோம். இனி கனவின் உள்விஷயம் பற்றி விரிவாகப் பார்க்கலாம். ஏனெனில் அதை வைத்துத்தான் கனவை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

கனவின் உள்விஷயத்திலிருந்துதான் அதன் அர்த்தங்கள் பிறக்கின்றன. வெளி விஷயத்திற்கும் உள்விஷயத்திற்கு மிடையேயான தொடர்பு, மற்றும் எப்படி உள்விஷயம் வெளி விஷயமாக மாறுகிறது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

வெளிவிஷயம் என்பது காட்சி வடிவமானது. அந்தக் காட்சிகளை அப்படியே எடுத்துக் கொண்டால் கனவு அபத்தமானதாகத் தோன்றும். எந்த கனவெண்ணம் காட்சி ரூபமாகியுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளாவிடில் குழப்பம்தான். உதாரணமாக, ஒரு வீட்டின் கூரைமீது ஒரு படகு இருப்பதாகவும் ஒரு தலையில்லா மனிதன் ஓடுவதாகவும் கனவு வந்தால், இந்த வெளிவிஷயம் அர்த்தமற்றதாகவும் அபத்தமானதாகவும்தான் தோன்றும். வீட்டின் கூரைமீது படகு நிற்கவும் தலையில்லாத மனிதன் ஓடவும் சாத்தியமில்லை என்று தர்க்கம் கனவை உதாசீனப்படுத்தும். உள்விஷயத்தைப் புரிந்துகொண்டு இதே காட்சிகளைப் பார்க்கும்போது அதில் உள்ள கவிதையின் ஒழுங்கும் அழகும் புரியும். அதை அவிழ்ப்பதற்கு உள்விஷயத்தைப் புரிந்துகொள்வது முக்கியமானது, அடிப்படையானது.

காட்சிகளை சுருக்குகிறது கனவு (Dream as work of Condensation)

ஒரு பெரிய அளவில் விஷயங்கள் சுருக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை கனவின் காட்சிகளையும் கனவெண்ணத்தையும் ஒப்பிடும்போது புரிந்துகொள்ள முடியும். கனவெண்ணங்கள் மிகவும்; வளமானவை. அவற்றோடு ஒப்பிடும்போது, கனவு ரொம்ப ரொம்பச் சின்னதாக சுருங்கிவிடுகிறது. ஒரு கனவை அரைப்பக்கத்தில் எழுதிவிட முடியுமெனில் அதன் விளக்கத்திற்கு ஆறு அல்லது பனிரண்டு மடங்கு பக்கங்கள் தேவைப்படலாம்.

Page 25 of 34 (கனவுகளின் விளக்கம் 2 - சிக்மண்ட் ஃப்ராய்ட்)

ஒரு கனவை முழுமையாக விளக்கிவிட்டோம் என்று முடிவாகச் சொல்லவே முடியாது என்று நான் ஏற்கனவே கூறியது நினைவிருக்கலாம். ஒரு கனவுக்கான விளக்கம் திருப்திகரமானதாக அமைந்துவிட்டாலும் அந்த கனவின் அர்த்தம் அதோடு முடிந்துவிடுவதில்லை. கனவு என்ற கவிதையின் வேறுவேறு அர்த்தங்களுக்கான சாத்தியக்கூறுகள் எப்போதும் திறந்தே உள்ளன. எனவே எந்த அளவுக்கு கனவின் சுருக்க நிகழ்வு நடந்துள்ளது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். இந்த குறிப்பிட்ட அளவுதான் சுருக்குதல் நடந்துள்ளது என்று உறுதியாகச் சொல்லவே முடியாது.

கனவு கண்டு விழித்தவுடன், கனவு நீண்டதாக இருந்ததாகவும் ஆனால் அதில் பெரும்பகுதி மறந்துவிட்டதாகவும் ஒரு உணர்வு பெரும்பாலோருக்கு இருக்கும். இது

உண்மைதான் என்னும் கனவின் பெரும்பகுதியை மறந்துபோகத்தான் வேண்டும் என்ற அவசியமில்லை. வேண்டுமெனில் பிடிவாதமாக விழித்தவுடன் முயன்றால், முழுக்கனவையும் ஒன்று விடாமல் நினைவுபடுத்துதல் சாத்தியம்தான்.

ஆனால் கனவின் பெரும்பகுதி மறந்து போவதற்கும் கனவின் சுருக்க நிகழ்வுக்கும் தொடர்பில்லை. கனவின் மறந்துபோன பகுதிகளையும் நினைவில் இருக்கும் பகுதிகளையும் ஒரே மாதிரியான கனவெண்ணங்கள்தான் உருவாக்கின என்றும் சொல்ல முடியாது.

கனவெண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வருகின்றனவா? அல்லது கும்பலாகவா? அல்லது பல்வேறு இழைகள் பல்வேறு திக்குகளிலிருந்து வந்து எல்லாம் ஒரு புள்ளியில் இணைகின்றனவா என்பதுபோன்ற நுட்பங்களுக்குள் இப்போது நாம் செல்ல வேண்டியதில்லை. பிரக்ஞையற்ற நிலையில் எழும் எண்ணங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் நினைவில் வைத்துக்கொண்டால் போதுமானது. அதோடு, கனவுகள் உருவாவது ஒரு சுருக்க நிகழ்வைச் சார்ந்துள்ளது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஒரு உண்மை. இந்த சுருக்கம் எப்படி நிகழ்கிறது அல்லது நிகழ்த்தப்படுகிறது என்பதே இங்கு மிக முக்கியமானது.

விட்டுவிடுவதன் மூலம் (omission) சுருக்கம் நிகழ்கிறது எனலாம். அதாவது கனவுகள் கனவெண்ணங்களின் முழுமையான மொழிபெயர்ப்பல்ல. அதில் பலவற்றை விட்டுவிட்டு, பகுதிகளை மட்டும் எடுத்துக்கொள்கின்ற துண்டு துண்டான அல்லது துண்டாடப்பட்ட மொழிபெயர்ப்பு என்று சொல்லலாம். ஆனால் இந்தக் கருத்து சரியானதல்ல என்பதை விரைவிலேயே பார்க்கலாம். எனினும் இப்போதைக்கு சுருக்க நிகழ்வு என்றால் என்ன என்பதை விளங்கிக்கொள்வதற்கான ஒரு தொடங்குபுள்ளியாக இதனை வைத்துக்கொள்ளலாம்.

கனவெண்ணங்களின் சில பகுதிகள் மட்டுமே கனவின் காட்சிகளாக மாற்றப்படுகின்றன என்றால், அந்த குறிப்பிட்ட பகுதிகளை தேர்ந்தெடுப்பது எது? இதைத் தீர்மானிப்பதற்கு மீண்டும் ஒரு கனவைப் பார்க்கலாம்.

என்னிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த ஒரு வயதான பெண் நோயாளியின் கனவு இது. நிறைய கவலைக் கனவுகள் கண்டுகொண்டிருந்த அவள் பாலுணர்வு எண்ணங்களால் பெரிதும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தாள். அது தெரிய வந்ததும் அவள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானாள். எனினும் கனவின் சில பகுதிகளையும் அவற்றிற்கான மனஅலசல் முறை விளக்கங்களையும் மட்டுமே இங்கே சொல்ல முடியும்.



கனவில் வரும் ஒரு வார்த்தை அல்லது ஒரு காட்சி, எத்தனை எண்ணற்ற வார்த்தைகளையும் காட்சிகளையும் தொடர்புபடுத்துகிறது என்பதிலிருந்து எந்த அளவு சுருக்கம் நிகழ்ந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மே வண்டுக் கனவு

ஒரு சிறிய பெட்டிக்குள் இரண்டு சிறிய மே வண்டுகளை (அடைத்து) வைத்திருந்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. அதோடு அவைகளை பெட்டியைத் திறந்து வெளியே விட்டுவிட வேண்டும் இல்லையெனில் அவை மூச்சடைத்து செத்துவிடும் என்றும்

அவளுக்குத் தோன்றியது. பெட்டியைத் திறந்தாள். அதனுள்ளிருந்த மே வண்டுகள் மிகவும் களைப்படைந்திருந்தன. அதில் ஒன்று, திறந்திருந்த ஜன்னல் வழியே வெளியே பறந்து போனது. ஆனால் யாரோ கேட்டுக்கொண்டதன் பேரில் அவள் பெட்டியை மூட, அதில் மாட்டி இன்னொரு வண்டு நசுங்கியது.

விளக்கம்

அவளுடைய கணவன் வீட்டிலில்லை. தற்காலிகமாக அவன் எங்கோ சென்றிருந்தான். படுக்கையில் அவள் பக்கத்தில் அவளுடைய பதினான்கு வயது மகள் படுத்திருந்தாள். முந்திய நாள் மாலைதான் தன்னுடைய தண்ணீர் டம்ளரில் ஒரு பூச்சி விழுந்து கிடந்ததை மகள் சுட்டிக்காட்டினாள். ஆனால் அவள் அதை வெளியே எடுத்துப் போடவில்லை. மறுநாள் காலை பார்த்து செத்துப்போன பூச்சிக்காக மிகவும் வருந்தினாள். அன்று மாலை அவள் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தில்கூட ஒரு கதை வந்தது. அதில் சில வால் பையன்கள் ஒரு பூனையை கொதிக்கும் நீரில் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தப் பூனையின் வேதனைகள அந்தக் கதை விவரித்தது.

பூச்சி செத்தது, பூனையின் வேதனைக்கதை ஆகிய இந்த இரண்டு விஷயங்களும்தான் அவள் கனவுக்கான உடனடிக் காரணங்களாக இருந்தன. அவைகள் தன்னளவில் ஒன்றோடொன்று தொடர்பில்லாதவை எனினும்; பிராணிவதை பற்றி அவள் மேலும் சிந்தனை செய்தாள்.

சில வருடங்களுக்கு முன்னால் அவள் மகளும் பிராணிகளை வதை செய்பவளாகத்தான் இருந்தாள். வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்து வைத்துக்கொண்டு அவைகளை சாகடிப்பதற்கான ஆர்சனிக்(என்ற வேதிப்பொருள் அல்லது விஷயம்) உள்ளதா என்று அம்மாவிடம் கேட்பாள்.

ஒரு முறை முதுகுத்தண்டு வழியாக ஊசி குத்தப்பட்ட ஒரு பூச்சி அறையைச் சுற்றி பறந்துகொண்டிருந்தது. இன்னொரு நாள் மகள் வைத்திருந்த லாவாப்பூச்சிகள் பட்டினியால் செத்துப்போயின. இன்னும் சின்ன வயதில், வண்டுகள் மற்றும் வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகளை அவள் மகள் பிய்த்து எறிவாள். ஆனால் இப்போதோ அவள் இளகிய மனம் படைத்தவளாக மாறிவிட்டிருந்தாள். கடந்தகால இரக்கமற்ற நடவடிக்கைகளை எண்ணி அதிர்ச்சியடைந்திருந்தாள்.

இந்த முரண்பாட்டைப் பற்றி எனது நோயாளி சிந்தித்தாள். அவளிடமிருந்த இன்னொரு முரண்பாடும் அவளை உறுத்தியது. காமாந்தக உணர்வுகளால் அவள்



வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் தோற்றத்தைப் பார்க்கின்ற யாரும் அவளைப் பற்றி அப்படி நினைக்க முடியாது.

அவள் மகள் வண்ணத்துப் பூச்சிகளை சேகரித்து வைத்துக் கொண்டிருந்த அதே வருடம் அவள் மாவட்டத்தில் ஒரு கொள்ளை நோய் பரவியது. அதற்கு மேவண்டுகளே காரணம். குழந்தைகளெல்லாம் வெறி பிடித்தவர்களைப் போல வண்டுகளையெல்லாம் பிடித்து நசுக்கிக் கொன்று கொண்டிருந்தனர். இரக்கமே இல்லாமல். அந்த நேரத்தில் ஒருவன் மேவண்டுகளின் இறக்கைகளைப் பிய்த்துவிட்டு

அவைகளை அப்படியே சாப்பிட்டதையும் எனது நோயாளி பார்த்தாள்.

அவள் பிறந்ததும், திருமணமானதும் மே மாதம்தான். திருமணமான மூன்று நாள் கழித்து தான் மிகவும் சந்தோஇருப்பதாக அவள் தன் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதினாள்.ஆனால் அது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.

கனவு கண்டதற்கு முதல்நாள் மாலை பழைய கடிதங்களையெல்லாம் புரட்டிக்கொண்டிருந்தாள். அவற்றில் சிலவற்றை தன் குழந்தைகளிடம் உரக்கப் படித்து சொல்லிக்கொண்டும் இருந்தாள். அதில் அவள் சின்னவளாக இருந்தபோது அவளை விரும்பிய பியானோ ஆசிரியன் ஒருவன் எழுதிய கடிதம் ஒன்று. இன்னொன்று உயர்ந்த குடும்பத்தில் பிறந்த ஒருவன் எழுதிய காதல் கடிதம். (இந்த கடிதம்தான் அவள் கனவின் உண்மையான காரணமாக இருந்திருக்கிறது).

மாப்பசான் எழுதிய ஒரு கெட்ட புத்தகத்தை தன் மகள் வைத்திருப்பது கண்டு அவள் தன்னையே நொந்துகொண்டாள். மகள் கேட்ட ஆர்சனிக்(என்னும் வேதியியல் பொருள்) கதையில் டக்டிமோராவின் இளமையை திரும்பச் செய்யும் ஆர்சனிக் மாத்திரைகளை அவளுக்கு நினைவு படுத்தின.

பெட்டியைத் திறந்தாள் என்ற கனவின் சொற்றொடர் காம உணர்வுகளைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று கூறும் கவிதைகளை நினைவுபடுத்தின.

வீட்டில் இல்லாத கணவனைப் பற்றியே எப்போதும் கவலை கொண்டவளாக அவள் இருந்தாள். அவனுக்கு ஏதாவது நேர்ந்துவிடும் என்ற எண்ணம், கற்பனை, தூக்கத்திலிருந்து அவளை பலமுறை பயங்கரக் கனவுகள் கண்டு விழித்து எழச்செய்யும்.

கொஞ்ச நாளைக்கு முன்பு அவளை மனஅலசல் முறை வைத்தியத்திற்கு உட்படுத்தியபோது அவள் தன் ஆழ்மனதில் கிடந்த ஒரு உண்மையைச் சொன்னாள். அதாவது அவள் கணவன் பாலுணர்வுகள் குறைந்தவனாக, எந்தவித ஆர்வமும் காட்டாதவனாக மாறிக்கொண்டு வருகிறான் என்பதுதான் அது.

கொஞ்ச நாளைக்கு முன் வீட்டு வேலைகளை செய்து கொண்டிருக்கும்போது, திடீரென ஒரு உத்தரவு மாதிரி ஒரு வாக்கியம் அவளுக்குத் தோன்றியது. அது அவள் கணவனை நோக்கிய கட்டளை வாக்கியம். அதைக் கண்டு அவளே அதிர்ச்சியுற்றாள் : போ, போய் தூக்கு போட்டுக்கொள்! என்பதுதான் அது!

இந்தக்கட்டளை அவளுக்குத் தோன்றுவதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்புதான் அவள் எதிலோ படித்திருந்தாள். அதாவது ஒரு மனிதன் தூக்குப் போட்டுக்கொண்டவுடன் அவன் உடலின் அவயவங்கள் யாவும் விறைத்து



விடுகின்றன. முக்கியமாக ஆண்குறி ரொம்பவும் விறைத்து நிற்குமாம். அதைப் படித்ததன் விளைவாக அந்தக் கட்டளை எழுந்திருக்கிறது.

போ, போய் தூக்குப்போட்டுக்கொள் என்றால், போ, போய் எப்படியாவது உன் குறியை விறைக்க வை என்று பொருள்! அதோடு ஸ்பானிஃ ஈக்கள் என்ற பெயரில் அழைக்கப்பட்ட, பாலுணர்வைத் தூண்டக்கூடிய சக்தி வாய்ந்த மாத்திரைகள்

நசுக்கப்பட்ட வண்டுகள் மூலம்தான் தயாரிக்கப் படுகின்றன என்பதையும் அவள் அறிந்து வைத்திருந்தாள். அவளுடைய கனவின் முக்கியமான (சிதைக்கப்பட்ட) பகுதி இது.

ஜன்னல்களை திறந்து மூடுகின்ற விஷயத்தில்தான் அவளுக்கும் அவள் கணவனுக்கும் முக்கியமாக சண்டை வரும். தூங்கும்போது அவளுக்கு காற்றடித்துக் கொண்டிருக்க வேண்டும். அவனுக்கு அது பிடிக்காது. கனவு கண்ட நேரத்தில் தனக்கு மிகவும் களைப்பாக இருந்தது என்று அவள் கூறினாள்.

நான் இந்த விளக்கத்தில் சில வார்த்தைகளை அடிக்கோடிட்டு காட்டியுள்ளேன். காரணம் கனவின் காட்சிகளில் உள்ள ஏதோ ஒரு (முக்கியமான) விஷயத்தை கனவெண்ணத்தோடு இணைகிறது என்பதை சுட்டுவதற்காகத்தான். அதோடு எத்தனை வகையான விஷயங்களை கனவு தொடர்பு படுத்திக் காட்டுகிறது என்று புரிந்து கொள்ளவும்தான்.

கனவில் வார்த்தைகள்

வார்த்தைகளையும் பெயர்களையும் கையாளும்போது, கனவின் சுருக்க நிகழ்வு தெளிவாக உணரப்படுகிறது. நமக்கு வார்த்தையாக உள்ளது கனவைப் பொறுத்தவரை திடப்பொருளைப் போலத்தான். இந்த வகைக் கனவுகள் மிகவும் வேடிக்கையாக இருக்கும்.பத்து வயதுப் பையன் ஒருவனின் கனவில் category என்ற வார்த்தை வந்தது. ஆனால் அந்த வார்த்தையின் அர்த்தம் அவனுக்கு பெண்குறி என்பதாக இருந்தது!

கனவில் பேசப்படும் வார்த்தைகள் யாவும் கனவு எங்கிருந்து அந்த வார்த்தைகளை எடுத்துக் கொண்டதோ அங்கே பேசப்பட்டவைதான். அவை பொதுவாக அப்படியே மாற்றப்படாதவையாக இருக்கும். அல்லது லேசாக இடமாற்றம் செய்யப்பட்டதாக இருக்கும்.

கனவில் வருகின்ற ஒரு பேச்சு நனவு வாழ்வில் நினைவுகொள்ளப்பட்ட பல பேச்சுக்களிலிருந்து எடுக்கப்பட்டதாக உள்ளது. வார்த்தைகள் மாறுவதில்லை எனினும் பல அர்த்தங்கள் கொண்டதாகவும் மூலத்திலிருந்து மாறுபட்டதாகவும் இருக்கலாம். கனவில் பேசப்படும்ஒரு வார்த்தை, அந்த வார்த்தை நனவு வாழ்வில்பேசப்பட்ட சூழ்நிலையை குறிக்கலாம்.

தன் நண்பர் ஒருவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை பற்றி ஃப்ராய்டுக்கு ஒரு கனவு வந்தது. கனவில் வந்த வாக்கியம் அந்த கட்டுரை நோர்க்கடல் ஸ்டைலில் உள்ளதாக சொன்னது. அந்த வார்த்தையின் பொருள் விளங்கிக் கொள்ள ரொம்ப கஷ்டமாக இருந்தது. பின்னர்தான் அது இப்சன் (என்பவர்) எழுதிய இரண்டு நாடகங்களில் வரும் நோரா மற்றும் எக்டால் என்ற இரண்டு பாத்திரங்களின் பெயர்களை இணைத்து சுருக்கிச் சொல்லியுள்ளது என்று புரிந்தது.



ஃப்ராய்டின் நோயாளி ஒருத்திக்கு ஒரு சின்ன கனவு வந்தது. அதன் முடிவில் ஆயளைவழுடடஅரவண என்ற அர்த்தமற்ற வார்த்தை வந்தது. அது ஒரு சாப்பிடக்கூடிய பொருளாக இருக்கலாம் என்று அவள் முதலில் நினைத்தாள். கடைசியில் அலசிப் பார்த்தபோதுதான் அது பல வார்த்தைகள் இணைந்த ஒரு கூட்டுச்சொல் என்று புரிந்தது.

அந்த சொல்லை நான்காக பிரித்துப் பார்க்க முடிந்தது. 1. mais (சோளம்), 2. toll(பைத்தியம்), 3.mannstoll (ஆண்கள்மீது பைத்தியம்கொண்ட பெண்), 4. Olmutz (மொராவியா நாட்டில் உள்ள ஒரு ஊர்). இந்த விஷயங்கள் யாவும் அவள் தன் சொந்தக்காரர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது நினைவில் போட்டுவைத்தது. எல்லாவற்றையும் சுருக்கி கனவு ஒரே வார்த்தையைக் கொடுத்துள்ளது.

கனவும் இடநகர்த்தலும் (The Work of Displacement)

கனவு எந்த அளவுக்கு விஷயங்களை சுருக்குகிறது என்பதை வரிவாய் ஆராயப் புகுந்ததன் விளைவாக கனவுகளைப் பற்றிய இன்னொரு உண்மை தெரிய வந்தது. இந்த உண்மை, கனவு ஒரு சுருக்க நிகழ்வு என்ற உண்மைக்கு எந்த விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்ததல்ல.

கனவின் காட்சிகளில் அல்லது வெளி விஷயத்தில் பிரதானமாக உள்ள எதுவும் கனவெண்ணத்திற்கு அல்லது உள் விஷயத்திற்கும் முக்கியமானது என்று சொல்ல முடியாது. இன்னும் சொல்லப்போனால் கனவெண்ணத்திற்கு எது அடிப்படையாக உள்ளதோ அது கனவில் வராமலே கூடப் போகலாம். கனவின் மையமும் கனவெண்ணங்களின் மையமும் வேறுவேறாகவே உள்ளன.

ஒரு நாடக நடிகையைக் காதலித்த ஃப்ராய்டின் நோயாளி ஒருவன் ஒரு கனவு கண்டான். அதில் ஒரு குறிப்பிட்ட தெருவில் நடக்கும் நாடகத்தைப் பார்க்க அவன் போகிறான். சமயங்களில் அவன் பார்வையாளனாகவும் சமயங்களில் அவனே நடிகனாகவும் வருகிறான். பின் கீழ்த்தளத்தில் இருந்தவர்களக்கும் மேல் தளத்தில் இருந்தவர்களுக்கும் தகராறு வந்துவிடுகிறது. மேலே உள்ளவர் கீழே வரவும் கீழே உள்ளவர் மேலே போகவும் மறுக்கிறார்கள்.

கனவின் வெளிவிஷயம் இவ்வாறு இருந்தாலும் உண்மையில் கனவெண்ணத்தின் நோக்கமெல்லாம் நாடகமோ கீழ்த்தளமோ மேல்தளமோ அல்ல. நாடக நடிகையை ஒத்த சமூக அந்தஸ்;து குறைந்தவர்களோடு செக்ஸ் சம்பந்தப்பட்ட உறவுகள் வைத்துக்கொள்வதால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி எச்சரிப்பதே அதன் நோக்கமாகும்.

அந்த மேவண்டுக் கனவும் இப்படிப்பட்டதுதான். செக்ஸூக்கும் சித்ரவதைக்கும் உள்ள தொடர்பைப் பற்றியதுதான் அதன் உள்விஷயம் என்றாலும் செக்ஸ் சம்பந்தப்பட்ட காட்சிகள் எதுவுமே அந்தக் கனவில் வெளிப்படையாக வரவில்லை. விளக்கத்தினால் மட்டுமே அதை வெளிப்படுத்த முடிந்தது.

இப்படி முக்கியமானதை பின்னுக்குத் தள்ளி, முக்கியமற்றதை முன்னுக்குத்தள்ளி ஒரு இடநகர்த்தலை கனவு செய்கிறது. இந்த இடநகர்த்தல் காரணமாக ஆழ்மனதில் இருக்ககும் ஆசைகள் கனவில் சிதைக்கப்பட்டு (புரிந்துகொள்ள முடியாதவாறு) வெளிப்படுத்தப்படுகின்றன. கனவின் இடநகர்த்தல் இந்த சிதைத்தல் வேலையை



வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறது. இதுபற்றி விரிவாக பின்பு பார்ப்போம். கனவெண்ணங்களுக்கு இடையேயான தர்க்கரீதியான தொடர்பை கனவுகள் காட்டுவதில்லை. அப்படிக் காட்டுவதற்கோ அவற்றை தனியாக

பிரதிநிதித்துவப்படுத்துவதற்கோ எந்த வழியுமில்லை.

இயக்கம் தடைபடுவது சம்பற்தமான கனவுகள்

நமது இயக்கங்கள் தடைபடுவதாக பலருக்கும் பலமுறை கனவுகள் வருகின்றன. இவைகள் மனநோயைத் தரக்கூடிய கவலைக் கனவுகளாகக்கூடிய வாய்ப்பும் உண்டு. முன்னால் நகர்வதற்கு முயற்சி செய்வோம். ஆனால் பசைபோட்டு ஒட்டின மாதிரி நகரமுடியாது. ஏதாவதொன்றைப் பிடிப்பதற்கு முயற்சி எவ்வளவு செய்தாலும் பலவிதமான தடைகளால் அது முடியாமல் போய்விடும்.

ரயில் கிளம்பிக்கொண்டிருக்கும். ஆனால் அதில் போயே ஆகவேண்டிய நம்மால் எவ்வளவு முயன்றாலும் எழவே முடியாது. நம்மை அவமானப் படுத்தியவரை அடிக்க கை எழும். ஆனால் அடிக்க முடியாது. இதைப்போல எத்தனையோ கனவுகள். இப்படிப்பட்ட கனவுகள் ஏன் வருகின்றன?

இதற்கு ஒரு விளக்கம், தூங்கும்போது நம் உறுப்புகளில் சில அசைவற்றுக் கிடப்பதை இந்த வகையான கனவுகள் மூலம் உணர்கிறோம் என்பது. ஆனால் இது ஒரு போதுமான விளக்கம் அல்ல.

இந்த ஒன்றும் செய்யமுடியாத சூழ்நிலை கனவில் ஒரு உணர்வாக வருவதில்லை. மாறாக, கனவின் ஒரு பகுதியாகவே வருகிறது. என்னுடைய ஒரு கனவே இதை விளக்கும்.

கனவு

இந்த கனவில் எனது நேர்மை சந்தேகிக்கப்படுகிறது. நான் ஒரு பொருளை திருடிவிட்டதாக சந்தேகிக்கப்பட்டு பின்பு 'இவரை ஏன் அழைத்துவந்தாய்? இவர் ஒரு மரியாதைக்குரிய மனிதராயிற்றே?' என்று ஒருவர் சொல்வதன் பேரில் நான் போகச்சொல்லப்படுகிறேன். ஆனால் என் தொப்பியைக் காணோம். நான் அங்கிருந்து போகமுடியவில்லை.

விளக்கம்

நான் ஒரு நேர்மையான மனிதன் என்று சொல்லப்படுவது என் கனவின் விருப்ப நிறைவேற்றப்பகுதி என்பது வெளிப்படையானது. எனவே கனவெண்ணங்களில் இதற்கு எதிரான முரண்பாடுகள் இருந்திருக்கும். தொப்பி காணாமல் நான் போகமுடியாமல் இருப்பது அந்த முரண்பாட்டையே குறிக்கிறது. இல்லை, நீ ஒரு நேர்மையான மனிதன் இல்லை, உன்னால் போகமுடியாது என்று அது கூறுகிறது.

எனவே கனவுகளில் இயக்கத் தடையானது, கனவெண்ணங்களில் உள்ள முரண்பாட்டைப் பிரதிபலிப்பதாக உள்ளது. வேறு சில கனவுகளில் இந்த இயக்கத்தடையானது ஒரு சூழ்நிலையாக காட்டப்படாமல் ஒரு உணர்வாகவே உணரப்படுகிறது. அப்போதும் அது முரண்பாட்டையே குறிப்பதாக உள்ளத. இயக்கத் தடை சம்பந்தமான உணர்வுகளைக் கொண்ட கனவுகள் கவலைக் கனவுகளாக



மாறும்போது, அது அடிப்படையில் அல்லது ஆழத்தில் பாலுணர்வு சம்பந்தப்பட்டதாக

உள்ளது.

நம்முடைய கனவு என்பது விருப்ப நிறைவேற்றமாக உள்ளது என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு உண்மை, கனவுக்குள் வரும் கனவானது நம் நிஜவாழ்வைப் பிரதிபலிக்கிறது என்பது. அதாவது, ஒரு குறிப்பிட்ட நிகழ்வை நமது கனவு, கனவுக்குள் கனவாகக் காட்டுமேயானால், அந்த குறிப்பிட்ட நிகழ்வு உண்மையானது என்று அடித்துக் கூறலாம். நனவை மறுதலிக்கின்ற இந்த வேலையை கனவு செய்வதை வைத்தே, கனவானது விருப்பங்கள் நிறைவேறுவதாகக் காட்டுகிறது என்ற கண்டுபிடிப்பை உறுதி செய்யலாம்.

கனவெண்ணங்களுக் கிடையேயான தொடர்பை எந்தெந்த வழிகளில் கனவு வெளிப்படுத்துகிறது என்பதை இதுவரை பார்த்தோம். அப்படிப் பார்க்கின்றபோதே, ஒரு கனவு உருவாகின்றபோது என்னென்ன மாற்றங்களுக்கு கனவெண்ணங்கள் உள்ளாகின்றன என்பதையும் கண்டோம். கனவின் எந்தப் பகுதியின் தொடர்பு கனவெண்ணங்களோடு முறிக்கப் படுகிறதோ அந்தப் பகுதி, கனவில், மிகவும் சுருக்கப்படுகிறது என்பதையும் அதோடு, கனவின் இடநகர்த்தலின் காரணமாக, அதாவது முக்கியமற்றதையும் முக்கியமானதையும் அதனதன் இடத்தைவிட்டு நகர்த்தி, கனவு மாற்றி வைத்துவிடுவதால், அவை பற்றிய உளரீதியான ஒரு மதிப்பீட்டு இடநகர்த்தலும் நிகழ்ந்துவிடுகிறது என்பதையும் அறிந்து கொண்டோம்.

இதுவரை பார்த்த இடநகர்த்த உதாரணங்களில் இரண்டு வேறுவேறு விஷயங்கள் இடமாற்றம் செய்யப்படுவதற்கு பதிலாக, அவற்றிற்கு இடையேயான ஒரு பொதுவான கருத்தே கனவின் இடநகர்த்தலில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதைப் பார்த்தோம். இன்னொரு வகையான இடநகர்த்தலில் சொல்லப்படும் சொற்கள் சம்பந்தப்படுகின்றன. இந்த இரண்டாவது வகை, கனவு மிகவும் அபத்தமாகத் தோன்றுவதற்கு, அபத்தம் என்ற மாறுவேஷத்தில் தோன்றுவதற்கு உதவுகிறது.

கனவெண்ணத்தில் உள்ள ஒரு தெளிவற்ற வார்த்தை வெளிப்பாடு, கனவில் ஒரு தெளிவான காட்சியாக உருப்பெறுகிறது. கனவைப் பொறுத்தவரை காட்சி என்பது ஒரு கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தகுதி வாய்ந்தது. கனவெண்ணம் என்பது அரூபமாக இருக்குமானால் அது பயன்படுத்த முடியாதது.

ஒவ்வொரு மொழியிலுமே, திடமான வார்த்தைகள், தங்கள் வளர்ச்சியின் வரலாறு காரணமாக, பல அர்த்தங்களை உள்ளடக்கக் கூடிய பன்முகத்தன்மை பெறுகின்றன. ஆனால் வெறும் கருத்துருவங்களால் இந்த நிலையை எட்டமுடிவதில்லை.

ஒரு கவிதையை எடுத்துக்கொண்டால், அதன் முதல் வரியின் சந்தம் இரண்டாவது வரியின் சந்தத்தோடு இசையவேண்டும். அதே சமயம் அந்த இசைவு ஒரு அர்த்தமுள்ளதாகவும் அல்லது அர்த்தத்தை அதிகப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

கவிதையைப்போல, கனவுகளும் வார்த்தை ஜாலங்களில் சிறந்து விளங்குகின்றன என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கனவுகளை உருவாக்குவதில் சொற்களுக்கு நியாயமான பங்கு உண்டு. கனவில் ஏற்படும் சிதைவுகூட இந்த சொற்களின் இடநகர்த்தலால் பயனடைகின்றன. அர்த்த விரிவு கொண்ட இரண்டு வார்த்தைகளுக்கு பதிலாக ஒரு வார்த்தை மட்டும் வருமானால் அது நம்மை தவறான பாதையில் அழைத்துச் செல்வதாக உள்ளது. நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் ஒரு

சொல்லுக்குப் பதிலாக ஒரு காட்சி காட்டப்பட்டால் அதைப்புரிந்து கொள்வது கஷ்டமாகிவிடுகிறது. ஏனெனில் கனவில் வருபவற்றை நாம் அப்படியே உள்ளது உள்ளபடியே புரிந்துகொள்ள வேண்டுமா அல்லது குறியீடாக எடுத்துக்கொள்ள வேண்டுமா என்று கனவு சொல்வதில்லை. ஒரு கனவு வரும்போது அதை

1) நேர்மறையானதாக எடுத்துக்கொள்வதா அல்லது எதிர்மறையானதாகவா

2) வரலாற்று ரீதியானதாக அதாவது ஒரு நினைவுகொள்ளலாக எடுத்துக்கொள்வதா

3) குறியீட்டுத் தன்மை கொண்டதாக எடுத்துக்கொள்வதா

4) கனவின் அர்த்தங்கள் கனவில் சொற்களைச் சார்ந்துள்ளதா

என்பதெல்லாம் சந்தேகத்திற்கு உரியவையே. எனினும் கனவுகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாவதில்லை என்று மட்டும் தைரியமாகச் சொல்லலாம்.

'அவள் தனது வாயை ஒழுங்காகத் திறந்து காட்டினாள்' என்ற இர்மா கனவின் வாக்கியத்தை இங்கே நினைவுகூறலாம். வாயைத் திறந்து காட்டுதல் மற்றும் மனதில் உள்ளதை மறைக்காமல் சொல்லுதல் என்ற இரு தளங்களில் அது இயங்குவதனால்தான் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற வேலையை அந்த கனவு அல்லது வாக்கியம் வெற்றிகரமாகச் செய்கிறது. வார்த்தைகள் போடுகின்ற இந்த மாறுவேஷே சாவிகளைப் புரிந்துகொண்டுவிட்டால் இத்தகைய கனவுகளைத் திறப்பது எளிது. கனவு எப்படி ஒரு கருத்தை காட்சியாக்குகிறது என்பதை கீழ்வரும் கனவின் மூலம் காணலாம். இந்த கனவு எனக்குத் தெரிந்த ஒரு பெண் கண்டது.

கனவு

அவள் ஒரு ஓபரா இசைநிகழ்ச்சியில் பார்வையாளராக உள்ளாள். காலை ஏழே முக்கால்வரை ஓபரா நடந்தது. மேஜைகள் போடப்பட்டு மக்கள் சாப்பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும் இருந்தனர். அவள் உறவுக்காரன் ஒருவன் தன் இளம் மனைவியோடு ஒரு மேஜையில். தேனிலவிலிருந்து திரும்பியிருந்தான் அவன். அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு பணக்காரர் அமர்ந்திருந்தார். அந்த உறவுக்காரப் பையனை அவன் இளம் மனைவி தேனிலவிலிருந்து நேராக மேஜைக்கு ஏதோ தொப்பியைக் கொண்டுவருவதுபோல அழைத்து வந்துவிட்டதைப் போலிருந்தது.

நடுவில் ஒரு உயரமான கோபுரம் அமைக்கப்பட்டிருந்து. இரும்புக் கூரைவேய்ந்த ஒரு மேடை அதன்மீது. அதில் நின்ற ?ன்ஸ் ரி:டரைப்போன்ற ஒருவர் அந்த ஆர்க்கெஸ்ட்ராவை நடத்திக்கொண்டிருந்தார். அவர் வியர்க்க வியர்க்க மேடையைச்சுற்றி வந்துகொண்டிருந்தார். அவள் தனது தோழியொருத்தியோடு ஒரு இடத்தில் அமர்ந்திருந்தாள். (அந்த தோழியை எனக்குத் தெரியும்). அவள் தங்கை அந்த மேஜையிலிருந்து அளவில் பெரிய ஒருபிடி நிலக்கரியை தன் சகோதரிக்குக் கொடுக்க விரும்பினாள். ' இவ்வளவு தாமதமாகும் என்று தெரியாது. இந்நேரம் எல்லாம் உறைந்திருக்கும் என்பதால்' என்றாள்.

விளக்கம்

கனவு கண்டவரைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியுமாதலால் அவர் உதவியின்றி, இந்தக் கனவை அலசிப்பார்க்காமல், நானே விளக்கிவிட முடியும். ஒரு குறிப்பிட்ட இசைக்கலைஞன் மீது அவளுக்கு பிரியமும் பரிவும் இருந்தது. இடையில் ஏற்பட்ட பைத்தியம் காரணமாக அவன் தனது இசைவாழ்வை இழந்திருந்தான். எனவே கனவில் வரும் கோபுரத்தை நான் உருவகமாக எடுத்துக்கொண்டேன்.

?ன்ஸ்ரி;டர் போல யாரோ ஒருவனை புகழின் உச்சியில் காணவிரும்பினாள் அவள். மிருகக் கூண்டைப்போல இரும்புக்கூரை வேயப்பட்டதில் அவன் வியர்க்க ஓடிக்கொண்டிருந்தது ?யூகோ உல்கம் என்ற அவனது பெயரைக் குறித்தது. நிலக்கரி என்பது ரகசியக் காதலைக் குறித்தது.

நெருப்புமின்றி நிலக்கரியுமின்றி

பற்றி எரிகிறது

யாருக்கும் தெரியாமல்

ரகசியக் காதல்

என்கிறது (ஜெர்மன் மொழிக்) கவிதை. கனவு கண்ட அவளுக்கும் அவள் தோழிக்கும் திருமணமாகாமலிருந்தது. அவள் தங்கை நிலக்கரியை (ரகசியக்காதலை) அக்காவிடம் கொடுத்துவிடுகிறாள். இவ்வளவு தாமதமாகும்(திருமணமாக)என்று தெரியாததால்.

தான் தெரிவு செய்த இசைக் கலைஞனை ஒத்த ஒருவனை அல்லது அந்த கனவில் வரும் பணக்காரனைப் போன்றவனை காதல் (திருமணம்) செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமே கனவாக வந்துள்ளது. திறந்த காதலுக்கும் (தேனிலவு ஜோடி) ரகசிய காதலுக்குமான ஒரு போராட்டமாக கனவு உள்ளது.

சில்பெரர் என்பவரின் ஆராய்சிக் கட்டுரைகளிலிருந்து, கருத்து எப்படி காட்சியாகிறது கனவில் என்பதற்கு மேலும் சில உதாரணங்கள் :

1. ஒரு கட்டுரையின் ஒழுங்கற்ற பகுதிகளை ஒழுங்கு படுத்த எண்ணினேன்.

கனவு : ஒரு மரப்பலகையை சமப்படுத்திக் கொண்டிருந்தேன்.

2. என் சிந்தனை திடீரென அறுந்துவிட்டது. எங்கே அறுந்தது என்பது தெரியவில்லை. அதன் ஆரம்பம் நினைவுக்கு வரவேயில்லை.

கனவு : அச்சுக் கோர்த்து வைத்திருந்ததில் கடைசி வரிகள் கீழே விழுந்துவிட்டிருந்தன.

செக்ஸ் குறியீடுகள்

ராஜாவும் ராணியும் தந்தையும் தாயும். இளவரசன் அல்லது இளவரசிதான் கனவு காண்பவர். நீளமான எந்தப் பொருளும் - குச்சி, கம்பு, மரத்துண்டு, குடை, கத்தி, வாள் முதலியன ஆண் குறியைக் குறிக்கும். குறிப்பாக விரிந்த குடையானது குறி விறைத்த நிலையாகும். எல்லா வகையான பெட்டிகளும், சின்னது பெரியது, அலமாரியும் அடுப்பும் பெண்ணின் கருப்பையைக் குறிக்கிறது. எல்லா வகையான பாத்திரங்களும்,

உள்ளே ஒன்றுமில்லாத பொருள்களும், அறைகளும் பெண்களைக் குறிக்கின்றன. பல அறைகளுக்குள் நுழைந்து போவதாக கனவு காண்பது விபச்சாரம் செய்வதைக் குறிக்கும். சமயங்களில் அது திருமணத்தையும் குறிக்கும்(கனவு காண்பவரைப் பொறுத்து).

கனவில் ஒரு அறைக்குள் செல்வதாகவும் உண்மையில் அது இரண்டு அறையாக உள்ளதாகவும் அல்லது இரண்டு அறைகளும் ஒரு அறைதான் என்பதாகவும் வரும் குழந்தைப் பருவ கனவுகள் குதவாயையும் பெண் குறியையும் ஒன்றாகக் குழப்பிக்கொண்ட குழந்தைப் பருவ அனுபவமென்று ஆராய்ச்சி கூறுகிறது.

படிகள், ஏணி, மேலே செல்லுதல், கீழே வருதல் சுவர் ஏறி குதித்தல் இவை யாவும் உடலுறவைக் குறிக்கின்றன.

காலி மேஜைகள், சாப்பாடு பரத்தப் பட்ட மேஜைகள் - பெண்களைக் குறிக்கின்றன. மரம் என்பதும் பெண்களின் உறுப்புகளைக் குறிக்கின்றன. ஆடைகள், தொப்பிகள் இவை மர்ம உறுப்புகளைக் குறிக்கும்.

ஆண்களின் கனவுகளில் கழுத்து டை, ஆண்குறியாகும். இதற்கு அவை நீளமாக இருப்பதும் ஒரு காரணம். ஏர் கலப்பை, கத்தி, துப்பாக்கி, வாள் போன்ற கருவிகளும் ஆண்குறியே. இயற்கைக் காட்சி, குறிப்பாக மலைகள், பாலங்களைக் கொண்டது, மர்ம ஸ்தானங்களைக் குறிப்பதாக உள்ளது.

கனவில் அடிக்கடி வரும் குழந்தைகளும் மர்ம உறுப்புகளையே குறிக்கின்றன வென்றும் சின்னது, சின்னத்தம்பி என்றும் தங்கள் உறுப்புகள் கொஞ்சப் படுவதையும் நாமனைவரும் அறிவோம் ! சிறு குழந்தைகளோடு விளையாடுவது, அவர்களை அடிப்பது எல்லாம் சுய இன்பத்தைக் குறிப்பதாகும்.

வழுக்கைத்தலை, தலையை வெட்டுவது, முடியை வெட்டுவது, பல் விழுவது இவை காயடித்தலை, ஆண்மை இழத்தலை குறிக்கும். பல்லிகள் அல்லது அதையொத்த பிராணிகளும் இதையே குறிக்கின்றன

(தொடரும்)



நன்றி : நாகூர் ரூமி
Visit : http://abedheen.wordpress.com/

## கனவுகளின் விளக்கம் 3 - சிக்மன்ட் ஃப்ராய்ட்

Freud's 'The Interpretation of Dreams' Translated by Dr. AS. Mohamed Rafee ( Nagore Rumi)




மீன்கள், நத்தைகள், பூனைகள், எலிகள், மற்றும் முக்கியமாக பாம்புகள் இவை யாவும் புராணங்களில் மட்டுமல்ல, நமது கனவுகளிலும் மர்ம ஸ்தானங்களையே குறிக்கின்றன. உண்ணிகளால் தொல்லை என வரும் கனவு கர்ப்பம் உண்டாகி இருப்பதைக் குறிக்கிறது. விமானமும் ஆண் குறியைக் குறிப்பதாகும்.

வலது இடது என்பது ஸ்டிகல் ( என்பவரின் ஆராய்ச்சி முடிவு ) சொல்வது படி, நமது அற உணர்வைக் குறிக்கிறது.இடது என்பது ஓரினச் சேர்க்க போன்ற தவறான உறவுகளையும் வலது என்பது திருமணம் போன்ற சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மன உறுத்தல் ஏற்படுத்தாத உறவுகளையும் குறிக்கிறது.

தங்கச்சிகள் முலைகளாவர். நமது லக்கேஜ் மர்ம உறுப்புகள்தான். மூன்று என்ற எண்ணும் ஆண் குறியையே சுட்டுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

நீளமான கூர்மையான எதுவும் பெண் குறியைக் குறிக்காது. அதேபோல பெட்டி பாத்ரூம் போன்றவை ஆண் குறியை குறிக்காது. எனினும் ஒரு குறியீடு இரு பாலரின் மர்ம உறுப்புகளையும் குறிப்பதாகத் தோன்றினால் அது ஒரு பெண் ஆணாக விரும்புவதையோ அல்லது ஒரு பெண்ணிடத்திலே உள்ள ஆண்மையையோ, ஒரு ஆணிடத்திலே உள்ள பெண்மையையோ குறிக்கலாம்.கை கால்கூட ஆண் குறியையும், வாய், காது, கண் ஆகியவை பெண் குறியையும் குறிக்கலாம்.

இவைகளெல்லாம் குறியீடுகள்தான். கனவின் விளக்கத்தில் இவைகளுக்கும் உரிய பங்குண்டு. எனினும் அது மிகைப்படுத்தப்பட்ட தாகவும் அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகவும் மாறிவிடக்கூடாது என்றும் எச்சரிக்கிறேன்

தொப்பிக் கனவு

ஒரு இளம் பெண் கண்ட கனவு இது. தான் கெடுக்கப் பட்டுவிடுவோம் என்ற பயத்தினால் உழன்று கொண்டிருந்த மன நோயாளி அவள்.

கனவு

கோடைக்காலத்தில் ஒரு நாள் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தேன் நான். தலையில் நான் அணிந்திருந்த தொப்பி ஒரு வினோதமான வடிவத்தில் இருந்தது. அதன் நடுப்பகுதி மேல் நோக்கியும் பக்கவாட்டுப் பகுதிகள் கீழ் நோக்கித் தொங்கிக்கொண்டும் இருந்தன. ( இந்த இடத்தில் மேற்கொண்டு தொப்பியின் வடிவத்தை விவரிக்க அவள் தயங்கினாள் ). பக்கவாட்டுப் பகுதிகளில் ஒன்றைவிட ஒன்று தாழ்வாகவுமிருந்தது.

நான் நல்ல சந்தோஷமான மன நிலையிலிருந்தேன். சில இளம் ஆபீஸர்களை தாண்டி நான் சென்றபோது இவர்களால் எனக்கு எந்த தீங்கும் வரமுடியாது என்று நினைத்தேன்.

விளக்கம்

தொப்பியானது ஆண் மகனை, குறிப்பாக ஆண் குறியை குறித்தது. ஜெர்மன் மொழியில் ' தொப்பியின் கீழ் வருவது ' என்றால் கணவனை அடைவது என்று பொருள். நான் இப்படிச் சொன்னதும், பக்கவாட்டில் பகுதிகள் தொங்கிக் கொண்டிருந்ததாக தான் சொல்லவே இல்லை என்று வாதிட்டாள். பின் மெல்லத் தயங்கித் தயங்கி ஒத்துக்கொண்டாள். அதன் பிறகு எல்லா ஆண்களுக்குமே ஆண்குறியின் கீழே உள்ள விதைகள் அப்படித்தான் ஒன்றைவிட ஒன்று தாழ்வாக இருக்குமா என்று கேட்டாள்.

தொப்பி என்பது ஆண்களின் மர்ம உறுப்புகளுக்கான குறியீடு என்பது ஏற்கனவே தெரிந்ததுதான். இவள் கனவின் மூலம் அது மேலும் உறுதிப்பட்டது. சில சமயங்களில் அது பெண் குறியையும் குறிப்பதாக உள்ளது. வெளியே போவதென்றாலே பயப்படுகின்ற நோயினால் பாதிக்கப் பட்டிருந்த என் பெண் நோயாளி கண்ட இன்னொரு கனவு.

விபத்துக் கனவு

அவளது அம்மா அவளது சின்ன மகளை வெளியே அனுப்பிவிட்டாள். அதனால் அவள் தனியாகச் செல்ல வேண்டியதாயிற்று. பின் அவள் தன் தாயாருடன் ஒரு ரயிலில் செல்கிறாள். அங்கே தன் சின்னவள் தண்டவாளங்களின் மீது நடப்பதைப் பார்க்கிறாள். நிச்சயம் ரயில் வந்து மேலே ஏறிவிடும். அவள் எலும்புகள் நொறுங்குகின்ற சப்தம் கேட்டது. ( இது அவளுக்கு ஒரு வித சங்கட உணர்வைத்தான் கொடுத்தது. பயங்கர உணர்வு ஏதும் உண்டாகவில்லை.) ரயிலின் பின்பக்க கண்ணாடி வழியாக (விபத்துக்குள்ளான உடலின்) பாகங்கள் தெரிகின்றனவா என்று பார்த்தாள். பின் சின்னவளை தனியாக போக அனுமதித்ததற்காக தனது தாயை கடிந்து கொண்டாள்.

விளக்கம்

இதன் முழு விளக்கமும் தருவது எளிதல்ல. இந்த கனவு திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்த கனவுகளின் பகுதியாகும். எனவே மற்ற கனவுகளோடு இதை தொடர்பு படுத்திப் பார்க்கும்போதுதான் இது முழுமையாக விளங்கிக்கொள்ளப்படும்.

எனினும், கனவில் வரும் ரயில் பயணத்தை தனது வாழ்க்கையை வைத்தே புரிந்து கொள்ள வேண்டும் என்று என் நோயாளி ஏற்கனவே சொல்லியிருந்தாள். ஒருமுறை நரம்புக் கோளாறுகளுக்கான காப்பகத்தை விட்டு வெளியேறிய அவள் ரயிலில் வந்தாள். அந்த காப்பகத்தின் இயக்குனர்மீது அவள் காதல் கொண்டிருந்தாள். அவள் அம்மா அவளை அழைத்து வந்தாள். அந்த இயக்குனர் அவளை ஸ்டேஷனில் சந்தித்து பிரிவுப் பரிசாக பூக்களைக் கொடுத்திருக்கிறார். இதை அவள் அம்மா பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்கு சங்கடத்தைக்கொடுத்தது.

பின்பக்கம் வழியாக பாகங்களைப் பார்ப்பதென்பது, அவள் சின்ன வயதில் அவள் தந்தை நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்ததைக் குறிக்கிறது. ஆண்களின் மர்ம உறுப்புகளை பின்னாலிருந்தும் பார்க்க முடியும். ஆனால் பெண்களுடையதை அப்படிப் பார்க்க முடியாது என்றும் அன்றிலிருந்து அவள் வாதாட ஆரம்பித்தாள். கனவில் வரும் சின்னது, சின்ன மகள் என்பதெல்லாம் தன் மர்ம உறுப்புகளையே குறிப்பதாக அவளே ஒப்புக்கொண்டாள்.

கனவில் தன் சின்ன மகளை அம்மா வெளியே அனுப்புவது, அதனால் தான் தனியாகச் செல்ல வேண்டிவருவது என்பது இரண்டு விஷயங்களைக் குறிக்கிறது. ஒன்று மர்ம உறுப்புகளே இல்லாத மாதிரி தான் வாழ வேண்டும் என்று அம்மா விரும்புவதையும் அதனால் அம்மா மீது உண்டான வெறுப்பையும் குறிக்கிறது. தான் தனியாக தெருவில் செல்ல வேண்டி வருவதானது, ஆண் துணையின்றி, அதாவது உடலுறவின்றி வாழவேண்டும் என்று அம்மா விரும்புவதைக் குறிக்கிறது.

இதனால் அம்மாவை அவள் வெறுத்தாள். அப்பா தன்மீது பிரியமாக இருந்ததனால் அம்மா தன் மீது கொண்ட பொறாமையை இது வெளிப்படுத்துவதாக அவள் உணர்ந்தாள்.

இன்னொரு கனவில் தன்னை தன் சகோதரனாக அவள் காண்கிறாள். குழந்தைப்பருவ செக்ஸ் கோட்பாட்டின்படி சிறுமிகள் என்பவர்கள் காயடிக்கப்பட்ட அல்லது அறுக்கப்பட்ட சிறுவர்கள். இதை அவளே உறுதி செய்திருக்கிறாள். சின்ன வயதில், " என்னடீ அறுத்திருக்கு ? " என்று சிறுவன் கேட்க, " இல்லை, எப்போதுமே இப்படித்தான் இருக்கு " என்று சிறுமி பதில் சொல்கிறாள்.

எனவே, சின்னவளை வெளியே அனுப்பிவிட்டு, தன்னை தனியே அம்மா போகச்சொல்வதாவது, தன் உறுப்பை அறுத்துவிடுவேன் அல்லது காயடித்துவிடுவேன் என்ற அம்மாவின் மிரட்டலைக் குறிக்கிறது

அம்மாவின் மீதான வெறுப்பை உணர்த்தக்கூடியதாகவும் இந்த கனவு அமைகிறது. சின்னவள், சின்னது என்பவை மர்ம உறுப்புகளைக் குறிக்கின்றன. விபத்தும் உடலுறவையே குறிக்கிறது என்பது பல கனவுகளிலிருந்து நிரூபணமாகிறது.

போலீஸ்காரனை கணவனாகப் பெற்ற, பிடிக்காத ஒருத்தியின் கனவு

.. திடீரென்று வீட்டுக்குள் யாரோ நுழைந்துவிட்டார்கள். அவளுக்கு பயமாக இருந்தது. அவள் போலீஸ்காரனைக் கூப்பிட்டாள். அவனோ அமைதியாக தேவாலயத்திற்குள் சென்றுவிட்டான். அதற்கு பல வழிகளிருந்தன. அவன் பின்புறம் ஒரு மலையும் அதன்மீது ஒரு அடர்ந்த காடும் இருந்தன.

விளக்கம்

தேவாலயம் பெண் குறியையும், மலையும் அடர்ந்த காடும் அதன் மேடான பகுதிகளையும் முடியையும், படிகள் உடலுறவையும் குறிக்கும். இதுவும் ஒரு செக்ஸ் கனவே.

ஒரு ஃப்ரெஞ்சு ஆயாவின் கனவு

இது உண்மையில் ஒரு கனவே அல்ல. ஒரு தினசரியில் வந்த ஏழு காமெடி வரைபடங்களின் தலைப்பு இது. தூங்கும் ஆயாவை எழுப்பும் உணர்வுத் தூண்டுதல் முதல் படம். சிறுவனுக்கு சிறு நீர் கழிக்க வேண்டும். ஆயாவின் உதவி தேவைப்படுகிறது. ஆனால் கனவில் ( படத்தில் ) ஆயா சிறுவனை வெளியில் 'வாக்கிங்' கூட்டிச் செல்கிறாள்.

இரண்டாவது படத்தில் சிறுவன் தெரு முனையில் அமர்ந்துவிடுகிறான். அவள் தூங்கத் தூங்க, அவள் எழவில்லை என்பது தெரிந்ததும் அவன் அலறத் தொடங்குகிறான். அவன் அலற அலற, தண்ணீரும் அதிகமாகிறது.

அவன் விட்ட சிறு நீரில் முதலில் ஒரு சின்ன படகு வந்து, கடைசியில் பெரிய கப்பலே வர ஆரம்பித்துவிடுகிறது ! தூங்க வேண்டும் என்ற விருப்பத்துக்கும் எழுப்ப வேண்டும் என்ற உணர்வுக்கும் இடையேயான போராட்டத்தை ஓவியர் சிறப்பாகக் காட்டியிருந்தார். கனவு எந்த அளவுக்கு விஷயங்களை மிகைப்படுத்துகிறது என்பதை இந்தக் கனவோவியம் அல்லது ஓவியக்கனவு தெளிவாக விளக்குகிறது.

இதுவும் மாடிப்படிதான்

மாடிப்படியில் ஏறுவதும் இறங்குவதும் உடலுறவைக் குறிக்கிற தென்பதை ஏற்கனவே பார்த்தோம். உடலுறவு கொள்ள முடியாத காரணத்தினால் ஏற்பட்ட மன நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த என் நோயாளி ஒருவருக்கு அடிக்கடி தன் அம்மாவோடு மாடி ஏறுவதாக கனவு வந்தது.

குறைந்த அளவில் சுய இன்பம் அனுபவிப்பது இந்தப் பிரச்சினையை ஓரளவு குறைக்கும் என்று நான் ஒரு வழி சொன்னேன். அதன் பிறகு அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில் அவருடைய பியானோ ஆசிரியர் அவர் பியானோ வாசிக்க வருவதேயில்லை என்று அவரை கடிந்து கொள்கிறார். ப்யானோ கீபோர்டுகூட மாடிப்படி மாதிரிதான் என்று கனவை அவரே விளக்கிக்கொண்டார் சரியாக.

இரண்டு பியர் பழங்கள்

நான்கு வயதில் கண்ட கனவை 35 வயதான ஒருவர் தெளிவாகச் சொன்னார். தன் தந்தையின் வக்கீல் இரண்டு பெரிய பியர் பழங்களைக் கொண்டுவருகிறார். ஒன்றை இவருக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு இன்னொன்றை ஜன்னல் ஓரம் வைக்கிறார்.

ஜன்னல் ஓரம்தான் அந்த இன்னொரு பழமும் இருக்கிறதென்று உறுதியுடன் விழித்த அவர் அந்த இன்னொரு பழத்தைக் கேட்டு தன் சிரிக்கும் தன் அம்மாவைத் தொந்தரவு செய்கிறார்.

அந்த இரண்டு பழங்களும் அவர் தாயின் தனங்களாகும். ஒன்றில் பால் குடித்த அவர் இன்னொன்றிலும் பால்குடிக்க மறுபடியும் விரும்புவதையே இக்கனவு குறிக்கிறது.

ஒரு செயல் மறுபடியும் செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தை கனவு எண்களின் பெருக்கத்தால் குறிக்கிறது எப்போதுமே.

சாதாரண மனிதர்களுடைய கனவுகளில் குறியீடுகள்



மன நோயாளிகளுடைய கனவுகள்தான் குறியீட்டுத் தன்மை கொண்டதாக இருக்க முடியும் என்றும் ஆரோக்கியமான மனிதர்களுடைய கனவுகள் இத்தகைய தன்மைகள் கொண்டதாக இருக்க முடியாது என்றும் மன அலசல் முறையின் எதிர்குழாம் கருதுகிறது. ஆனால் அது உண்மையல்ல என்று கீழே வரும் கனவு உணர்த்தும்.

கனவில் பூக்கள்

கனவு கண்ட பெண் மன நோயாளியல்ல. ஆனால் யாரிடமும் அதிகமாகப் பேசமாட்டாள். நான் அவளோடு பேசியதிலிருந்து அவளுக்கு நிச்சயமாகிவிட்டதென்றும் ஆனால் திருமணம் ஆவதில் சில பிரச்சனைகள் இருந்தன என்றும் அதனால் திருமணம் தள்ளிப்போய்க் கொண்டிருந்தது என்றும் அறிந்து கொண்டேன். கீழ் வரும் கனவை அவளே என்னிடம் சொன்னாள்.

கனவு

ஒரு பிறந்த நாளுக்காக ஒரு மேஜையின் மத்திய பகுதியில் அவள் பூக்களை வைத்துக்கொண்டிருந்தாள். அப்போது அவள் தன் வீட்டிலேயே இருந்ததாகவும் சந்தோஷமாக இருந்ததாகவும் ஒரு கேள்விக்கு பதிலாக அவள் சொன்னாள்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குறியீடுகளை வைத்து, வேறு எந்த உதவியுமின்றி அவள் கனவை என்னால் விளக்க முடிந்தது. திருமணம் சம்பந்தப்பட்ட விருப்பங்களை அது நிறைவேற்றியது.

விளக்கம்

மேஜையும் பூக்களோடிருந்த அதன் மையப்பகுதியும் அவளையும் அவளது மர்ம உறுப்புகளையும் குறித்தன. தனக்கொரு குழந்தை வேண்டும் என்ற எண்ணத்தில் அவள் மூழ்கியிருந்தாள். " மேஜையின் மையப்பகுதி " என்பது ஒரு வழக்கத்திற்கு மாறான பிரயோகம் என்றேன். ஒத்துக்கொண்டாள். ஆனால் அது எதைக்குறித்தது என்று நான் சொல்லவில்லை.

" என்ன பூக்கள்? " - கேட்டேன்.

" விலை மதிப்பானவை, விலையைக்கொடுத்துதான் அவற்றை வாங்கவேண்டும் " என்றாள். மேலும் " பள்ளத்தாக்கு வகை லில்லிகள், வயலட்டுகள், பிங்க்குகள், கார்னேஷன்கள் " என்றாள்.

லில்லி மலர் கற்பின், தூய்மையின் குறியீடு. அவளும் அப்படியே நினைத்தாள். பள்ளத்தாக்கு பெண்குறியாகும். எனவே கனவில் விலை மதிப்பற்ற் அவளுடைய கன்னித்தன்மையை அது குறித்தது. தனது மதிப்பை கணவனாக வரப்போகிறவன் புரிந்துகொள்வான் என்று நினைத்தாள்.

" விலையுயர்ந்த பூக்கள் " என்றது மூன்று பூக்களையும் பொறுத்து மூன்று விதமான

அர்த்தங்களை கொடுத்தது. வயலட்டுகள் செக்ஸ் தன்மையற்றவை. எனினும் கற்பழிப்பு என்று பொருள்படும் வயோல் என்ற ஃப்ரெஞ்சு சொல்லையும் சுட்டியது. ஆங்கில வயலேட் எனும் சொல் நினைவுக்கு வந்ததாக அவளே சொன்னது ஆச்சரியமாக இருந்தது.



'வயலட்' மற்றும் 'வயலேட்' என்ற வார்த்தைகள் கன்னிகழிவதில் உள்ள வன்முறையை அவளுக்கு உணர்த்தியது.

கார்னேஷன்களைப் பொறுத்தவரை அது 'கார்னல்' என்பதோடு சம்பந்தப்பட்டிருந்தது. அவள் காதலன் அந்தப்பூக்களைத்தான் அவளுக்கு அதிகமாகப் பரிசளிப்பானாம்.

'கார்னேஷன்' என்றவுடன் 'இன்கார்னேஷன்' என்ற சொல் நினைவுக்கு வந்ததாக அவள் சொன்னாள். அதைத்தான் நான் எதிர்பார்த்தேன். முதலில் "கலர்" என்று சொல்லியிருந்தாள். " கலர் " கூட உடலோடு சம்பந்தப்பட்டதுதான். 'இன்கார்னேஷன்' உடல் நிறப்பூக்கள்.

பூக்களைப் பரிசளித்ததானது, தனது கன்னித்தன்மையை அவனுக்கு அவள் தருவதையும் பதிலுக்கு அவனிடமிருந்து ஒரு மன நிறைவான் செக்ஸ் வாழ்க்கையை எதிர்பார்ப்பதையும் குறித்தது.

பூக்களைப் பொறுத்தவரை அவைகளின் இதழ்கள்தான் மர்ம உறுப்புக்கள். கனவை சரியாக விளங்கிக்கொள்ள இது மேலும் உதவும். காதலர்கள் பூக்களைப் பரிமாறிக்கொள்வதில் இப்படி ஒரு ரகசியமான குறியீட்டுத்தன்மை உள்ளது கவனிக்கத் தக்கது.

கனவில் ஒரு பிறந்த நாளுக்காகத்தான் தன்னை தயார் செய்துகொண்டிருந்தாள். அது அவளுடைய குழந்தை பிறக்கப்போகும் நாள்தான். அவள் கனவில் தன் காதலனாக தன்னையே பாவித்துக் கொள்கிறாள். ஒரு பிறப்புக்கு - பிறந்த நாளுக்கு - தயார் செய்து கொண்டிருந்ததானது உடலுறவையே குறித்தது. நான் அவனாக இருந்திருந்தால், இப்படிக் காத்திருக்க மாட்டேன். கன்னி கழித்திருப்பேன். வன்முறையிலாவது. இப்படித்தான் அவள் உள்மனது பேசியது. 'வயலட்'டும் 'வயலேட்'டும் அதையே குறித்தன.

அதோடு, கனவு அவள உடல் குறையையும் சுட்டுவதாக உள்ளது. அவள் தன்னை ஏற்ற இறக்கங்களற்ற தட்டையான ஒரு மேஜையாகக் காண்கிறாள். அதனால்தான் பூக்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அதன் மையப்பகுதிக்கு - அவள் கன்னித்தன்மைக்கு - நம் கவனத்தைத் திருப்புகிறாள் !

சின்ன கனவாக இருந்தாலும் கனவின் ஒவ்வொரு சொல்லும் குறியீடாக உள்ளது. உடலுறவு கொள்ள வேண்டும், குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விழிப்பு நிலையில் அவளைத் தொந்தரவு செய்துகொண்டிருந்த எண்ணங்களே இப்படிக் குறியீட்டுக் கனவாக வந்துள்ளது.

பிஸ்மார்க்கின் கனவு

ஜெர்மனியை ஒருங்கிணைத்த உலகப்புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவரும் ப்ரஷ்யாவின் பிரதம மந்திரியுமான பிஸ்மார்க் தான் கண்ட ஒரு கனவை சக்கரவர்த்தி முதலாம் வில்லியமுக்கு எழுதிய பதிலில் குறிப்பிடுகிறார்.

கனவு



நான் ஒரு குதிரையில் ஆல்ப்ஸ் மலைப்பக்கம் போய்க்கொண்டிருந்தேன். வலப்புறம் மலைகள். இடப்புறம் பாறைகள். போகப்போக பாதை குறுகிக்கொண்டே வந்தது. கடைசியில் வழியே இல்லாமல் போனது. மேலே செல்லவும் முடியாமல் திரும்பவும் முடியாமல் குதிரை நின்றுவிட்டது.

என் இடது கையிலிருந்த சாட்டையால் நான் இடது புறமிருந்த ஒரு பாறையின் மீது அடித்தேன். இறைவனை வேண்டிக்கொண்டே. சாட்டை முடிவற்றதாய் நீண்டுகொண்டே போனது. பாறை மாயமாய் மறைந்து பாதை ஒன்று பிறந்தது. அகலமாய். அங்கிருந்து மலைகளையும் காடுகளையும்கூட பார்க்க முடிந்தது. ப்ரஷ்யத் துருப்புகள் தங்கள் பேனர்களுடன் வந்துகொண்டிருந்தனர். ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

விளக்கம்

கனவு இரண்டு பகுதிகளாக உள்ளது. ஒன்றில் வழியே இல்லை. மேற்கொண்டு செல்லவோ திரும்பவோ முடியாது. இரண்டாவது பகுதியில் தீர்வு கிடைக்கிறது. இது பிஸ்மார்க்கின் நெருக்கடியான அரசியல் சூழ் நிலையக்குறிக்கிறது.

அவரால் மேற்தொடரவோ பின்வாங்கவோ முடியாத சூழ் நிலை. ஒரு தற்காலிகத் தீர்வாக கனவு அவரை ஆல்ப்ஸ் மலைப்பக்கம் அழைத்துச் சென்றுவிடுகிறது. தன் அரசாங்க பளுவையெல்லாம் மறந்து அங்கேதான் அவர் தன் அடுத்த விடுமுறையில் செல்வதாக இருந்தார். கனவு அவர் விருப்பத்தை நிறைவேற்றி இருக்கிறது.

அதோடு, அந்தக் குதிரை அவர்தான். மனிதர்களை குதிரையோடு அவர் பலமுறை ஒப்பிட்டிருக்கிறார். " வேலையில் உள்ளபோதே இறக்கும் குதிரைதான் நல்ல குதிரை " என்பது அவருடைய பிரபலமான வாக்கியம்.

மேலும் கனவு, அவரது சிறுவயது செக்ஸ் அனுபவங்களை திரும்பவும் எழுப்புகிறது. சாட்டை, கம்பு போன்ற எந்த நீளமான பொருளும் ஆண் குறியைக் குறிக்கும். அதை அவர் பிடித்திருந்தது இடது கையில். 'இடது' என்பது தடைசெய்யப்பட்டவற்றையே குறிக்கும். எனவே, இது அவர் சிறுவயதில் சுய இன்பம் அனுபவித்ததையே குறிக்கும்.

மேலும் சாட்டையால் அடித்து தண்ணீர் வரவழைத்து இஸ்ரவேலர்களின் தாகம் தீர்ப்பதாக பைபிளில் வருகிறது.பைபிளின் மீது பிரியமும் மரியாதையும் கொண்ட ப்ராட்டஸ்டண்ட் குடும்பத்தில் வந்தவர் பிஸ்மார்க் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சாட்டையை அடிப்பதும், அதிலிருந்து திரவம் வருவதும், அதன் காரணமாக இறைவன் கோபம் கொண்டு வாக்குறுதியளிக்கப்பட்ட ராஜ்ஜியத்தினுள் நுழைய முடியாது என்று மோஸஸை தண்டிப்பதும் சுய இன்பம் அனுபவிப்பது பற்றிய கற்பனையே என்பது சந்தேகத்திற்கிடமில்லாதது. இந்தக் கனவில் பிஸ்மார்க்கும் தன்னை ஒரு

மோஸஸாக பாவிக்கிறார்.

ப்ரஷ்யப் படைகள் எதிரி நாடான பொஹீமியாவில் வெற்றி வாகை சூடுவதாக கனவில் வருகிறது. கனவில் வரும் வெற்றி வாகையெல்லாம் காமாந்தக அனுபவங்களின் வெற்றியையே குறிக்கும். ( இந்த கனவுக்கான ப்ராய்டின் விளக்கம் சுவாரஸ்யமாக இருந்தாலும், சுய இன்பம் பற்றி பிஸ்மார்க் கனவு கண்டதற்கான தர்க்க ரீதியான சூழ் நிலை நியாயம் எதுவும் சொல்லப்பட வில்லை.)



இன்னும் சில மாதிரிக்கனவுகள்

பல் பிடுங்குவது, பல் வலிப்பது போன்ற கனவுகளும் சுய இன்பத்தை குறிப்பனவாக உள்ளன என்று பல கனவுகளை அலசிய பிறகு ப்ராய்டு முடிவுக்கு வருகிறார்.

ஒருவர் தனது பல் பிடுங்கப்படுவதாக கனவு கண்டார். விழித்தவுடன் அவருக்கு விந்து வெளியாகி இருந்தது. ஜெர்மன் மொழியில் சுய இன்பத்தை " வெளியே எடுப்பது" ( பல் போல ) என்று சொல்வார்களாம்.

கர்ப்பிணிப் பெண்கள் பல் வலிப்பதாக கனவு கண்டால் ஆண் குழந்தை பிறக்கும் என்று ஒரு நம்பிக்கை இருந்தது. கர்ப்பிணிப் பெண்கள் காணும் பல் சம்பந்தப்பட்ட கனவுகள் பிறப்புடன் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது என்று யங் கூறுவது இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

பறப்பது, மிதப்பது, விழுவது, நீந்துவது போன்ற கனவுகளெல்லாம் குழந்தைப்பருவ விளையாட்டுக்களில் நினைவுகளே. எனினும் அசைவு சம்பந்தப்பட்ட இந்த கனவுகள் செக்ஸ் உணர்வுகளை தூண்டவல்லவையே. எனினும் இதைப் பொதுவான விதியாகக் கொள்ள முடியாது. கனவு காண்பவரைப் பொறுத்து அர்த்தங்கள் வித்தயாசப்படலாம்.

பறக்கும் கனவுகளில் பெரும்பாலானவை ஆண்குறி விறைத்தலையே குறிக்கின்றன என்ற கருத்தை வியென்னவைச் சேர்ந்த டாக்டர் பால் பெடர்ன் முன்வைக்கிறார். ஏனெனில், குறி விறைத்தலானது புவி ஈர்ப்பு சக்தியை மீறி நடக்கின்ற, மேலே செல்லுகின்ற ஒரு அழகான விஷயம் என்றும் கூறுகிறார்.

பல பறக்கும் கனவுகளின் முடிவு குறி விறைத்தலாகவோ விந்து வெளிப்படுதலாகவோ உள்ளதன் காரணம் இதுவே என்கிறார் மூர்லி வோர்ல்டு என்ற இன்னொரு ஆராய்ச்சியாளர்.

கீழே விழுகின்ற கனவுகள் பெண்களைப் பொறுத்தவரை கவலைக் கனவுகளாக பரிணமிக்கும் வாய்ப்புள்ளது. கீழே விழுதலானது, காம உணர்வுகளுக்கு அவர்கள் அடிமைப்பட்டுப் போவதைக்குறிக்கிறது.

தண்ணீரைக் கிழித்திக் கொண்டு முன்னேறும் நீச்சல் கனவு காண்பவர்கள் பெரும்பாலும் படுக்கையை நனைப்பவர்களாகவே உள்ளனர்.

வளர்ந்தவர்களின் கனவுகளில் பெரும்பாலானவை செக்ஸ் உணர்வுகளை வெளிப்படுத்தும் விருப்பங்கள் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளன. குழந்தைப்

பருவத்திலிருந்தே தப்பு என்று அடக்கி, அமுக்கி வைக்கப்பட்ட உணர்வு செக்ஸ் உணர்வுதான். வளர்ந்த பிறகு கனவுகளின் மூலம் வெளிவரத்துடிக்கும் உணர்வுகளும் அவைகளாகவே இருப்பது இயற்கையே.

ஆனால் எல்லாக் கனவுகளுமே செக்ஸ் சம்பந்தப்பட்டவைதான் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் மாறுவேஷத்தில் வரும் செக்ஸ் கனவுகளை விளக்கினாலொழிய புரிந்துகொள்வது கடினம். கீழ் வரும் கனவையே பாருங்கள்.

கனவு



இரண்டு கம்பீரமான அரண்மனைகள். அதன் பின்புறம் ஒரு சின்ன வீடு. அதன் கதவுகள் மூடியிருந்தன. என் மனைவி என்னை அழைத்துச் சென்று கதவுகளை திறக்க வைக்கிறாள். அதன் பின் நான் எந்த சிரமுமில்லாமல் உள்ளே நுழைந்து விடுகிறேன். ஒரு சாய்வான இடமிருந்த ஒரு வராந்தாவினுள்.

விளக்கம்

குறுகலான வழிகளுக்குள் புகுந்து புறப்படுவது, கதவுகளைத் திறப்பது எல்லாம் புணர்ச்சியைக் குறிக்கும் என்பது கனவுகளை விளங்கிய அனுபவம் கொஞ்சம் இருந்தாலே புரிந்துவிடும். இரண்டு அரண்மனைகளும் இரண்டு புட்டப்பகுதிகள். கனவு கண்டதற்கு முதல் நாள்தான் கனவை என்னிடம் சொன்னவர் ஒரு இளம் பெண்ணை சந்தித்திருக்கிறார். அவள்தான் சிறிய வீடு. அவருடைய கூடல் முயற்சிகளுக்கு தடைசொல்ல மாட்டாள்போல அவள் இருந்தாளாம். பின்பு வந்த கனவு இது.

ஈடிபஸ் கனவுகள்

தாயோடு உடலுறவு வைத்துக்கொள்வதாக வரும் கனவுகள்தான் ஈடிபஸ் கனவுகள். இதில் மறைமுக ஈடிபஸ் கனவுகளே அதிகம் வருகின்றன.

தன் தாயோடு புணர்ந்த மாதிரி ஜூலியஸ் சீஸர் கனவு கண்டான். பூமியை ( தாயை ) அவன் வெற்றி கொள்வான் என்று அக்கனவுக்கு விளக்கம் சொல்லப்பட்டது.

தாயை முதலில் முத்தமிட்டவனுக்கே ரோமாபுரி என்று ஆரக்கிள் சொன்னதற்கு தாய் என்பது மண்ணே என்று ப்ரூட்டஸ் விளக்கம் கொடுத்தான்.

கனவில் சில இடங்களைப் பார்ப்போம். அவைகள் நமக்கு மிகவும் தெரிந்த இடங்கள். அங்கே பல முறை நாம் போயிருக்கிறோம் என்ற உணர்வு இருக்கும். அந்த இடங்கள் தாயின் மர்ம உறுப்புகள் ஆகும். அவ்வளவு நிச்சயமாக நாமறிந்த இடம்தான் வேறு உள்ளதா என்ன ?

தண்ணீர்க் கனவுகள்

ஆறு ஏரி குளம் என தண்ணீருக்குள் குதிப்பதாக, நீந்துவதாக, அதில் நிலவைக் காண்பதாகவெல்லாம் வருகின்ற கனவுகள் பெண்களைப் பொறுத்த அளவில் குழந்தை பிறப்பைக் குறிப்பதாக உள்ளது. ஏனெனில் புராணங்களில் உள்ளதுபோலவே,

தண்ணீரிலிருந்து குழந்தைகளை எடுப்பதானது, கனவில் சிதைந்து தண்ணீருக்குள் செல்வதாக வருகிறது. அடோனிஸ், ஆசிரிஸ், மோசஸ், பேக்கஸ் போன்றோரின் பிறப்பு தண்ணீரிலிருந்தே என்பது நமக்குத் தெரிந்த விஷயம்தான்.

தண்ணீரில் விழுந்தவரை காப்பாற்றுவதாக பெண்கள் காணும் கனவும் பிறப்பு சம்பந்தப்பட்டதே. ஆனால் ஆண்களுக்கு இந்த அர்த்தமல்ல.

கனவில் வசவு

Page 10 of 17 (கனவுகளின் விளக்கம் 3 - சிக்மண்ட் ஃப்ராய்ட்)

கனவுகள் பொதுவாக வசவுச் சொற்களைக்கூட குறியீடுகள் மூலம் உணர்த்துகின்றன. குரங்கு என்ற சொல்லும் மிருகங்களின் பெயர்களும் கனவுகளில் வசவுகளாக உள்ளது.

குரங்குக் கனவு

ஒருத்தி ஒரு கனவு கண்டாள். அதில் தன் வேலைக்காரி ஒரு ஏணியின் மீதேறி ஜன்னலொன்றைத் துடைப்பதுபோல் உள்ளது. அவள் கையில் சிம்பன்சி குரங்குக் குட்டியும் கொரில்லாப் பூனை ( அல்லது அங்கோராப் பூனை ) யும் இருந்தன. அவள் அந்த மிருகத்தை ( குரங்கா பூனையா என்று தெரியவில்லை ) கனவு கண்டுகொண்டிருந்த தன் எஜமானிமீது எறிகிறாள். சிம்பன்சி அவளோடு ஒட்டிக்கொள்கிறது.

விளக்கம்

வேலைக்காரி தன் எஜமானியைத் திட்டுவதையே இந்த கனவு குறிக்கிறது.

தலைகீழ்க் கனவு

ஒருவன் கனவில் ரயில் நிலையத்திற்கு வருகிறான். ப்ளாட்பாரத்தில் ரயில் வந்து நிற்பதற்கு பதிலாக, ரயில் நின்று கொண்டிருக்க, ப்ளாட்பாரம் போய் ரயிலுக்குக்கீழே தன்னை வைத்துக்கொள்கிறது ! கனவு காண்பதற்கு முன் தலைகீழாக மனிதர்கள் நடப்பதைப் போன்ற வரைபடங்களை அவன் பார்த்ததுதான் காரணம்.

கனவில் வயது

கனவில் வரும் நேரங்கள் பெரும்பாலும் கனவு காண்பவரின் குழந்தைப்பருவ வய்தைக் குறிப்பதாக உள்ளது. கனவில் காலை ஐந்தேகால் மணி என்றால் ஐந்து வருடம் மூன்று மாதம் வயதென்று பொருள்.

அபத்தக்கனவுகள்

அபத்தக் கனவுகளைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம். எனினும் அவற்றின் முக்கியத்துவத்தை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அபத்தக்கனவுகள் அர்த்தமற்ற கனவுகள் அல்ல. அவற்றின் அபத்தம் நம்மை ஏமாற்றும் ஒரு தோற்றமே. அவைகள் மிகவும் அர்த்த புஷ்டியானவை என்பது அவற்றை விளக்கியபிறகே தெரியும்.

இறந்தவர்களையெல்லாம் இருப்பவர்களாக நாம் காண்கின்ற கனவுகளும் இப்படிப்பட்டவைகளே. நம் கனவுகளுக்கு if என்ற நிபந்தனையை வெளிப்படுத்தத் தெரியாது. ஒரு வேளை தாத்தா உயிருடன் இருந்திருந்தால் என்ற கேள்வியை அது தாத்தா உயிரோடு இருப்பதாகத்தான் காட்டும்.

தன் தந்தை நோய்வாய்ப்பட்டிருந்தபோது அருகிலேயே இருந்து கவனித்துக்கொண்டிருந்த ஒரு மகன், அவர் இறந்த பிறகு மிகவும் துயருற்று ஒரு கனவு கண்டான்.



கனவு

அவன் தந்தை உயிரோடுதான் இருந்தார். வழக்கம்போல அவனோடு பேசிக்கொண்டு. ஆனால் வேடிக்கை என்னவெனில் அவர் செத்துப்போனது அவருக்கே தெரியாமல் !

தந்தை மரணப்படுக்கையில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபோது, இவர் செத்தாலாவது இவர் துயரம் தீருமே என்ற மகனுடைய நினைப்பே இங்கே அபத்தக்கனவாகியுள்ளது.

ஒரு முரண்பாட்டை எடுத்துச் சொல்வதற்கும் கனவு அபத்தத்தை ஒரு வழியாக பயன்படுத்துகிறது. அதோடு, ஒரு அபத்தக் கனவின் மூலம் நம் கனவெண்ணங்களின் 'மன நிலை'யையும் அறிந்துகொள்ளலாம்.

ஏதாவதொரு விஷயம் அபத்தமானது என்ற முடிவுக்கு நாம் வந்திருந்து, அந்த முடிவு கனவெண்ணங்களில் இருந்தால், கனவு அபத்தமானதாக ஆக்கப்படுகிறது. எனவே, கனவில் அபத்தமென்பது உள்விஷயத்தின் ஒரு பகுதியை வெளிவிஷயம் ஆக்குதலேயாகும். கனவுதான் அபத்தமானதாகத் தோன்றலாமே தவிர, கனவெண்ணங்கள் அபத்தமானவை அல்ல.

கனவுகளில் உணர்ச்சிகளின் தாக்கம்

ஸ்ட்ரிக்கர் கண்டுபிடித்த உண்மை ஒன்றை ஏற்கனவே சொல்லியுள்ளேன். அதாவது, " திருடர்கள் வந்து பயப்படுவதாக கனவு கண்டால், திருடர்கள் பொய் என்றாலும் பயம் உண்மை " என்றதுதான் அது. பயம் மட்டுமல்ல. சந்தோஷம், துக்கம் போன்ற எல்லா உணர்வுகளும்தான். கனவில் ஏற்படும் உணர்ச்சி அனுபவங்கள் நனவில் ஏற்படும் அனுபவங்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவை அல்ல.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், கனவில் நடக்கும் சம்பவங்களுக்கும் அவை ஏற்படுத்தும் உணர்வுகளுக்கும் தர்க்க ரீதியான உறவு இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கனவில் பயங்கரமான ஏதோ ஒன்றைக்கண்டு நான் கல்லு மாதிரி சும்மா இருக்கலாம். நிஜ வாழ்க்கையில் பயமே வராத ஏதோ ஒன்றைக் கனவில் கண்டு அலறலாம் !

சிங்கக்கனவு

பாலைவனத்தில் அவள் மூன்று சிங்கங்களைப் பார்த்தாள். அதில் ஒன்று சிரித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவைகளைப் பார்த்து அவள் பயப்படவில்லை.

விளக்கம்

கனவு கண்டவள் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது இங்லீஷ் காம்பொசிஷன் வகுப்பில் ஒரு வாக்கியம் வந்தது : " சிங்கத்திற்கு அழகு அதன் பிடரிதான் " என்று. அவள் தந்தையின் தாடிகூட சிங்கத்தின் பிடரி மாதிரிதான் அவர் முகத்தை அலங்கரித்திருந்தது. அதோடு, அவள் ஆசிரியை பெயரும் மிஸ். லயன்ஸ் ! அவளுக்குத் தெரிந்த ஒருவர் லோ (என்ற கவிஞனின் ) வின் கவிதைகளை அனுப்பியிருந்தார். ஜெர்மன் மொழியில் 'லோ' என்றால் 'சிங்கம்' என்று பொருள்.



ஆக, கனவில் வந்த மூன்று சிங்கங்களும் இவர்கள்தான். அதோடு, " பாலைவனத்தை எடுத்து சல்லடையில் கொட்டு. சலித்து எடு. மண்ணெல்லாம் கீழே கொட்டிவிடும். சிங்கங்கள் மேலே தங்கிவிடும் " என்பன போன்ற பாடங்களையும் அவள் விரும்பி கேட்டுள்ளாள் ! இந்த சிங்கங்களைக் கண்டு அவள் ஏன் பயப்பட வேண்டும் ?

ஃப்ராய்டின் மலக்கனவு

ஒரு மலையின்மீது ஒரு திறந்த வெளிக்கக்கூஸ். அதில் உட்காருமிடம் பெரிதாக உள்ளது. அதில் நிறைய திட்டுத்திட்டாக மலம். அதையெல்லாம் அவர் அவற்றின்மீது சிறு நீர் கழித்து சுத்தம் செய்கிறார். இந்த கனவோ அதில் வரும் காட்சிகளோ அவருக்கு எந்தவிதமான அருவருப்பையும் கொடுக்கவில்லை.

விளக்கம்

ஃப்ராய்ட் இந்த கனவின் மூலம் தன்னை ஒரு ஹெர்குலிஸ், கல்லிவர் இவர்களோடு ஒப்பிட்டுக்கொள்கிறார். சுத்தப்படுத்தலைச் செய்தது அவருக்கு மன நிம்மதியைக் கொடுக்கிறது.

ஹிஸ்டீரியா நோய்க்கும் மன வக்கிரங்களுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றி விரிவுரை ஆற்றிய பிறகு அவர் மனம் மிகவும் சோர்வடைகிறது. மனித அவலங்களை, அசிங்கங்களை எண்ணி.

அதற்குப் பிறகு வந்த இந்த சுத்தப்படுத்தும் கனவு தனக்கு சந்தோஷத்தையே கொடுத்ததாகக் கூறுகிறார்.

அத்தியாயம் - 9

கனவுகளின் உளவியல்

ஒரு விஷயத்தை விளக்குவதென்றாலே ஏற்கனவே தெரிந்த ஒரு விஷயத்தோடு அதை முடிச்சுப்போடுவது என்றுதான் அர்த்தம். ஆனால் கனவுகளின் உளவியலானது, நாம் இதுவரை வந்த பாதையின் அடிப்படையில் இப்படி ஒரு முடிச்சுப்போட முடியாத புதிராக உள்ளது. கனவுகள் உருவாவதற்கு முன்னும் பின்னும் என்னென்ன விஷயங்கள் நடக்கின்றன என்பதைத்தான் நான் கனவுகளின் உளவியல் என்று கூறுகிறேன்.

தந்தையின் கனவு

மரணப்படுக்கையில் இருந்த தன் குழந்தையைக் கூடவே இருந்து கவனிக்கிறார் ஒரு தந்தை. குழந்தை கடைசியில் இறந்துவிடுகிறது. களைப்பு மேலீட்டால் அவர், ஒரு கிழவனை பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, குழந்தை கண்ணில் படுமாறு பக்கத்து அறையில் போய் படுத்து உறங்குகிறார்.



அவருடைய கனவில் குழந்தை உயிரோடு வருகிறது. அவர் கையைப்பிடித்து இழுத்து, " நான் பற்றி எரிகிறேன் தந்தையே, உங்களுக்குத் தெரியவில்லையா? " என்று கேட்கிறது !

திடுக்கிட்டு விழித்த தந்தை, கிழவன் தூங்கிவிட்டதையும் குழந்தையின் உடலின் அருகில் ஏற்றிவைக்கப்பட்ட நீளமான மெழுகுவர்த்தி கீழேவிழுந்து, குழந்தையின் கைவரை தீப்பிடித்து கருகியிருந்ததை அறிந்துகொள்கிறார்.

விளக்கம்

குழந்தை உயிரோடு இருக்க வேண்டும் என்ற தந்தையின் விருப்பத்தை கனவு நிறைவேற்றியிருக்கிறது. " நான் எரிந்து கொண்டிருக்கிறேன் " என்றது உடம்பு சரியில்லாமலிருந்தபோது இருந்த உடல் எரிச்சலைக் குறித்திருக்கலாம்.

( இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் ஃப்ராய்ட் குறிப்பிடும் இந்த அற்புதமான கனவுக்கான அவருடைய அனுமான விளக்கம் திருப்திகரமாக இல்லை. விஞ்ஞான பூர்வமான அவருடைய மனது கனவின் அற்புதத் தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாததை இது தெளிவாக காட்டுகிறது.)

கனவுகள் மறந்துபோதல்

கனவுகள் மறந்துபோவது, அவைகளை நாம் விளங்கிக்கொள்வதற்கு உள்ள தடைகளில் முதன்மையானதாக உள்ளது. முக்கியமான பகுதியை மறந்துவிட்டிருந்தால் கனவின் விளக்கம் ஊனமுள்ளதாகிவிடுகிறது.

கனவு கண்டு விழித்தவுடன் அதன் பகுதிகள் மட்டுமே ஞாபகமிருப்பது ஒரு வருத்தத்திற்குரிய விஷயமே. டூது முதலாவது. டூரண்டாவது, நினைவுக்கு வரும் பகுதிகளும் கனவில் கண்டமாதிரியே நினைவுகூறப்படுகின்றனவா என்றால் அதுவும் கிடையாது. அவைகளும் புகைசூழப்பட்ட தெளிவின்மையுடந்தான் உள்ளன.

நாம் சொல்லிக்காட்டுகின்ற கனவில் ஒரு ஒழுங்குத்தன்மை டூருந்தாலே அது நாமாக ஏற்படுத்திக்கொண்டதுதான் என்கிறார் ஸ்பிட்டர்.

டூந்த எச்சரிக்கைகளையெல்லாம் நாம் கனவுகளின் விளக்கத்தைப் பொறுத்தவரை புறக்கணித்தே வந்திருக்கிறோம். எனவே கனவுகளின் விளக்கத்தில், விடுபட்டுப்போன முக்கியமற்ற பகுதிகள்தான் மிகவும் முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

கனவுகள் மறந்து போவதற்கு முக்கியமான காரணம் ஒரு தடை உணர்வுதான். ஞாபகப்படுத்த வேண்டாம் என்ற எண்ணம்தான். விளக்க முடியாமலிருந்த என்னுடைய பல கனவுகளை நான் பல ஆண்டுகள் கழித்து புரிந்துகொண்டிருக்கிறேன். காரணம், மனத்தடைகள் அப்போது நீங்கிவிட்டிருந்தன என்பதுதான்.

கனவுகளை விளக்குவதென்பது ஒரு அமர்வில் முடிந்துவிடக்கூடிய காரியமல்ல. முயற்சியும், பயிற்சியும், பொறுமையும் தேவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதோடு, எல்லாக் கனவுகளையும் விளக்கிவிட முடியாது என்பதையும்



ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். முழுமையாக விளக்கப்பட்ட கனவுகளிலும் விளக்கப்படாத பகுதிகள் இருக்கும்.

மனத்தடை காரணமாகவே கனவுகள் மறந்து போகின்றன என்று சொன்னோம். எனில், தடைகளை மீறி கனவு ஏன் தான் உருவாகிறது? எப்படி?

இதற்கு பதில், தடைகள் நமது விழிப்பு நிலையில்தான் சக்தி மிகுந்தவையாக உள்ளன. அதனால்தான் ஞாபகப்படுத்திய பிறகும் கனவுகள் சிதைந்து நினைவுகூறப்படுகின்றன. ஆனால் தூக்க நிலையில் மனத்தடைகள் பலவீனமாக உள்ளன. அந்த நிலையில்தான் தடைகளை மீறி கனவுகள் பிறக்கின்றன.

விருப்ப நிறைவேற்றம்

கனவுகள் விருப்ப நிறைவேற்றங்களாக உள்ளன என்பதையும் பார்த்தோம். இந்த விருப்ப நிறைவேற்றங்கள் குழந்தைகளுடைய கனவுகளில் சிதையாமலும், வெளிப்படையாகவும், வளர்ந்தவர்களுடைய கனவுகளில் சிதைக்கப்பட்டும் மாறுவேஷத்திலும் வருகின்றன என்பதையும் அறிந்தோம்.

கனவில் வரும் இந்த விருப்பங்கள் எங்கிருந்து புறப்படுகின்றன என்ற கேள்வி முக்கியமானது. விழிப்பு நிலையில் நமக்கு ஏற்படும் ஒரு விருப்பம் ஆழ்மனதில் உள்ள விருப்பத்தோடு ஒன்றுபடும்போதுதான் அது விருப்ப நிறைவேற்றக்கனவை உருவாக்கும். மன நோயாளிகளை மன அலசல் செய்ததிலிருந்து நான் தெரிந்துகொண்டது இது. ஆனால் ஆழ்மன விருப்பத்தின் பங்கு அதில் உள்ளது என்று நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாதவாறுதான் கனவுகள் இருக்கும். அந்த ஆழ்மன விருப்பங்களோ குழந்தைப்பருவ விருப்பங்களாக இருக்கும்.

விழிப்பு நிலையில் தீர்க்கப்படாத பிரச்சனைகள், கவலைகள், அனுமதிக்கப்படாமல் ஆழ்மனதிற்குள் தள்ளப்பட்ட, அமுக்கப்பட்ட விஷயங்கள் - இவை யாவும் நமது தூக்க

நிலையின் சிந்தனைகளாகி, கனவுகளாகப் பரிணமிக்கின்றன.

ஆழ் மனம்

மனதின் செயல்பாடு என்றாலே அது ஆழ்மனதின் செயல்பாடிதான். நமது வெளி மனத்தில் தோன்றும் எல்லா அலைகளும் ஆழ்மனத்திலிருந்து கிளம்புவதுதான். எல்லா வெளிமன விழிப்பு நிலைச் செயல்பாட்டிற்கும் முன்னதாக சின்ன அளவிலேனும் ஒரு ஆழ்மனச் செயல்பாடு உள்ளது.

கனவில் நம்மை வியக்க வைத்த பல செயல்பாடுகள் நம் ஆழ்மனதினுடையவே என்று இப்போது தெரியவருகிறது. ஆழ்மனதைப் பற்றிய உண்மையை அறிய வந்ததினால்தான், கடந்த காலத்தில், அதை அறிவதற்குமுன், கனவுகள் ஏற்படுத்திய பூதாகாரமான பிரச்சனைகள் இப்போது ஒரு பிரச்சனையாகவே இல்லை. நமது தூக்க நிலையில் மட்டுமின்றி, விழிப்பு நிலையிலும் ஆழ்மனமானது இயங்கிக்கொண்டேதான் உள்ளது.

கனவுகள் வருங்காலத்தை அறிவிக்கின்றன என்று பழங்காலத்தில் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையில் உண்மையே இல்லை என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது என்று தனது கனவுகளின் விளக்கம் நூலை முடிக்கிறார் ஃப்ராய்ட்.



அத்தியாயம் - 10

முற்றுப்புள்ளி

முற்றுப்புள்ளி வைப்பதற்கு முன் சில கேள்விக்குறிகளையும் ஆச்சரியக் குறிகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. ஃப்ராய்ட் தனது கனவுகளின் விளக்கம் என்ற நூலை எழுதி முடித்துவிட்டார். உலகத்தின் சிந்தனைப் போக்கையே மாற்றிய ஐந்து புத்தகங்களில் ஒன்றாக அது ஆகிப்போனது மட்டுமல்ல, இன்று வரை அது தனது தீவிரமான தாக்கத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். உளவியலிலும் இலக்கியத்திலும், குறிப்பாக ஆங்கில அமெரிக்க இலக்கியத்திலும் அது ஏற்படுத்திய தாக்கம் மகத்தானது. ஒரு ராட்சத ஆளுமையாக அவர் இன்று வரை இருப்பது உண்மை.

எனினும் அவருக்கு எதிரான விமர்சனங்கள் வராமலில்லை. அவர் காலத்திலேயே அவரோடு சேர்ந்து பணியாற்றிய யங் ( Carl Gustav Jung ) அவரிடமிருந்து பிரிந்து செல்ல நேரிட்டது. யங் ஃப்ராய்டைவிட முக்கியமான ஆளுமை. ஆனால் ஃப்ராய்ட் அளவுக்கு அவர் பிரபலமாகாதது துரதிருஷ்டமே. எரிக் ஃப்ரம் போன்ற சமூகவியலாளர்கள் ஃப்ராய்டை மிகவும் கடுமையாகவும் ஆதாரப்பூர்வமாகவும் எதிர்த்தனர்.

ஃப்ராய்டின் மிகமுக்கியமான பங்களிப்பு கனவுகள் விருப்ப நிறைவேற்றங்களாகச் செயல்படுகின்றன என்பது. அவருடைய முக்கியமான தவறு எல்லாப் பிரச்சனைகளுக்கும் அடிப்படைக்காரணம் செக்ஸ் என்று அவர் முடிவு கட்டியதுதான்.

அவர் அலசி ஆராய்ந்த மனங்களெல்லாம் மன நோயாளிகளுடைய மனங்கள். அவர்களுடைய பிரச்சனையை அவர் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் பிரச்சனையாகப் பார்த்துவிட்டார் என்பது அவர் மீது வைக்கப்படும் மிக முக்கியமான விமர்சனமாகும்.

மேலும் அவர் ஒரு பூர்ஷ்வா என்றும் அது அவருடைய அரிய கண்டுபிடிப்பின் மகத்துவத்தை சுருக்கிவிட்டதென்றும் எரிக் ஃப்ரம் கூறுகிறார். தாயை நோக்கிய குழந்தையின் பாலுணர்வு என்ற ஃப்ராய்டின் கோட்பாட்டை ஈடிபஸ் கதையை வைத்தே வெற்றிகரமாக மறுக்கிறார் எரிக் ஃப்ரம்.

அந்தக் கதையில் ஈடிபஸ் தன் தாயை மணக்கிறான். தாயை மோகிப்பதன் காரணமாக தந்தை வெறுப்பு ஏற்படுகிறது என்றும் அதற்கு ஈடிபஸ் காம்ப்ளக்ஸ் என்றும் ஃப்ராய்ட் பெயரிடுகிறார்.

ஆனால் மோகத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற எந்த ஒரு தீவிரமான உறவும் நிலையானதல்ல என்பதை கவனிக்க ஃப்ராய்ட் தவறுகிறார். மேலும் எந்த மனிதனுக்கும் - குழந்தையாயிருப்பினும் சரி, பெரியவனாயிருப்பினும் சரி, தாய்ப்பாசம் என்பது தவிர்க்க முடியாததும் இயற்கையுமாகும்.

குழந்தை பிறப்பதற்கு முன்பே தாயுடன் அது உறவு கொண்டதாயுள்ளது. தாயுள் பாதுகாக்கப்படுகிறது. வளர்க்கப்படுகிறது. பிறந்த பின்னும் குறிப்பிட்ட பருவம் வரும் வரை தன்னுடைய இருப்பிற்கு அது தாயின் பாலையும் அன்பையும் ஆபத்திலிருந்து



தன்னைக் காக்கின்ற அரவணைப்பையும் பெற்றுக்கொள்கிறது. தாயின்றி ஒரு குழந்தை தன்னை காத்துக்கொள்கின்ற தகுதியற்றது. உதவியற்றது.

எனினும் இது ஒரு குழந்தையின் நிலை மட்டுமல்ல. இந்த உதவியற்ற நிலையும் தற்காப்பின்மையும் நன்கு உடலும் அறிவும் வளர்ந்துவிட்ட, தன்னைச்சுற்றி, மனைவி, மக்கள், சமூகம், அரசு போன்றதைக் கொண்டிருக்கும் பெரியவர்களுக்கும் உரியதே.

இவ்வளவும் இருந்தும் வறுமை, நோய், துயரம் போன்றவற்றிலிருந்து தன்னைக் காக்கின்றவர் எவருமில்லாதவந்தான் மனிதன். இதே போன்ற ஒரு சூழ் நிலை, உதவியற்ற நிலை அவன் குழந்தையாயிருக்கும்போதே நேர்ந்திருக்கின்றது. அப்போது அவன் தாயே அவனைக் காத்தாள்.

எனவே, ஒரு குழந்தையப்போல் தன்னை பாவித்து, தன் பாதுகாப்பான வாழ்வுக்குரிய எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்கிற ஒரு தாயுறுவத்தை ஆழ்மனதில் அவன் மிகவும் நேசிப்பது, இப்படிப்பட்ட ஒரு நேசம் அவன் ஆழ்மனதில் கிடப்பது இயற்கையுமாகும்.

தந்தை வெறுப்புக்குக் காரணம் தந்தை ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு குடும்ப அமைப்பில் சுதந்திரம் இழக்கின்ற மகனுடைய வெறுப்பாக இருக்கலாம். ஈடிபஸ் கதையும் அதையே சுட்டலாம். ஏனெனில், ஈடிபஸ் தன் தாயை மணப்பது தற்செயலாக நடக்கிறதே ஒழிய, அது அவன் தாயை மோகிப்பதால் அல்ல. நாடகம் அப்படிச் சொல்லவில்லை. ஃப்ராய்டின் சிந்தனைக் குதிரைக்கு ஏற்கனவே பூர்ஷ்வா பட்டை போடப்பட்டு விட்டதால், தந்தை வெறுப்புக்கு தாய் மோகம் என்று தோன்றியிருப்பது ஆச்சர்யமுமல்ல.

எனவே, நம் தந்தை இறப்பதாக நாம் கனவு காணும்போது அது நம் ஆழ்மனதில் கிடக்கும் தாய் மோக உணர்வை வெளிப்படுத்துவதாக எண்ணி நாம் திடுக்குற வேண்டியதில்லை. எந்த ஒரு மேதையின் சிந்தனையும் தான் சார்ந்திருக்கிற வர்க்கத்தின் குணத்தால் பாதிக்கப்படுகிறது என்பதே உண்மை என்று வாதிடுகிறார் எரிக் ஃப்ரம் தனது The Greatness and Limitations of Freud என்ற நூலில். நிறைய கனவுகளுக்கான ஃப்ராய்டின் விளக்கம் மலையைப் பிடுங்கி எலியை விரட்டுகிற கதையாகவும் அவருடைய பண்டிதத்தையும் காட்டுவதாகவே உள்ளது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

எனினும் மனிதனுடைய ஆழ்மனதின் அதி இருட்டான பகுதிகளில் துணிச்சலாக டார்ச் அடித்துப் பார்த்தவர் சிக்மண்ட் ஃப்ராய்ட் என்பதை விழிகளை மூடும்போதெல்லாம் நாம் எண்ணிப்பார்த்தே ஆகவேண்டும்

(முற்றும்)





நன்றி : [நாகூர் ரூமி]

Visit : http://abedheen.wordpress.com/